ஆரம்பம்
சாயி கொம்

(விபரம் 27-ம் பக்கம்) Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 5 17 — 23 ஜூன் 1999 முழக்கம்: 231

Saji Com

தொடர்புகளுக்கு:
Tél: 06 80 27 70 57 Pub.

# ஐ.நா.தலையீட்டை சிறிலங்கா கோருகின்றது

## பிரபாகரன் - சந்திரிகா மௌனம்



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காவுக்குமான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தலையீடு ஏற்றுக் கொள்ளப்படலாம் என சிறிலங்காப் பாராளுமன்ற விவகார அமைச்சர் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

பி.பி.சி சிங்கள ஒலிபரப்புக்கு அளித்த பேட்டியில் இவ் அறிவிப்பை விடுத்த அமைச்சர் ஐக்கிய நாடுகள் சபை மத்தியஸ்த்துடனான பேச்சுக்கள், ஆயுதங்கள் கீழே போடாது கூட புலிகள் நடத்தலாம் எனக் கூறியுள்ளார்.

அமைச்சரின் இவ் அறிவிப்பானது சிறிலங்கா வானொலி ஊடாகவும் அரச சார்பு பத்திரிகை ஊடாகவும் இன்று மீள் பரப்புரை செய்தது, அண்மைக் காலம்வரை ஐ.நா. அல்லது அது போன்ற நிறுவனங்களின் நேரடி மத்தியஸ்த்துவத்தை நிராகரித்து வந்த சிறிலங்கா அரசு தற்போது மத்தியஸ்துவத்தை ஏற்றுள்ளது என்பது பல்வேறு ஐயங்களை ஏற்படுத்துகின்றது.

அமைச்சரின் அறிவிப்புத் தொடர்பாக பிற சிறிலங்கா அமைச்சர்களோ, ஜனாதிபதியோ கருத்து வெளியிடவில்லை. புலிகள் தரப்பிலிருந்தும் இவ் அறிவிப்புத் தொடர்பான அபிப்பிரா

(தொ 2ம் பக்கம்)



சுழல்காற்று - ரணகோசா-4 படையினரின் ஏககால நடவடிக்கைகள்

# பூநகரியில் முகாம் அமைக்கும் முயற்சி தோல்வி

* MI-17, MI-24 உலங்குவானூர்திகள் சேதம் * புலிகளின் கடுமையான பீரங்கி வீச்சு

சுழல்காற்று, ரணகோசா - 4 ஆகிய குறியீட்டுப் பெயர்களிலான பாரிய இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்காப் படையினர் கடந்தவாரம் மேற்கொண்ட பொழுதும், விடுதலைப் புலிகளின் பாரிய எதிர்ப்புக் காரணமாக தமது இலக்குகள் கைகூடாத நிலையில் தமது நடவடிக்கைகளை இராணுவத் தரப்பு இடைநிறுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பூநகரிப் பகுதியில் சுழல் காற்று என்ற குறியீட்டுப் பெயரிலான தரையிறங்கல் இராணுவ நடவடிக்கையினை உலங்கு வானூர்திகள் மூலம் சிறிலங்காவின் சிறப்புக் கொமாண்டோக்கள் மேற்கொண்ட போதும் விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதல் காரணமாக தமது MI-17, MI-24 ரக உலங்கு வானூர்திகள் சேதப்பட்ட நிலையில் படையினர் மீளவும் தமது நிலைகளுக்குத் திரும்பியுள்ளனர். சங்குப்பிட்டிப் பகுதியூடாக குடாநாட்டிற்கான இராணுவத் தொடர்பொன்றினை ஏற்படுத்துவதற்காக பூநகரிப் பகுதியில் முகாமொன்றினை அமைப்பதற்காகவே படையினர் இவ் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

ஆலங்கேணிக்கருகில் உள்ள காட்டுதல்லூர் பகுதியில் 10 உலங்குவானூர்திகள் மூலம் இத் தரையிறக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த வேளையில் விடுதலைப்புலிகள் தாக்குதல் அணிகள் அத்தரையிறக்கலுக்கு எதிராக தமது தாக்குதலை மேற்கொண்டனர். இதே வேளை கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் தாக்குதலை

(தொ 2ம் பக்கம்)

## புதுக்குடியிருப்புச் சந்தையில் விற்பனையாகும் ஆர்.பி.ஜி-ஏ.கே 47

புதுக்குடியிருப்புச் சந்தையில் ஆர்.பி.ஜி, ஏ.கே-47 ரக தன்னியக்க ஆயுதங்களின் மாதிரி அமைப்புக்கள் விற்பனை செய்யப்படுவதான செய்திகள் ஈழமுரசிற்குக் கிடைத்துள்ளன. வன்னியில் தற்பொழுது நடைபெற்றுவரும் போரெழுச்சி நிகழ்வுகளில் பெருமளவான பொது மக்கள் கலந்துகொள்வதால் அவர்களது பயிற்சிக்குத் தேவையான ஆயுத மாதிரி வகைகளுக்கும், கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்தே இவ் ஆயுத வகைகளின் மாதிரிகள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. தமக்குத் தேவையான ஆயுத மாதிரியினை மக்கள் வாங்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சாதாரணமாக மரக்கறிகள், மீன் என்பன விற்பனையாகும் புதுக்குடியிருப்புச் சந்தையின் வரலாற்றில் தற்போதைய காலகட்டம் மிகவும் வித்தியாசமானதென புதுக்குடியிருப்புவாசி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஈழமுரசின் பிரத்தியேகச் செய்தி)

## போராளிகள் நிற்கும் பிரதேசத்திற்கு படையை நகர்த்தும் துணிவற்றவன் எதிரி

- கேணல் தீபன் -

போராளிகள் நிற்கும் எந்தவொரு பிரதேசத்தையும் தனது படையினை நகர்த்தி ஆக்கிரமிக்கக்கூடிய துணிச்சல் சிறிலங்காப் படையினரிடம் இல்லை. மாறாக, போராளிகள் எங்கு இல்லையோ அந்த இடத்தைத்தான் தனது படைகளை நகர்த்தி ஆக்கிரமித்துக் கொள்கிறான். இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரதம தளபதிகளில் ஒருவரான கேணல் தீபன் தெரிவித்திருக்கின்றார். களமுனைக்கு போராளிகளுக்கென உலர் உணவுப் பொருட்களையும், பழவகைகளையும் எடுத்துச் சென்ற முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



மாணவர்களாகிய நீங்கள்

(தொ 2ம் பக்கம்)

## ஜேர்மனியில் இரு தமிழர்களுக்கு கடும்தண்டனை

(14.06.99)

ஜேர்மன் நீதிமன்றில் இரு ஈழத்தமிழர்களுக்கு ஒன்பதரை வருடம், எட்டு வருடம் சிறைத் தண்டனைகளை வழங்கியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து ஜேர்மனிக்குள் அகதிகளை கடத்திவரும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 38, 25 வயதுடைய இரு ஈழத் தமிழர்களை ஸ்ருட்காட் நீதிமன்றம் கடும் தண்டனைக்கு உட்படுத்தியுள்ளது. இதுவே ஆட்கடத்தல் நடவடிக்

(தொ 2ம் பக்கம்)

## ஐரோப்பிய தேர்தல்களில் இடதுசாரிகள் தோல்வி

பிரான்சில் பஸ்குவா மீள தேர்வாவார்; ஜேர்மனியில் எதிர்க்கட்சிகள் வெற்றி; ரொனி பிளேயரின் செல்வாக்கு வீழ்ச்சி

ஐரோப்பிய பாராளுமன்றத்தில் செல்வாக்குப் பெற்றுவந்த இடதுசாரிகள் தற்போது இடம்பெற்று முடிந்துள்ள தேர்தல்களில் தோல்வியைத் தழுவியுள்ளன. மிதவாத வலதுசாரிகள் ஜேர்மன், இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் வெற்றிபெற்றுள்ளனர்.

பிரான்சின் பிரதமர் லையனல் ஜொஸ்பன் தலைமையிலான இடதுசாரி கட்சி வெற்றிபெற்றுள்ளது. ஜனாதிபதி ஜக் சிராக்கின் ஆர்.பி.ஆர் படுதோல்வி கண்டுள்ளது. சிராக்கின் முன்னைய சகா பஸ்குவாவின் புதிய அணி குறிப்பிடத்தக்க வெற்றி

(தொ 2ம் பக்கம்)

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
Kumars Shop
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00

Singapore
Exchange Co.
38, Rue Saint Quention
75010 Paris. M°: Gare du Nord
Tel: 01 48 74 48 21 / 01 44 53 96 87
Fax: 01 49 70 06 32

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651
டென்மார்க்:
T. சுரேஷ்காந்த்
Møller vej - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302586
சுவிஸ் மக்கள் அவை:
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16
லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஜெமி - Tel: 07887874177
இத்தாலி:
மகேஸ்வரன்
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527
நெதர்லாந்து:
துஷிகேசுரட்னம்
Tel: 076 5425804
அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:ccsydney@one.net.au

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## பூநகரியில்...

மேற்கொள்ள . கிளாலிப் பகுதியில் இருந்து ஒரு பிரிவுப் படையணியும், பரந்தன் பகுதியில் இருந்து இன்னொரு இராணுவ அணி தாங்கிகள் சகிதம் பூநகரியை நோக்கி நகர்வினை மேற்கொண்டனர். இவ்வேளை புலிகளின் கடுமையான தாக்குதல்கள் ஒவ்வொரு முனையிலும் மேற்கொள்ளப்பட்டது. கிட்டு பீரங்கிப் படையணி முன்னேறத் தொடங்கிய படையணி மீது ஆட்டிலெறித் தாக்குதலையும், மோட்டார் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். படையினரும் கிளாலி, ஆனையிறவு, தென்மராட்சி பளை நிலைகளிலிருந்து கடுமையான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டனர். பூநகரியைக் கைப்பற்றும் நோக்கோடு படைத்தரப்பினர் தீவிரமாக நகர முயல விடுதலைப் புலிகளும் தமது தாக்குதலைத் தீவிரப்படுத்தினர். அதிகாலை ஆரம்பித்த இம் மோதல்கள் நண்பகல் தாண்டிய பின்னரும் தொடர்ந்தது. ஆயினும் புலிகளின் நடவடிக்கைக்கு ஈடுகொடுக்கமுடியாது படையினர் தமது நடவடிக்கைகளை இடைநிறுத்தி பின்வாங்கினர். இத் தாக்குதல்களில் இரு அதிகாரிகள் உட்பட 25 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். 60 படையினர் காயமடைந்தனர். படையினரின் ஆயுத தளபாடங்கள் சிலவற்றையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர். இந்நடவடிக்கைகள் தொடுத்த தோல்வியினால் ரணகோஷ 4 என்று குறியீட்டுப் பெயரிலான இராணுவ நடவடிக்கை ஒன்றினை பல்லமடுப் பகுதியில் இருந்து இராணுவத் தரப்பினர் தொடங்கி பூநகரிப் பகுதியை நோக்கி நகர்ந்து வருகின்றனர்.

இவ் இராணுவ அணிகள் தற்பொழுது விடத்தல்தீவில் நிலைகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. கடந்த 6ம் திகதி இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கையின்போது புலிகளின் பாரிய இராணுவ நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஜேர்மனியில்...

கைக்கு ஜேர்மனியில் வழங்கிய அதிகூடிய தண்டனை என ஸ்ருட்காட் எல்லைக்காவல் பொலிசார் கூறியுள்ளனர்.

நாடுகடத்தப்பட்ட இரு தமிழர்களும் 1997, 1998 ஆண்டுகளில் 250 தமிழர்களை 500 டொலர்கள் கட்டணத்தில் செக் குடியரசில் இருந்து கடத்தி வந்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. செக்குடியரசின் பொலிசாரால் இவர்கள் கடந்த வருடம் கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வருட ஆரம்பத்தில் இவர்கள் சர்வதேச கைது உத்தரவிற்கு அமைய ஜேர்மனிக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களது சாகக்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் பலர் துருங்கன் (Thurugen) நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விரு ஈழத் தமிழர்களும் நீதிமன்ற விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் அதிகூடிய தண்டனையை பெறுவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஐ.நா. தலையீட்டை...

யங்களை வெளியிடப்படவில்லை. இவ் அறிவிப்பு மூலம் தமிழர்களது கோரிக்கைக்கு ஐ.நா. சபையின் தலையீட்டுக்கான சந்தர்ப்பம் எழலாம் என இன்று இந்தியப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

இதேவேளையில் சிறீலங்கா இராணுவம் வன்னியில் புதிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் எனக் கருதப்படுவதால் சிறீலங்கா அரசின் அறிவிப்பு பெரும் திசைதிருப்பும் முயற்சி என ஒரு கொழும்பு ஆய்வாளர் ஈழமுரசிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## போராளிகள்...

களமுனைக்கு வந்தது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியினையும் எமது போராளிகளுக்கு புதிய உத்வேகத்தையும் கொடுத்துள்ளது. நாங்கள் இன்று எதிரிகளைத் தடுத்து நிறுத்தி நீண்ட பாதுகாப்பு வேலிகளை அமைத்துள்ளோம். போராளிகள் நிற்கும் பகுதிகளை நோக்கி எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ள முடியாதவாறு எங்களின் இராணுவ ரீதியான போராற்றல் வளர்ந்துள்ளது. எதிரி எமது பாதுகாப்பு வேலியை தாண்டி வரமுடியாத அளவிற்கு நாம் பலமடைந்துள்ளோம். இனி எதிரிகளை அடித்து விரட்டுவது தான் எமது வேலை. எமது ஒவ்வொர் நகர்வும் இழந்த பிரதேசத்தினை மீட்பதாகத்தான் அமையும்.

இந்த போரில் நிச்சயம் நாங்கள் வெல்வோம். எங்கள் படையணிகளை பெருக்குவதன் மூலம் எதிரியின் ஒவ்வொரு ஆக்கிரமிப்பையும் தடுக்க முடியும். இன்று தேசியத் தலைவர் அவர்களால் திட்டமிட்டு நடாத்தப்படும் எந்தவொரு இராணுவ நகர்வும் தமிழீழத்தை நோக்கிய தாகத்தான் அமைந்துள்ளது. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

அவரது உரையை அடுத்து தளபதி லோறன்ஸ் அவர்கள் உரையாற்றுகையில், சிறீலங்கா இராணுவம் ... ன் ஜனாதிபதி சந்திரிகா எமது மக்களிடம் ஓட்டுமொத்தமாக போரைத் திணித்துள்ளார். இதனை எதிர்கொள்ளும் விதத்தில் மக்கள் தயாராகி வருகின்றனர். மக்கள் ஒன்று சேரும் பொழுது எமக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

இச் சந்திப்பின்போது இன்றைய களநிலைமைகள் குறித்தும் களத்தேவைகள் குறித்தும் சிறுத்தைப் படையணியின் மகளிர் தளபதி சுகந்திரா, கல்விக்குழு கலைமுனை போராளி நிலவன் மற்றும் புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோரும் உரையாற்றினர்.

# மரண அறிவித்தல்



மண்ணுலகில்: 27.11.1921

விண்ணுலகில்: 13.06.1999

## திரு. வஸ்தியாம்பிள்ளை யேசுநாயகம்

திரு. வஸ்தியாம்பிள்ளை யேசுநாயகம் அவர்கள் 13.06.99 இல் இறைவனடி சேர்ந்தார். இவர் யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும், பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்தார்.

இவர் காலஞ்சென்ற திருமதி ஞானசம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற திரு. திருமதி. வஸ்தியாம்பிள்ளை ஞானசாவின் சிரேஷ்ட புத்திரனும்,

டொறத்தி (பிரான்ஸ்), அமலறாணி (பிரான்ஸ்), மெள்சிஸ் (கனடா), அஞ்சலோ (பிரான்ஸ்), குகதாஸ் (இத்தாலி), ஜசிந்தா (பிரான்ஸ்), நாதன் (பிரான்ஸ்), பினண்மனா (பிரான்ஸ்), நொயலா (பிரான்ஸ்), மக்மிலன் (பிரான்ஸ்), ரமேஷ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரனி (பிரான்ஸ்), மில்பிறெட் (கனடா), புஸ்பம் (பிரான்ஸ்), சாந்தினி (இந்தாலி), சபாரட்ணம் (பிரான்ஸ்), சிவகுருநாதன் (பிரான்ஸ்), இளங்கோ (பிரான்ஸ்), றூபினி (பிரான்ஸ்), கீதா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும்,

நிலாந்தினி, றெனால்ட், பீற்றர் .லெஸ்லி, கிறிஸ்ரினோல்ட், ஜனின், நிரஞ்சன், ஜனார்த்தனன், யாழினி, ஜெனிபர், ஜனனி, றெமி, றொஸ்னி, ஞானசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.06.1999 அன்று காலை 9 மணிக்கு Maison Funeraire de Gonesse இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் காலை 10 மணிக்கு Garges les gonesse இல் உள்ள St. Geneviève ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் Cimetière de Garges சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*தகவல்:*
*பிள்ளைகள், மருமக்கள் (பிரான்ஸ்)*

*தொடர்புகட்கு:*
*0134389183 / 0139931752*

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஐரோப்பிய..

பெற்றுள்ளது. சுற்றுச்சூழலை பிரகடனப்படுத்தும் கிரீன்கட்சி பிரான்சில் அதிவேகமாக ஆதரவைப்பெற்று வருவதை தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன.

இத்தாலியில் வெற்றிபெற்றுள்ள வலதுசாரிகள் இடதுசாரிக்கூட்டணியை பதவி விலகுமாறு கோரியுள்ளன. ஜேர்மனியில் புதிதாக பதவியேற்ற இடதுசாரி சமூக ஜனநாயகக் கட்சி ஐரோப்பிய தேர்தலில் 31.4 வீத வாக்குகளை பெற்றுள்ளது. 47.8 வீத வாக்குகளை பெற்று வலதுசாரிகள் ஜேர்மனிய ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

இங்கிலாந்தில் தொழிற்கட்சி 28 வீத வாக்குகளை பெற்றுள்ளது. எதிர்க்கட்சியான கன்சவேட்டிவ் கட்சி 36 வீத வாக்குகளை பெற்று பெரும்வெற்றி ஈட்டியுள்ளது. இவ் ஐரோப்பிய தேர்தல்களில் பொது ஐரோப்பிய நாணயம், சந்தை என்பவை மீதான பல்வேறு முரண்பட்ட கருத்துக்களும், கொசோவோ விடயத்தில் ஆளும் கட்சிகள் கடைப்பிடித்த அணுகுமுறையும் மக்களினால் கூர்மையாக அவதானிக்கப்பட்டதாக கருதப்படுகின்றது.

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New-york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# முறக்கொட்டாஞ்சேனையில் படை - பொலிஸ் நாடகம்

## கப்டன் கைதாம்?

(12.06.99)

மட்டக்களப்பு மாவட்டத்தின் முறக்கொட்டாஞ்சேனையில் உள்ள சிறீலங்கா படைமுகாமின் பொறுப்பதிகாரி எவ்வித காரணமும் இல்லாது முகாமில் இருந்தவாறு சுற்றாடலை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்ததன் காரணமாக; கந்தசாமி விக்னேஸ்வரி என்ற 23 வயதுப் பெண் மரணமானார். இச் சம்பவம் கடந்த 6ம் திகதி இடம்பெற்றது. இச் சம்பவத்தை அடுத்து சிறீலங்கா பொலிசார் இப் பொறுப்பதிகாரியை கைது செய்து மட்டக்களப்பு நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தி உள்ளனர். இவரை எதிர்வரும் 23ம் திகதி வரை காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிசாரின் இந் நடவடிக்கை, சர்வதேசத்திற்கு காட்டப்படும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றே தெரியவருகின்றது. இவ் இராணுவ அதிகாரி பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில், தனது துப்பாக்கியை துப்பரவு செய்வதற்காக அதிலிருந்த ரவைகளை தீர்த்ததாகவும், அதிலொன்றுதான் தவறுதலாக இப்பெண்மணியை பலியாக்கியதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் இவ் அதிகாரி எட்டுத் தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகச் சாட்சிகள் தெரிவித்துள்ளன.

பலியான பெண்ணின் மரண விசாரணையைத் தொடர்ந்து இவ் இராணுவ அதிகாரியை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து இக் கைது நிகழ்ந்ததாக தெரியவருகின்றது.

# தமிழ்க் குழுக்களுக்கு புலிகள் அனுப்பிய பிரசுரங்கள்

(12.06.99)

மட்டக்களப்பில் உள்ள ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளொட் உட்பட்டதான தமிழ்க் குழுக்களுக்கு விடுதலைப்புலிகள், 'அதர்மம் என்றுமே நிலைத்ததில்லை' என்ற தலைப்பிலான பிரசுரம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். அப் பிரசுரத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தார்மீகம் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

எமது தாயகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அறப்போரை தயவுசெய்து புரிந்துகொள்ளுமாறு நாம் பலமுறை கூறியிருந்தோம். இப் போரிலான தர்மமும் சத்தியமும் எம் மக்களின் பக்கம் உள்ளதென நாம் பலமுறை தெளிவுபடுத்தியிருந்தோம். ஆயினும் நீங்கள் அரச படையினரின் செயற்பாட்டில் மயங்கியிருந்தீர்கள். சிறீலங்கா படையினரின் அட்டூழியங்களையும் 'மிஞ்சி' இருந்தீர்கள். ஒரு மானசீக தமிழனாய் இரு என நாம் குரல்கொடுத்த போதெல்லாம், ராசிக்குழு எனக் கூறிக்கொண்டு எம் மக்களை துன்பப்படுத்தினீர்கள். விடுதலைக்கு ஆதரவு கொடுத்தவர்களையும் காட்டிக் கொடுத்தீர்கள். ஒருசில போராளிகளை கொன்றுவிட்டு எக்காளமிட்டு மகிழ்ந்தீர்கள். ஆனால் இது நிலைத்ததா என சிந்தித்து பாருங்கள். அதர்மம் என்றுமே நிலைப்பதில்லை. அதர்மமும் அட்டூழியமும் அழிவது தான் நியதி. அவ்வாறுதான் வரலாறு எழுதப்படுகின்றது. ஆகவே தமிழினத்திற்கு எதிரான துரோகக்குழுவில் இருக்கின்ற இளைஞர்களே நீங்கள் சாதிக்கப்போவதுதான் என்ன? அர்த்தமற்ற அவலச்சாவினை நோக்கி சென்றுகொண்டிருக்கும் நீங்கள் உங்கள் அடாவடித்தனங்களுக்கெல்லாம் தலைமை வகித்தவருக்கு நேர்ந்த கதியை எண்ணிப்பாருங்கள் உங்களின் துரோகச் செயலுக்காக உங்களைத்தேடி மரணம் ஏதோ ஒரு வடிவில் வந்தே தீரும் என்பதை இச்சம்பவம் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழர் எவ்வாறு வாழக்கூடாது என்பதற்கு சிறந்த உதாரணம் ராசிக்கின் மரணம். எனவே இதனை ஒரு படிப்பினையாக கொண்டு மீண்டும் கூறுகின்றோம், சிறீலங்கா படையுடன் இணைந்து துரோகச் செயல்களைப்புரிவதை விடுத்து அங்கிருந்து வெளியேறுங்கள். இவ்வாறு அப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொண்டர் நிறுவன பிரதிநிதிகளுக்கு புலிகளின் அறிவுரை

(12.06.99)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களின் புனர்வாழ்வு பணிகளுக்கென இயங்கிவரும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவன அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலர் மக்களுக்கான நிதியை கையாடல் செய்வது குறித்தே விடுதலைப் புலிகள் அறிவுரையை தெரிவித்துள்ளனர். மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடும் இத் தொண்டு நிறுவனங்கள் மக்களின் நலன் கருதி தமது பணிகளை மேற்கொள்ள தவறுவார்களேயானால் அவர்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விடுதலைப் புலிகளின் மட்டு— அம்பாறை அரசியல் பொறுப்பாளர் விசு தெரிவித்துள்ளார். மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்தவேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசடித்தீவில் இச் சந்திப்பு நடந்தது.

மட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் அரசசார்பற்ற தொண்டர் அமைப்புக்கள் பொதுமக்களின் புனர்வாழ்வுப் பணிக்கென சர்வதேச நிதியைப் பெறுகின்ற போதிலும், குறைந்தளவான நிதியை பொதுமக்களுக்காக பயன்படுத்திவிட்டு மிகுதியை தாம் சுருட்டிக்கொள்ளும் நிலையே நிலவிவருகின்றது. சில தொண்டர்ஸ்தாபனங்கள் இணைந்து மிகக்குறுகிய காலத்திற்கு இடையிலேயே இலட்சாதிபதிகளாக மாறியமை இதற்கு எடுத்துக்காட்டு. ஏதாவது பெயரில் தொண்டர் நிறுவனம் ஒன்றை அமைத்து, அதற்கு சர்வதேச உதவியை பெற்றுக்கொண்டு சிறிய தொகையை மக்களுக்கு காட்டி பெரிய தொகையை தாம் மடக்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் கூட சில நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந் நிலைமைகளை தவிர்ப்பதற்காகவும் தொண்டர் அமைப்புக்களின் ஊழலை ஒழிப்பதற்காகவுமே விடுதலைப் புலிகள் இச் சந்திப்பினை மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது. மட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் சுமார் 50 தொண்டர் அமைப்பு பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

# 'நம்பி ஏமாந்துவிட்டோம்' - ஆளுநரிடம் ஓலமிடும் தமிழ்க்கட்சி

(12.06.99)

திருமலையில் உள்ள சிங்கள பெரும்பான்மை வர்த்தகர்களின் அழுத்தத்தின் பேரில் நகரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சந்தையினை திறப்பதற்கு படையினர் தடைவிதித்தனர். ஆனால் திருமலை நகரசபையின் தலைவரான சூரியமூர்த்திக்கு, புதிய சந்தையை திறப்பதற்கான ஏற்பாடுகளை செய்துதருவதாக வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா ஆறு மாதங்களுக்கு முன்னதாக உறுதி வழங்கியிருந்தார். ஆனால் ஆறு மாதங்களாகியும் அவ்வாறு எதுவும் நடக்காததால் ஆளுநர் அளித்த உறுதிமொழியை நினைவுபடுத்தி சூரியமூர்த்தி அவர்கள் ஆளுநருக்கு ஒரு கடிதத்தை எழுதியுள்ளார். அக் கடிதத்தில் ஆறு மாதமாகியும் அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி புதிய சந்தையை திறப்பதற்காக நடவடிக்கை எதனையும் நீங்கள் மேற்கொள்ளவில்லை என குறிப்பிடப்பட்டதுடன் வாக்குறுதியை நம்பி ஏமாந்ததுபோல இந்த விடயத்திலும் நாம் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என நாம் அஞ்சுவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி புதிய சந்தையானது 60 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு படையினரின் தடையுத்தரவால் ஒன்றரை வருடங்களுக்கு மேல் பூட்டப்பட்ட நிலையில் உள்ளது.

# யாழ். நகரில் படையினரின் திடீர் நடவடிக்கை ஐவரைக் காணவில்லை

(12.06.99)

கடந்த சில நாட்களாக யாழ். நகரில் பொதுமக்கள் காணாமல் போவது மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த 9ம் திகதியில் இருந்து 11ம் திகதி வரை ஐந்து பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர். இவர்களில் சிலர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னர் வீடு திரும்பாதவர்களாவார்கள். நாகராசா சிவபாதம்(79), கந்தையா நல்லையா(70), இராசரத்தினம் சத்தியசீலன், சின்னராசா அன்ரனிராசா (35), பொ. பேரின்பநாதன் ஆகியோரே இதுவரை வீடு திரும்பாதவர்களாவர். இதில் கந்தையா நல்லையா என்ற முதியவர் யாழ். ஆயர் இல்லத்தில் பணிபுரிபவர். காலை பணிக்காக சென்ற இவர் இதுவரை வீடு திரும்பவில்லை. ஆனால் ஏனைய நால்வரையும் படையினரே விசாரணைக்கென அழைத்துச் சென்றதாக சாட்சிகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் பற்றியோ அல்லது மேலதிக விபரங்கள் பற்றியோ படையினர் எவ்வித விபரங்களையும் தெரிவிக்க மறுத்துள்ளனர். மீண்டும் ஆரம்பித்துள்ள படையினரின் நடவடிக்கையால் குடாநாட்டு மக்களிடையே பீதி அதிகரித்துள்ளது.

# கோயில் குளத்தில் புளொட்முகாம் சுற்றிவளைப்பு

வவுனியாக் கோயில்குளம் பகுதியில் உள்ள புளொட் குழுவினரின் தொடர்முகாம்கள் பல சிறீலங்கா இராணுவத்தினரால் சுற்றிவளைத்து சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இச் சோதனையின் முடிவில் 18 ஆயுதங்களை இராணுவத்தினர் அங்கிருந்து எடுத்துச்சென்றுள்ளனர்.

கடந்த 9ம் திகதி காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே இச் சோதனைகள் நடாத்தப்பட்டுள்ளன. கடந்த சில வாரங்களாக வவுனியாவில் ரெலோ குழுவினருக்கும், புளொட்டிற்கும் இடையே மோதல்கள் நடைபெறுவது தெரிந்ததே.

# தமிழர்கள் என நினைத்து சிங்களவர்களை சுட்டுக்கொன்ற சிப்பாய்கள்

(12.06.99)

பொலநறுவை மாவட்டத்தின் சூரியவெத காட்டுப்பகுதியில் வேட்டையாடச்சென்ற சிங்களவர் இருவரை சிறீலங்கா சிப்பாய்கள் சுட்டுக் கொன்றுள்ளனர். தமிழர்கள் என்று நினைத்தே படையினர் இவர்களை சுட்டுக் கொன்ற போதிலும் பின்னர் சடலங்கள் அடையாளம் காணப்பட்டபோது இவர்கள் இருவரும் வெலிக்கந்தைப் பகுதியைச் சேர்ந்த சிங்கள கிராமவாசிகள் என தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னரும் இக் காட்டுப்பகுதியில் விறகுவெட்டச் சென்ற சில தமிழர்களை படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர். தடைசெய்யப்பட்ட சூரியவெத காட்டுப்பகுதியில் நடமாடியதன் காரணமாக விடுதலைப் புலிகளாக இவர்கள் இருக்கலாம் என நினைத்தே படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக வெலிக்கந்தை பொலிசார் தெரிவித்துள்ளனர்.


# விற்பனை முகவர்கள் தேவை

ஜெர்மனி இன்ரகெயர் ஸ்தாபனத்திற்கு ஐரோப்பா எங்கும் விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உங்களுடன் தொடர்புகொள்ளும் வாடிக்கையாளர்களின் கொள்வனவுக் கட்டளைகளை ஏற்று அவர்களது முகவரி விபரங்களை எமக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைத்தால் போதுமானது. தகுந்த கமிஷன் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
Intercare Handels GmbH
Münster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349
(நாம் தமிழ் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
Dr. Lawrie /
Dr. Nandakumar
Tel: 0181 5216338
Mobil: 079 30471356



Pub. Ge23002

# மன்னார் காட்டுப்பள்ளியில் குடிமகன் சுட்டுக்கொலை

மன்னார் காட்டுப்பள்ளிப் பகுதியில் சிறிலங்காப் பொலிசார் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பல்லவராயன்கட்டைச் சேர்ந்த வீரபாகு கனகலிங்கம் என்ற 33 வயதானவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவருடன் கூடச்சென்ற இன்னொருவரும் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார். வன்னியிலுள்ள தமது குடும்பத்தினருக்கு உணவுப் பொருட்களைக்கொண்டு சென்றபோதே இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஆனால் பொலிசாரோ சுட்டுக்கொல்லப்பட்டவரிடமிருந்து 14,000 தீப்பெட்டிகள் அடங்கிய ஐந்து மூடைகளும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் சம்பவம் நடந்த இடத்திற்கு விஜயம் செய்தார். அத்துடன் சுட்டுக்கொல்லப்பட்டவரது சடலத்தை மரணவிசாரணைக்கு அனுமதிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

## செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்படும்போது சர்வதேச அமைப்புக்கள் கண்காணிப்பு ?

செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்படும்போது அதனை மூன்று சர்வதேச அமைப்புக்கள் கண்காணிக்க ஏற்பாடு செய்யவுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. இம் மாதம் 16ம் திகதி இப் புதைகுழிகளைத் தோண்டும் வேலைகள் ஆரம்பமாகும் என முன்னதாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே. இப் புதைகுழிகள் தோண்டப்படும்போது அதனை மேற்பார்வை செய்யவும் அதன் பின்னர் இடம்பெறவுள்ள சட்ட வைத்தியப் பரிசோதனைக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை, ஆசிய மன்றம், மனித உரிமைகளுக்கான வைத்தியர் சங்கம் என்பன தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதற்கென தேவையான நிபுணர்களை அனுப்பிவைக்கவும் இம்மூன்று அமைப்புக்களும் இணங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

## பொறிவெடியில் சிக்கிய தமிழ்ப்பெண் மீதும் சிங்களக் காடையர் பாலியல் வல்லுறவு

(13.06.99)

சிறிலங்காவின் குலேவல பகுதியில் ஆறு பிள்ளைகளின் அன்னையான தமிழ்ப் பெண் ஒருவர் மீது சிங்கள காடையர்கள் நால்வர் மிகக் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவினைப் புரிந்துள்ளனர். இவ் வல்லுறவானது, அப் பெண் பொறி வெடியொன்றில் சிக்கி படுகாயமடைந்திருந்த வேளையில் இடம்பெற்றுள்ளது.

இக்கொடூரச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, சம்பவதினத்தன்று இப் பெண் தனது பிள்ளைகளுடன் வீட்டில் இருந்துள்ளார். அவரது கணவர் தனது வயலுக்கு அவ்வேளை காவலுக்கு சென்றிருந்தார். இந்தச் சமயம் இவரது வீட்டிற்கு வந்த நான்கு சிங்களக் காடையர்கள் இவர் மீது பாலியல் வல்லுறவினை மேற்கொள்ள முனைந்துள்ளனர். தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கைக்குழந்தையையும் தூக்கிக்கொண்டு இவர் தனது வீட்டிலிருந்து தப்பி ஓடியுள்ளார். சிங்களக் காடையர்களும் அவரைத் துரத்திச் சென்றுள்ளனர்.

இப்பெண்மணி காட்டினூடாக ஓடிச்சென்று கொண்டிருந்தவேளை பொறிவெடி ஒன்றில் சிக்கிப் படுகாயமடைந்து விழுந்துவிட்டார். துரத்திச் சென்ற காடையர்கள் படுகாயமடைந்த நிலையில் துடித்துக் கொண்டிருந்த அப்பெண்மணியை அவரது வீட்டிற்கே தூக்கிக்கொண்டு வந்து பிள்ளைகளின் முன்னிலையிலேயே மிகக் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவினை மேற்கொண்டுள்ளனர். இவ்வேளை அங்கு வந்த அவரது கணவரும் இக் காடையர்களால் பலமாக தாக்கப்பட்டுள்ளார்.

இரவு எட்டு மணியளவில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இக்கொடுமையைப் புரிந்த நான்கு காடையர்களும் மது போதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பாக இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். பாதிப்பிற்குள்ளான பெண் தற்போது குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.



நன்றி: தினக்குரல்

## ராஜபக்சவிற்கு கடுமையான பாதுகாப்பு 15ல் யாழ். கொண்டுசெல்ல ஏற்பாடு

(13.06.99)

கிருஷாந்தி பாலியல் வல்லுறவு கொலைவழக்கின் முதலாம் எதிரியான சிப்பாய் சோமரத்ன ராஜபக்சவை எதிர்வரும் 15ம் திகதி விசேட விமானத்தின் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் சட்டமா திணைக்களம் தெரிவித்துள்ளது. செம்மணி புதைகுழிகள் தோண்டும் பணிகள் 16ம் திகதி ஆரம்பமாகும்வேளை, ராஜபக்ச யாழ்ப்பாணத்தில் பலத்த பாதுகாப்புடன் தங்க வைக்கப்படுவார் எனவும் இத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 16ம் திகதி யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் ராஜபக்ச, அதன் பின்னர் புதைகுழி இருக்கும் பகுதிக்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படுவார். பின்னர் புதைகுழிகளை இவர் இனம்காட்டும் வேளையிலும் இவருக்கு கடுமையான பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் தெரியவருகின்றது. இவருக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான அனுமதியை சிறிலங்காவின் நீதியமைச்சு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ராஜபக்சவின் மனைவிக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்குமாறு சிறிலங்காவின் தேசிய மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. ராஜபக்சவை செம்மணிக்கு செல்ல அனுமதித்தால் மனைவி மற்றும் பிள்ளைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனத்தெரிவித்து மிரட்டல் கடிதங்கள் ராஜபக்சவின் மனைவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை அடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## முருங்கனில் பொலிசார்மீது தாக்குதல் இருவர் பலி

கடந்த 11ம் திகதியன்று முருங்கன் பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு சிறிலங்காப் பொலிசார் பலியாகியுள்ளனர். மேலும் மூவர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

காலை 11 மணியளவில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் விடுதலைப் புலிகளே என பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளதுடன் தமது அணி ரோந்துசென்ற வேளையிலேயே இத்தாக்குதல் நடைபெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளது. படுகாயமடைந்த பொலிசார் மூவரும் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பிக்குவிடம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின்

சிறிலங்காவின் கோமாரமைப் பகுதியில் வசித்துவரும் பௌத்த பிக்கு ஒருவரிடமிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளதாக சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இப் பிக்குவின் வதிவிடத்திலிருந்து கருச்சிதைவுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் குறிப்பிட்டுள்ளது. மாயாஜால மாந்திரீக வேலைகளைச் செய்து மக்களை ஏமாற்றி அவர்களுக்கு போதைப்பொருளினை இப் பிக்கு விற்றுவருபவர் எனவும் தெரியவருகின்றது.

## மாவடிவேம்பில் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

(13.06.99)

மட்டு வந்தாறுமூலையில் உள்ள மாவடிவேம்பு பகுதியில் தம்பிப்பிள்ளை அரசரட்ணம் என்ற குடும்பஸ்தர் இனம் தெரியாதவர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர், தனது வீட்டிற்கு அருகே நிறுத்தியிருந்த உழவு இயந்திரப் பெட்டியில் தூங்கிக்கொண்டிருந்த வேளையிலேயே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 9ம் திகதி இரவு பத்து மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இக் கொலையினை இவரது மருமகன் முறையான ஒருவரே மேற்கொண்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கொலையுண்டவரின் மகன் தெரிவித்துள்ளார்.

## புல்மோட்டை முஸ்லீம் பகுதிகளில் பொலிசார் ஏவிய மோட்டார்

புல்மோட்டைப் பகுதியில் உள்ள முஸ்லீம் பகுதிகளை நோக்கி சிறிலங்காப் பொலிசார் மோட்டார் குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதன் காரணமாக மூவர் காயமடைந்துள்ளதுடன் அப் பகுதிகளில் பதட்டநிலையும் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களில் பெரும்பாலானோர் தமது வதிவிடங்களை விட்டு வெளியேறி பள்ளிவாசல்களில் தஞ்சமடைந்துள்ளனர். இந்த நிலைமையை அடுத்து முஸ்லீம்களின் பதட்ட நிலைமையைத் தணிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ், பொலிஸ்மா அதிபரை கேட்டுள்ளதுடன், இச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடாத்தப்படவேண்டும் எனவும் கோரியுள்ளது.


**தமிழ்ப் பெண்கள் அமைப்பு பிரான்ஸ்**

நடாத்தும்

**தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களும் - தீர்வுகளும்**

(கலந்துரையாடல்)

காலம்: 20.06.1999 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 10.30 மணி

இடம்: தமிழ்ச்சோலை மண்டபம்

**Maison pour Tous**

**111, Av. Pizza Mont Est, 93160 Noisy le Grand.**

Noisy le Grand பகுதி வாழ் அனைத்து தமிழ்ப் பெண்களையும் உரிமையுடன் அழைக்கின்றோம்

தமிழ்ப் பெண்கள் அமைப்பு - பிரான்ஸ் Tel: 01 40 31 63 62

**PERLYN TOURS**

40 Kgs பொருட்களை வரியின்றி இலவசமாக கொண்டு செல்ல நீங்கள் நாடவேண்டிய இடம்!

விமான பயணச்சீட்டு பெறுவோருக்கு இன்னுமோர் அரிய சந்தர்ப்பம்!!

| | | | |
|---|---|---|---|
| Colombo | 790sfr | Toronto | 840sfr |
| Chennai | 950sfr | Newyork | 499sfr |
| Singapore | 950sfr | London | 195sfr |
| Bangkok | 850sfr | | |

எம்மிடம் உலகளாவிய பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்

Perlyn Tours
Limmatstrasse -213
8005 zürich
Tel - 01/440 71 15 or 01/ 413 18 93
Fax - 01/440 71 17 or 01 / 433 17 93
E-Mail: Perlyn@datacomm.ch

Pub. Sw23042

# அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத தேர்தல் முடிவுகள்

(12.06.99)

நேற்று முன்தினம் சிறிலங்காவின் தென்மாகாண சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் எத்தரப்பிற்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. மொத்தமாக 55 ஆசனங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி இரு ஊக்குவிப்பு ஆசனங்களையும் பெற்று 27 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 21 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) 7 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

பொ.ஐ.மு. மாவட்ட ரீதியாக காலியில் 11, மாத்தறையில் 8, அம்பாந்தோட்டையில் 6 ஆகிய தொகைகளில் ஆசனங்களை கைப்பற்றிய அதேவேளை, ஐ.தே.க இதே மாவட்ட ரீதியில் 9, 7, 5 ஆகியவற்றையும் பெற்றுள்ளது. தென்மாகாணத்தில் உள்ள 21 தேர்தல் தொகுதிகளில் 18ல் பொ.ஐ.மு.வும், 3 தொகுதிகளில் ஐ.தே.கவும் வெற்றி பெற்றுள்ளன. தனிக்கட்சி என்ற ரீதியில் ஜேவிபி. ஆகக் கூடுதலான வாக்கைப் பெற்று மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. தங்காலையில் மாத்திரம் 13,000 நிற்கும் மேற்பட்ட வாக்குகள் அதற்கு கிடைத்துள்ளது. தங்காலை தொகுதியானது ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தின் போது அரசபடையினரின் அடாவடித்தனங்களுக்கு இலக்காகிய பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பத்திரிகை செய்தியாளருக்கு வடமராட்சியில் மிரட்டல்

(12.06.99)

கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ் வாரபத்திரிகையான தினக்குரல், வீரகேசரி ஆகியவற்றிற்கு வடமராட்சி செய்தியாளராக பணிபுரியும் இல்லைநாதனை சிறிலங்காப் படையினர் எச்சரிக்கை செய்துள்ளனர். முகாமிற்கு அழைக்கப்பட்டு இப் பத்திரிகையாளர் மீது விசாரணை நடாத்தப்பட்டபோதே இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடமராட்சிப் பகுதியில் படையினரின் கெடுபிடிகள் தொடர்பான செய்திகளை இவர் பத்திரிகைகளுக்கு வழங்கினார் என்பதற்காகவே படையினரால் இவ் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த 9ம் திகதி இவர் மீதான விசாரணை நடாத்தப்பட்டது. இது ஒருபுறமிருக்க, வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் மூன்று இளைஞர்களை கைது செய்த படையினர் அவர்கள் மீது தாக்குதலை நடாத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற காரணத்தையே படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

# வீரவிதானவுக்கு அனுமதி! எதிர்ப்பாளர்களுக்கு மறுப்பு

(12.06.99)

கொழும்பில் சிறிலங்கா ஜனாதிபதியின் வதிவிடத்தைச் சுற்றி அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலையத்தினுள் சிங்கள இனவாத அமைப்பான வீரவிதான ஆர்ப்பாட்டம் நடாத்துவதற்கு அனுமதியளித்த சிறிலங்காப் பொலிசார், பேரினவாதத்திற்கு எதிரான ஊர்வலம் ஒன்றை நடாத்துவதற்கான அனுமதியை மறுத்துள்ளனர்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை தமிழர் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நவசமசமாஜக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லீம் விடுதலை ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளே மேற்படி ஊர்வலத்தை நடாத்த திட்டமிட்டபோது சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் அதற்கான அனுமதியை மறுத்ததுடன் ஊர்வலத்திற்கான தடையையும் விதித்தது. பொலிசாரின் இந் நடவடிக்கை குறித்து இக் கட்சிகளின் தலைமைப் பீடங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# வரலாற்றை திரிபுபடுத்தும் பாடநூல்கள் மீளப் பெறப்பட வேண்டும் - தமிழர் ஆசிரியர் சங்கத்தின் போராட்டம்

(12.06.99)

சிறிலங்காவின் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் விநியோகம் செய்யப்பட்ட தமிழ்ப்பாட நூல்களில் வரலாற்றினை திரிபுபடுத்தும் பல அம்சங்கள் இருப்பதால் அப் பாடநூல்கள் உடனடியாக மீளெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், போராட்டம் ஒன்றை நடாத்த முடிவு செய்துள்ளது. கடந்த 8ம், 9ம் திகதிகளில் திருமலை நகரில் நடந்த சங்கத்தின் செயற்குழுக்கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கைகளுக்கு சிறீலங்கா தரப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காவிடில் ஜூலை இரண்டாம் திகதி வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்கள் ஒருநாள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடுவார்கள் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

# முல்லையும், கிளிநொச்சியும் விடுவித்த பின்னரே வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தல் - ஆளுநர்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தலை முல்லை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களும் புலிகளிடம் இருந்து விடுவிக்கப்பட்டு சிவில் நிர்வாகம் அமுல் செய்யப்பட்ட பின்னரே நடாத்தமுடியும் என வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். கடந்த 11ம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். வடக்கு கிழக்கு மாகாணம் முற்றாக புலிகளின் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னரே வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்துவது பற்றி தீர்மானம் எடுக்க முடியும் எனவும் அவர் அப்போது குறிப்பிட்டுள்ளார்.


## உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம் இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு



தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Nacurina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷாம்பூ கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

**இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!**




எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிறீ பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.

மேலதிக விபரங்களுக்கு: **Intercare Handels GmbH**
Münster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

Pub. Ge23003

# கொக்கிளாய் மீதான தாக்குதல்? புலிகளின் புதிய செய்தி என்ன?

கொக்கிளாயின் சிங்களப் படை முகாமைத் தாக்கிய குண்டுகளும் கட்யூசா வகையைச் சார்ந்த பீரங்கிக் குழாய்களிலிருந்துதான் பறந்திருக்க வேண்டும். பல நூறு தமிழர்களின் கொலைக்கும் அவர்களின் பொருளாதார அழிவுக்கும் காரணமா



னவர்களெனப் பெயரெடுத்து பல்லாண்டுகளாக அங்கு வாழ்ந்து வருகின்ற சிங்கள காடையர் எனப்படுவோரே புலிகளின் மேற்குறித்த தாக்குதலின் கடுமையை உணர்ந்து பயத்தினால் கையில் அகப்பட்டதோடு ஓடிக் கொண்டிருக்கின்றார்களாம் என்றால் கட்யூசா வகையின் 16 அல்லது 32 குண்டுகளின் பாய்ச்சலின் மேன்மையை புகழோ புகழென்று தமிழர் புகழவேண்டியதுதான்.

நடந்துமுடிந்த ஐந்து மாகாணத்தேர்தல்களிலும் ஆளுங்கட்சி வெற்றி பெறுவதற்காகவே படையினரைக்கொண்டு மடுவைக் கைப்பற்றி வெற்றிப் பரப்புரை செய்திருந்தார்கள். பின்னர் அங்கு வாழ்ந்த ஏதிலிகளின் மனவிருப்பு பற்றி எவ்வித அக்கறை கொள்ளாத படையினர் அவர்களை விரட்டியதோடு அல்லாமல், அவ்விரட்டலையும் ஒரு சமர் சார்ந்ததாகவே வெளிப்படுத்த முயன்றார்கள். அதனால் தான் இவ்வித இழிச் செயலுக்கான கைமாறாக, புலிகளின் பீரங்கிகள் கொக்கிளாய் படைமுகாமுக்கு குண்டுகளை அனுப்பி வைத்தனவோ என்னவோ?

அத்தோடு மடுவையும் அதனைச் சூழ உள்ள பகுதிகளையும் தாக்கிக் கைப்பற்றிக்கொண்ட படையினர், ஏதிலிகளாக அங்கு வாழ்ந்து வந்தோரை மீளவும் ஏதிலிகளாகவே விரட்டி கலைத்துவிட்டதைப்போல, மீளவும் மையவன்னியூடான பகுதிகளையோ அல்லது கிழக்கு வன்னி சார்ந்த பகுதிகளையோ கைப்பற்றவும் அங்கு வாழும் தமிழ் மக்களை தளைப்படுத்தவும் முயலக்கூடாது. முயன்றால் மணலாற்றின் சிங்கள குடியிருப்புகளாய் இருப்பவை பலவும் கொக்கிளாய்போல தாக்கப்படும் என்னும் பிறிதொரு செய்தியையும் கொக்கிளாய் படையிருப்பைத் தாக்கிய குண்டுகள் மூலம், புலிகள் சொல்லி அனுப்பி இருக்கலாம்.

எனினும் ஒரு சிக்கலுண்டு. எறிந்தால் கூடு கலைவதும் இன்னம்... என்பது தெளிவாகிய நிலையில், மேற்கொண்டு அப்படிக் கலைக்கக்கூடிய கூடுகளை தாக்காதிருக்கலாம். அல்லாமல் தாக்கமுற்பட்டால், உள்ள கூடுகள் கலைய கூட்டுக்கு காவலரோடும் தங்களின் பிற அணிகளுடன் சேர்ந்து வன்னியில் தமிழ் மக்கள் செறிந்து வாழுமிடங்களை நோக்கி பெரும் பலத்துடன் தாக்க முற்படலாம்.

ஒரு இனம் போருக்கு முகம் கொடுக்கும் நிலையில் போர்ப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளல் என்பது மிக அவசியமானதொன்றாகவே கருதப்படுகின்றது. எதிரியின் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்ளவும், சுற்றிவளைப்புக்களில் அகப்படாது விரைவாக நகர்ந்து சென்றுவிடவும், எதிர்க்கு தேவையானவையென கணிப்பிடக்கூடியவற்றை அவர்களுக்கு வழங்காதிருக்கவும் அல்லது அழித்து விடுவதற்கும் மருத்துவ முதலுதவிபோல போர்ப் பயிற்சி பெற்றுக்கொள்ளலும் முக்கிய தேவைகளில் ஒன்றாகவே கருதப்படவேண்டும்.

ஈழத் தமிழர்கள் எனப்படுவோர் ஒரு சிறிய இனம் என்னும் அளவுக்குட்பட்டவர்கள் தானே, அப்படியானபோது அவர்களிலிருந்து அவர்களுக்காகவே முகிழ்த்து, திமிர்த்துள்ள போராளிகளானவர்கள் மட்டும் பன்மடங்காகப் பெருத்து பருத்த பலமாகவே இருப்பார்கள் என்று நம்பிக்கை கொள்வதைவிட; மக்கள், போரெழுச்சி மூலமாக புலிகளை மேலும் பலப்படுத்துவார்களேயானால்' எமது இலக்குகளை விரைவில் எட்ட முடிவதும் ஒன்றும் சிரமமல்ல.

இயல்பான வாழ்வில் ஈழத் தமிழினமானது பொருளாதார செழிப்பிலே வாழ்ந்தது; வளர்ந்தது என்பதை மறுக்க முடியாது தான். அதற்கு தொழிற்கல்வி அல்லது அது சார்ந்த பார்வை உடையோராக மட்டும் அவர்களுக்கான வாழ்க்கைக் கல்வி அமைந்



திருக்கக்கூடும். அதற்காக எதிரிப் படையின் தாக்குதல் விரட்டல் காரணமாக பற்பல இடப்பெயர்ச்சிகளை சந்தித்தநிலையில் தொழில் வாய்ப்பு இல்லையென்றால் வாழ்வே இல்லையென்பதுபோல எண்ணைச் சுழற்சியை இழந்து ஏதிலிகளாகவே இருக்க விளைவதும், போர்— அரசியல் சூழ்நிலைகளை விளங்கிக்கொள்ளாதிருந்ததும் ஏற்புடைய காரியமாகக்கொள்ள முடியாது.

மடுக்கோவிலும் அதனை அண்மித்தும் ஏதிலிகளாக வாழ்ந்து வந்தவர்களுக்கு தம்மைச் சுற்றி போர்மேகம் சூழ்ந்துள்ளதை அறியாமலே இருந்தார்கள் என்று யாரும் கூறிவிட முடியாது. எனினும் தொழிற்கல்வியின் வழிநடாத்தலும், அக்கறையின்மையும், தொண்டு நிறுவனங்களையும் சமய அமைப்புகளையும் கூட்டாக 'மலைபோன்று' நம்பி இருந்ததின் விளைவும்தான் சிங்களப் படையின் சுற்றிவளைப்புக்குள் அவர்களை அகப்படுத்துவித்தது.

இல்லாமையைப் போக்க இறுதியில் மனிதனின் நாட்டம் கடவுள் கோவில் என்றே செல்ல முயலும், இங்கும் அப்படியொரு சூழ்நிலையில்தான் வாழ்வைத் தொலைத்து விட்டோமோ என்னும் ஏக்கத்தில் பரிதவிப்பில் உழன்றுகொண்டிருந்தோரை அந்த நிலையிலும் இரக்கமற்று அரக்கத்தனமாக அவர்களை சிங்களப் படைகள் விரட்டி உள்ளார்கள். ஆனால் இதன் பழு தாக்கம் விரைவில் அவர்களை கவ்விப் பிடிக்கத்தான் போகிறது. கிழக்கு மாகாணத்தில் பல குடியேற்றங்கள் அரசே முன்னின்று செய்வித்த போதிலும் அவை பற்றியெல்லாம் சற்றும் கவலைப்படாது, சிங்கள பாராளுமன்றத்தில் தனக்கொரு நாற்காலி கிடைத்தால்போதும் என்பதற்காக, யாழ்ப்பாண மக்களை கட்சி நிலையாக பிரித்துப் பூரு படுத்தி இடம் பெற்றுக்கொண்டவர்கள் பழைய தமிழ் கட்சிகள். சிங்கள அரசுடனான தனது வெறுப்பை குரோதத்தை வெளிப்படுத்துவதற்காக (மேலெழுந்தவாரியாக மட்டும்) அக்கட்சியினரோடு ஒருபொழுதும் உறவு கொள்ளமாட்டேன் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, சிங்களக் கட்சிகளோடு பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டுமா? என தமது வாய்ப்பாட்டை மக்களுக்கு இனித்ததுண்டு. ஆனால் நிலைமையை அவர்கள் அப்போது சும்மா போக்காகச் சொன்னாலும் இந்தான் நிலை அதுதான். இனி சிங்களத்துடனான தமிழர் உறவும் அவ்வாறுதான் இருக்குமென பெரும்பாலான தமிழர்களும் நம்பிக் கொள்ளலாம்.

படையினரின் மடு மீதான தாக்குதலுக்கு கைமாறுதான் கொக்கிளாய் படையிருப்புக்கு புலிகள் அனுப்பிய குண்டுகளாக இருக்கும். எனினும் அதற்கு முன்பாகவே மடுவில் வாழ்ந்த மக்களைக் குறிவைத்த படையினரின் தாக்குதலை, பெறுபேறுகளை சரியாகவே இனம்கண்டுகொண்ட புலிகள், எதிர்கால போர் நடவடிக்கைக்கு ஏற்றதான சூழ்நிலையை அமைக்கத் தொடங்கிவிட்டார்கள். புலிகளின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதான பகுதிகளிலும், வெளியான பகுதிகளில் வாழும் மக்களதும் போர்ப் பயிற்சிகளை அவர்கள் ஏற்கனவே ஆரம்பித்து வைத்து விட்டார்கள். இது புலிகளிடம் இருந்து மக்களைப் பிரித்தல் என்றும் படையினரின் போர் நுட்பத்திற்கு அடிவிழுந்துவிட்டதென்றே எண்ணத் தோன்றுகின்றது. ஆயினும் ஆட்பிழுக்க குரங்கல்லவா அரசு, இதுபற்றியெல்லாம் கவலைப்பட அதற்கேது நேரம், அதனால் வன்னியில் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளைநோக்கியே அது தனது படைகளை ஏவுவிக்கும். மடுவைச்சுற்றிவளைத்து எதிரியானோரை தளைப்படுத்தி அகற்றியதுபோன்றே, இங்கும் அது செய்ய முயலும். ஆயினும் மக்களை புலிகளாகும் சூழ்நிலையில் வெறிகொண்டு மேலும் பாய முயலும் சிங்களப் படையினரை புலிகள் அல்ல மக்களே தடுத்து நிறுத்தும் வல்லமையையும் கொண்டிருப்பார்கள். ஏனெனில் புலிகளும் மக்களும் அங்கு ஒன்றல்லவா?

— இளைப்பு அன்ரன்

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்

YARL TRAVELS

Thomas Mann Str 21,53111 Bonn

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், கனடா

ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 — தொலைநகல்: 0228/9652985

# சிறிலங்காவின் பாதைதிறப்பு ஆசை




சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மிக நீண்ட காலத்திற்குப் பின் இரண்டு பாரிய மோதல்கள் வெடித்தன. சிறிலங்கா இராணுவம் பூநகரிப் பகுதியில் பாரிய தாக்குதல் ஒன்றையும், மன்னார் பகுதியில் ரணகோசா -4 பேரைநடவடிக்கையும் நடாத்தி முடித்துள்ளது. இவ்விரண்டிலும் சிறிலங்கா தரப்பில் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த வருடம் கிளிநொச்சியில் ஓயாத அலைகள்-II நடந்து முடிந்ததன் பின் சிறிலங்காவின் போர்க்களத்தில் இனம்புரியாத ஒரு அமைதி காணப்பட்டுவந்தது. இடையிடையே சிறுசிறு மோதல்களும், சில சிறு இராணுவ நடவடிக்கைகளும் சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சிறிலங்காவின் போர்ச் செய்தியாளர்கள் இந்த இடைப்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகளின் அமைதிக்கான தங்களது கற்பனைக் காரணங்களை பல கட்டங்களிலும் விபரித்திருந்தனர். ஆனால் விடுதலைப் புலிகளோ யாழ். குடாவிலும், தமிழீழத்திலும் தமது அரசியல், இராணுவ, சமூக நடவடிக்கைகளை மிகத் தீவிரமாக்கி நடைமுறைப்படுத்திக்கொண்டிருந்தனர். இச் சமயத்தில் சிறிலங்கா, மன்னார் பகுதியில் இருந்து சிறு இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளின் ஒரு சில கட்டுப்பாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டது உண்மையே. ஆனால் அப் பிரதேசங்களின் முக்




கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, விடுதலைப் புலிகள் அவசியமான சில தாக்குதல்களை மாத்திரம் நடாத்தி தமது பலத்தைத் தக்கவைத்துக் கொண்டனர். சிறிலங்காவால் ரணகோசா 1, 2, 3 என ஆரம்பித்து நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் எவ்வளவு இராணுவத்தினர் இறந்தனர் என்பதைக் கணித்தாலே விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் எப்படி இருந்தன என்பதை உணரலாம். அநேகமான இடங்களை எதிர்த்தாக்குதல் எதுவுமின்றியே இராணுவத்தினர் சென்றடைந்தனர். இன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் அநேகமான பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளன. இதேவேளை தென்தமிழீழத்திலும் விடுதலைப் புலிகள் தமது இராணுவ ஸ்திரத்தன்மையை மேலும் அதிகரித்துள்ளனர். யாழ். குடாவைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைத் திட்டங்கள் மிகவும் அதிகரித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. நான்கு வருடங்களுக்கு முன் சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட யாழ். குடாவிலிருந்து விடுதலைப் புலிகள் தமது அணிகளை விலக்கிக்கொண்டிருந்தனர். பின்னர் கட்டம் கட்டமாக புதிய அணிகள் யாழ். குடாவிற்குள் ஊடுருவி அரசியல் வேலைத்திட்டங்களை முதலில் ஆரம்பித்திருந்தனர். அடுத்ததாக சிறு இராணுவத் தாக்குதல்களை நடத்தினர். தற்போது சிறிலங்காவின் சிவில் நிர்வாக பேரலித்தன்மையை உடைத்தெறிந்து யாழ்.குடாவில் அந்த இராணுவ நிர்வாக இயந்திரத்தைச் செயலிழக்கவைக்கத் தம்மால் முடியும் என்பதை நிரூபித்துள்ளனர். தற்போது யாழ்.குடாவிற்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்கள் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது. அண்மைக்காலமாக யாழ். குடாவில் சிறிலங்கா இராணுவத்திற்கெதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் இனத்துரோகிகளின் அழிப்பும் அங்கு அதிகரித்துள்ளது. இடையிடையே யாழ். குடா இராணுவ முகாம்களுக்குள் எறிகணைகளும் வீழ்ந்து வெடிக்கின்றன. 35,000 இற்கும் அதிகமான இராணுவத்தினரைக்கொண்டு நிர்வகிக்கப்படும் யாழ்.குடா இராணுவ வலயத்திற்கு ஆபத்துக்கள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. உலகிற்கு தாம் யாழ்.குடாவில் அமைதியை ஏற்படுத்திவிட்டோம் எனக் கூறிவரும் சிறிலங்காவிற்கு இந்த சிக்கலான நிலை கசப்பான அனுபவங்களையே ஏற்படுத்தும்.

சிறிலங்காவின் புதிய பாதுகாப்புத் தலைவராக பதவியேற்றிருக்கும் முன்னாள் முப்படைத் தளபதி ரொஹான் தலுவத்தை விடுதலைப் புலிகளுக்கு தமது பதவிப் பொறுப்பேற்பினை அறிவிக்கும் வகையில் முதலாவதாக மேற்கொண்ட நடவடிக்கையாக கடந்தவார பூநகரி தாக்குதல் முயற்சி இடம்பெற்றுள்ளது. சிறிலங்கா, வவுனியாவூடான யாழ். குடாவிற்கான பாதை திறப்பிலேயே அதிக கவனம் செலுத்திவந்தது. கடந்த வருடம் கிளிநொச்சி இழப்பு ஏற்படுத்திய வடுவானது ஜெயசிக்குறுயின் முடிவிற்கு வழிகோலியது. யாழ்.குடாவிற்கான தரைவழிப் பாதை என்பதில் ஆரம்பத்திலே வவுனியாவூடான பாதை போன்றே மன்னார் பூநகரியூடான பாதையும் இருந்துவந்தது. ஜெயசிக்குறுயின் மூலம் திறக்க உத்தேசித்த வவுனியா பாதை திறப்பு முயற்சி, தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மற்றுமோர் புதிய பாதைதிறப்பு யுத்தம் ஒன்றினை ஆரம்பிக்க சிறிலங்கா கடந்த வருட இறுதியிலேயே யோசித்திருந்தது. ஆனால் அன்றைய பாதுகாப்பு தலைமைகளுக்கிடையே இருந்த முரண்பாடுகளும், பதவிப்போட்டிகளும் அந்த முயற்சிக்குத் தடையாக இருந்தன. அத்துடன் இராணுவ நடவடிக்கை ஒன்றிற்காக தள்ளாடிமுகாம் தயார்படுத்தப்பட்டிருந்த நிலையில் விடுதலைப்புலிகள் அம்முகாம் மீது பெரும் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி பெரும் சேதங்களை ஏற்படுத்தினர். இதுவும் பாதைதிறப்பு முயற்சி பின்போடப்படுவதற்குக் காரணமாக இருந்தது. இந்நிலையில்தான் ரொஹான் தலுவத்தை பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரத்வத்தையிலிருந்து பல பொறுப்புக்களை தன்னகத்தே எடுத்து புதிய பாதுகாப்புத் தலைவராகப் பதவி பெற்றார். இவரது பதவிபெற்றலைத் தொடர்ந்து மீண்டும் பாதைதிறப்பு முயற்சி உயிர்பெறத்தொடங்கியது.

பூநகரியூடான பாதைதிறப்பு என்பதானது சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை முக்கியமான சில நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கக் கூடியது. தற்போது யாழ். குடாவில் பெருமளவில் நடமாடும் விடுதலைப்புலிகளுக்கான விநியோகம் பூநகரிக்கூடாகவே நடக்கின்றது. அத்துடன் யாழ்.குடாவின் தென்பகுதி முகாம்கள் நோக்கி விடுதலைப்புலிகள் பூநகரிப்பகுதியில் இருந்து எறிகணை வீச்சுக்களை மேற்கொள்ளுகின்றனர். இவை எல்லாவற்றையும் விட யாழ்.குடாமீது விடுதலைப்புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றினை நடாத்தும் பட்சத்தில் அவர்களது படையணிகள் பூநகரியூடாகவே உள்நோக்கி நகரும் என்ற அச்சம் சிறிலங்காவிடையே நிலவுகிறது. இவை எல்லாவற்றையும் தடுத்து நிறுத்துவதானால் பூநகரி மீண்டும் கைப்பற்றப்படவேண்டும். அதனுடன் தொடரும் தரைப்பாதை கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டும் என கருதிய சிறிலங்கா, மேற்கண்ட இலாபங்களை மனதிற்கொண்டு மீண்டும் தரைவழிக்கான யுத்தத்தை ஆரம்பித்துள்ளது. இதன் ஒரு கட்டமாகவே கடந்தவார பூநகரித் தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்தத் தாக்குதல்கள் சிறிலங்காவிற்கு புதிய தரைவழிக்கான நகர்வில் உள்ள சிக்கல்களையும் அப்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் பலத்தையும் எடுத்துக்காட்டியுள்ளது. இந்தத் தாக்குதலை சிறிலங்கா மட்டுப்படுத்தப்பட்ட ஒரு தாக்குதல் என்றும் சில விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு நிலைகளை தாக்கியழித்து பழைய இடத்திற்குத் திரும்புவதே தமது திட்டம் என்றும் கூறியுள்ள நிலையில், இத்தாக்குதலுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளும், திட்டங்களும் நகர்வுகளும் அது ஓர் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை தானா என்ற கேள்வியையும் சந்தேகத்தையும் ஆய்வாளர்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

கடந்த வியாழன் அதிகாலை திட்டமிட்டவகையில் பலாலி விமானத்தளத்திலிருந்தும், காங்கேசன்துறையிலிருந்தும் பத்திற்கும் மேற்பட்ட உலங்கு வானூர்திகளில் படையினர் பூநகரிக்கு வடக்கேயுள்ள ஆலங்கேணி, காட்டுக்குளம் போன்ற பகுதிகளில் இறக்கப்பட்டனர். அதேவேளை மண்டைதீவு பகுதியில் இருந்து படகுகள் மூலம் ஒரு தொகைப் படையினர் கல்முனைப் பகுதியில் தரையிறங்கினர். இதே போன்று தாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் தரைவழியாக ஆனையிறவு முகாமிலிருந்து படையினர் பரந்தனூடாக மேற்குநோக்கி நகரத்தொடங்கினர். இவர்களது நகர்விற்கு வழியேற்படுத்தும் வகையில் சிறிலங்காவின் விமானங்கள் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன. அதேபோல் பூநகரி, ஆனையிறவு, கிளாலிக் கடலேரிப் பகுதிகளில் பீரங்கிப் படகுகள் பலத்த எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டன. இவற்றிற்கு மத்தியில் அதிகாலை 5.30 மணியளவில் எல்லா முனைகளிலிருந்தும் படைகள் நகர முயன்றன. பரந்தன் வழியாக நகர முயன்ற படையணி ஒரு சில கிலோ மீற்றர் தூரத்திலேயே விடுதலைப் புலிகளின் தாங்கி அணியினதும், விசேட தாக்குதல் அணியினதும் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் இரண்டு தாங்கிகள் சேதமடைந்தன. ஏராளமான இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயங்களுக்கும் உள்ளானார்கள். இம்மோதல்களில் சிறிலங்கா இரண்டு அதிகாரிகள் உட்பட 14 பேரை இழந்ததாகக் கூறியது. அத்துடன் 4 அதிகாரிகள் உட்பட 45 பேர்கள் காயமடைந்தனர் என்றும் அது அறிவித்தது. ஆனால் சுயமான சில செய்திவட்டாரங்கள் 50 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும் நூற்றுக்கும் அதிகமானோர் காயங்களுக்கும் உள்ளானார்கள் எனக் கூறியுள்ளது. தரையில் இழப்புக்கள் இவ்விதமிருக்க விமானமூலம் தரையிறக்கப்பட்ட படையினரும் பலத்த எதிர்த்தாக்குதலுக்கு உள்ளானார்கள். இதன் போது சிறிலங்கா விமானப்படையின் MI-17, MI-24 ரக உலங்கு வானூர்திகள்

> பூநகரியூடான பாதைதிறப்பு என்பதானது சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை முக்கியமான சில நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கக் கூடியது. தற்போது யாழ். குடாவில் பெருமளவில் நடமாடும் விடுதலைப் புலிகளுக்கான விநியோகம் பூநகரிக்கூடாகவே நடக்கின்றது.

சேதப்படுத்தப்பட்டன. அத்துடன் அப்பகுதியிலும் பல படையினர் கொல்லப்பட்டனர். இந்த இழப்புக்களை அடுத்து மதியமளவில் தாக்குதல்கள் திடீரென நின்றுபோயின. காயமடைந்தவர்களையும், இறந்தவர்களையும் தூக்கிக்கொண்டு பாதை திறப்புப் படையணி வந்த வழியே திரும்பியது. இந்தத் தாக்குதலுக்கு 1000 இற்கும் மேற்பட்ட படையினர் ஈடுபடுத்தப்பட்டனர் எனச் சொல்லப்படுகிறது. படையினரின் பின்வாங்கலையடுத்து விடுதலைப்புலிகள் பூநகரிப் பகுதியில் இருந்து தென்மராட்சியின் இராணுவ முகாம்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினர். அதேபோல் மண்டைதீவுப் பிரதேசம் நோக்கியும் விடுதலைப்புலிகளின் எறிகணைகள் ஏவப்பட்டன. தலுவத்தையின் பதவியேற்புடன் ஆரம்பமான முதலாவது இராணுவ நகர்வு படுதோல்வியடைந்தது. இதையடுத்து பண்டிவிரிச்சான் பகுதியில் நிலைகொண்டிருந்த ரணகோசா -3 படையணிகள் தமது நான்காவது நகர்வு எனக்கூறி விடத்தல்தீவுப் பகுதியை அடைந்தன. இந்த இராணுவ நடவடிக்கையின்போது தமக்கெதிரான எதிர்த்தாக்குதல்கள் நடாத்தப்படவில்லை என இராணுவம் கூறுகிறது.

விடுதலைப்புலிகள் அப்பகுதியில் தாக்குதல்கள் எதனையும் இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளவில்லை எனச் சொல்லப்படுகிறது. இப் படை நடவடிக்கையின் இறுதியில் விடத்தல்தீவின் தென்பகுதி வரை தமது படைகள் நகர்ந்துள்ளன என சிறிலங்கா அறிவித்தது.



இராணுவத்தின் ரணகோஷா யாத்திரை?

# தமிழ் கணிப்பொறி விசைப்பலகை தர நிர்ணயம் தமிழ்நாடு அரசு ஏற்பதாக அறிவிப்பு

(11-06-99)

தமிழ் கணிப்பொறி விசைப் பலகையைத் தர நிர்ணயம் செய்து தகவல் தொழில்நுட்ப நிபுணர் குழு அளித்த பரிந்துரையை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட தனித்தமிழ் (MONOLINGUAL) மற்றும் ஆங்கிலம் தமிழ் (BILI-NGUAL) சார்ந்த சிறப்பு குறியீட்டு முறைகளின் அட்டவணைத் தொகுப்பும் தமிழ்நாடு அரசால் ஏற்கப்பட்டுள்ளது. சிறீலங்கா, சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ் அரசுகளுக்கும் மற்றும் பாண்டிச்சேரி மாநில அரசுக்கும் இவற்றை ஏற்றுச் செயல்படுத்துவதற்காக இப்பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னையில் வரும் 13-ம் திகதி நடைபெறும் விழாவில் உலக அளவில் ஏற்கப்பட்ட தரப் படுத்தப்பட்ட தமிழ் விசைப் பலகை மற்றும் தமிழ் கணிப் பொறி குறியீட்டு முறைகளை முதல்வர் கருணாநிதி வெளியிடுகிறார். கடந்த பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற 'தமிழ் நெட் 99' மாநாட்டின் முடிவில் தமிழ் கம்யூட்டர் விசைப்பலகையையும் கணிப்பொறி குறியீட்டு முறையையும் 'தர நிர்ணயம் செய்யப் பட்டு பல்வேறு தரப்பினரின் கருத்தறிய பரிந்துரைக்கப்பட்டது.

அதையடுத்து உலகின் பல்வேறு இடங்களில் இருந்து இது குறித்து கருத்தறியப்பட்டன. பல்வேறு தரப்பிலிருந்து கூறப்பட்ட ஆக்கபூர்வமான யோசனைகள் திருத்தங்கள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்புடைய வகையில் தமிழ் கணிப்பொறி விசைப்பலகைக்கும், கணிப்பொறி குறியீட்டு முறைக்கும் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. அவை பன்னாட்டு தொழில்நுட்ப குழுவின் கருத்தறிய அனுப்பப்பட்டு பின்னர் இறுதி செய்யப்பட்டது.

தற்போது புழக்கத்தில் உள்ள பல்வேறு தமிழ் கணிப்பொறி விசைப் பலகைகளில் உள்ள சிறப்பு அம்சங்கள் ஒருசேர இந்த விசைப்பலகையில் இடம் பெறுவதால் இந்த ஒலியியல் விசைப் பலகை, அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்கும் என இந்த விசைப்பலகையை நிர்ணயம் செய்வதில் ஈடுபட்ட நிபுணர்கள் கருதுகிறார்கள். இதன் மூலம் பல்வேறு தமிழ் கணிப்பொறி விசைப்பலகைகள் மற்றும் குறியீட்டு முறை கடைப்பிடிக்கப் படுவதனால் ஏற்பட்டு வந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.




# டெல்லியில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்!

(12-06-99)

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சர்தார் அஜிஸ் இன்று டெல்லி வந்து சேர்ந்தார். காஷ்மீரில் அத்துமீறி புகுந்த பாகிஸ்தான் ஆதரவு ஊடுருவல்காரர்களை வெளியேற்ற கடந்த மே மாதம் 26ம் திகதியில் இருந்து இந்திய இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் தனது வெளிநாட்டு அமைச்சரை அனுப்பியுள்ளது.

இவரது வருகை பலமுறை தள்ளிவைக்கப்பட்டது. இறுதியாக அவர் சீனா சென்று சீனத்தலைவர்களைச் சந்தித்து நிலவரம் குறித்து விளக்கிய பின்னர் கூட்டோடு கூட்டாக இந்தியாவுக்கு வந்து சேர்ந்துள்ளார். விமான நிலையத்தில் அவரை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் வரவேற்றார். பின்னர் அவர்களிடையே நடந்த பேச்சுகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படாமல் முட்டுக்கட்டை நிலை தோன்றியது.

கார்கில் பிராந்தியத்தில் பாகிஸ்தான் துருப்புகளும் ஆயுதம் தாங்கிய கூலிப்படையினரும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை கடந்து ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்ற உண்மையை பாகிஸ்தான் அமைச்சர் ஏற்க மறுத்ததே பேச்சுகளில் முட்டுக் கட்டை ஏற்படக் காரணம் என இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்திய துணைக் கண்டத்தில் அமைதி நிலவ வேண்டுமானால் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை பாகிஸ்தான் மதித்து நடக்க வேண்டும். இந்த எல்லையை மீறி உள்ளே வந்து ஆக்கிரமிப்பு செய்துள்ள பாகிஸ்தானிய இராணுவத்தினரும் அவர்களது ஆதரவு பெற்ற கூலிப் படையினரும் தாமதமின்றி வெளியேறியாக வேண்டும் என்று இந்தியா திட்டவட்டமாக எடுத்துரைத்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன் பின்னர் இந்திய பிரதமர் வாஜ்பாயுடன் சுமார் முப்பது நிமிடங்கள் வரையில் பேச்சுவார்த்தை நடத்திய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் நிருபர்களிடம் எதுவும் கூற மறுத்துவிட்டார்.

# மருத்துவ தேர்வை தமிழில் நடத்த வேண்டும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பு!

(10-06-99)

மருத்துவ தேர்வை தமிழில் எழுத அனுமதிக்க கோரி டாக்டர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு மனு தாக்கல் செய்துள்ளார். தஞ்சாவூரைச் சேர்ந்தவர் டாக்டர் எஸ்.ஜெயசேகர். இவர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மேற்படிப்பு தேர்வு எழுதினார். தேர்வுகளில் சிலவற்றை தமிழிலும், சிலவற்றை ஆங்கிலத்திலும் எழுதினார். மேற்கொண்டு சில தேர்வுகளை எழுத அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தேர்வுகளில் அவர் தோல்வி அடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். தமிழில் தேர்வு எழுதியதனால்தான் நான் தேர்ச்சியடையவில்லை என்று கூறியுள்ளார். தமிழ் தெரிந்த டாக்டர்களைக் கொண்டு எனது விடைத்தாள்களை திருத்தச் சொல்ல வேண்டும். நான் தமிழில் பல மருத்துவ நூல்களை எழுதியிருக்கிறேன். நோயாளிகளுக்கு மருந்துப் பெயர்களை தமிழில் எழுதித் தருகிறேன் என்றும் தனது மனுவில் அவர் கூறியுள்ளார்.

எம்.டி. தேர்வுக்கான வாய்மொழித் தேர்வை மீண்டும் நடத்துமாறு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு உத்தரவிட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். இம்மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

# ஆறு இந்திய போர்க் கைதிளை பாகிஸ்தானியர் சித்திரவதை செய்து கொன்றார்கள்

## - இந்தியா குற்றச்சாட்டு!

(11-06-99)

தங்களிடம் சிக்கிய ஆறு இந்திய இராணுவ வீரர்களையும் பாகிஸ்தானியர் பல நாட்கள் சித்திரவதை செய்து அதன் பின்னர் கொன்றிருக்கிறார்கள். இவர்களது சடலங்களை பிரேத பரிசோதனை செய்ததில் இந்த உண்மை தெரியவந்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார். பாகிஸ்தான், இந்த ஆறு இராணுவத்தினரின் சடலங்களையும் சில நாட்களுக்கு முன் இந்தியா வசம் ஒப்படைத்தது.

இந்த இந்திய வீரர்கள் பல வகையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என அவர்களின் சடலங்களுக்கு அஞ்சலி செலுத்திய பின் அமைச்சர் கூறினார். மேலும் அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில்; பாகிஸ்தானின் மிருகத்தனமான செயல்கள் மனித நாகரிகத்திற்கு எதிரானவை. தவிரவும் பாகிஸ்தான் இதில் பல சர்வதேச சட்டங்களையும் மீறியுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். இதற்கு இந்தியாவின் பதில் என்ன என்று கேட்டதற்கு, அவர் பதிலளிக்கையில் 'சரியான அரங்கில் சரியான மட்டத்தில் பதிலளிக்கப்படும்' என்றார்.

# சண்டை நடக்கும் காஷ்மீர் பகுதியில் சோனியா!



(12-06-99)

காஷ்மீர் பகுதிக்கு இன்று சோனியா சென்றார். இந்திய எல்லைத் தாக்குதலில் பங்கேற்று பாதிப்படைந்தவர்களை சந்தித்து அவர் ஆறுதல் கூறினார். காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவி இருக்கும் பாகிஸ்தான் ஆதரவாளர்களை விரட்ட இந்திய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனால் காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவி இருக்கும் பாகிஸ்தான் ஆதரவாளர்களை விரட்ட இந்திய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனால் காஷ்மீர் எல்லைப் பகுதியில் பெரும் பதட்டம் நிலவுகின்றது. பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே நடந்து வரும் சண்டையில் இந்தியத் தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. இந்திய இராணுவ வீரர்கள் பலர் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் காஷ்மீர் பகுதிக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இன்று நேரில் சென்றார். கார்கில் பகுதியில் நடந்த சண்டையில் காயம் அடைந்த வீரர்களை சோனியா நேரில் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். சோனியா காங்கிரஸ் தலைவரான பின்பு காஷ்மீர் பகுதிக்கு அவர் சென்றது இதுவே முதல்முறையாகும். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இராணுவ வீரர்களிடம் பேசுகையில், 'நாடு முழுவதும் உங்கள் பின்னால் நிற்கிறது. இந்திய மண்ணில் இருந்து பாகிஸ்தான் ஆதரவாளர்களை உங்களால் விரட்டி அடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது' என்றார். மேலும் ஏராளமான இராணுவ வீரர்களையும் சோனியா சந்தித்தார். கார்கில் பகுதிக்கு செல்லுங்கள்; பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிராக போரிடுங்கள்; அவர்களை இந்திய மண்ணில் இருந்து விரட்டி அடியுங்கள் என்றார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் காஷ்மீர் பகுதிக்கு சென்று இந்திய இராணுவ முகாம்களை பார்வையிட்டுள்ளார்.

# அவுஸ்திரேலிய மதபோதகர் கொலை! தாராசிங்கின் கூட்டாளி கைது

(11-06-99)

கடந்த ஜனவரி மாதம் 23-ம் திகதி இரவு ஒரிசா மாநிலத்திலுள்ள மனோகர்பூரில் அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த ஸ்டுவர்ட் ஸ்டெயின்ஸ் என்ற கிறிஸ்தவ மத போதகரும், அவரது இரண்டு மகன்களும் தாராசிங் குழுவினரால் தீ வைத்து கொளுத்தப்பட்ட செய்தி உலகத்தையே உலுக்கியது. ரவீந்திர பால்சிங் என்று கூறப்படும் அந்த தாராசிங் இன்னும் தலைமறைவாக இருந்து வருகிறான். அவனைப்பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு ஐந்து இலட்சம் பரிசளிக்கப்படும் என்று சி.பி.ஐ. அறிவித்துள்ளது.

ஒரிசா மாநில அரசும் ஒரு இலட்ச ரூபாய் அளிப்பதாக கூறி உள்ளது. இந் நிலையில் தாராசிங்கின் நெருங்கிய கூட்டாளியான திபு தாஸ், ஒரிசா மாநில பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளான். அவனிடமிருந்து ஏராளமான தகவல்கள் பெறமுடிந்துள்ளது என்று பொலிசார் கூறுகின்றனர்.

# காஷ்மீர் சிக்கல்: இந்திய அரசின் அலட்சியத்துக்கான பரிசு முன்னாள் இராணுவ அதிகாரி சாடல்

(11-06-99)

இந்திய இராணுவம் கேட்ட நவீன கருவிகளை அரசு வாங்கிக் கொடுக்கவில்லை. அதனால் தான் காஷ்மீர் எல்லையில் சிக்கல் ஏற்பட்டது என்று முன்னாள் இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

'கார்கில் - பாரதத்தின் கௌரவம்' என்ற தலைப்பில் டெல்லியில் நடந்த கருத்தரங்கில் முன்னாள் இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியார் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில், போர்க்களத்திற்கு வேண்டிய அடிப்படை கருவிகள்கூட இராணுவ வீரர்களுக்கு கொடுக்கப்படவில்லை. அரசிடம் நவீன கருவிகள் கேட்டுப் போராடினார்கள். ஆனால் அரசு அலட்சியமாக இருந்துவிட்டது. அதற்கு பரிசாகத்தான் இப்போது நாம் தண்டனை பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

கார்கில் பிரச்சினையில் இருந்து இந்தியா பாடம் படித்துக் கொள்ள வேண்டும். இனியும் இராணுவ விடயத்தில் அரசோ, அதிகாரிகளோ அலட்சியம் காட்டக்கூடாது. 1947-ல் இருந்து தொடர்ந்து காஷ்மீர் பகுதியில், பாகிஸ்தான் பிரச்சினையை ஏற்படுத்தியே வந்து உள்ளது. அத்தனை சம்பவங்களிலும் நாம் பாடம் படிக்க மறந்துபோனோம். இந்தியாவில் தீவிரவாதிகள் அத்துமீறி நுழைந்து நமது எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டி வந்து முகாம் அமைத்து உள்ளனர். நிச்சயமாக இது ஆக்கிரமிப்புத்தான். இதில் சந்தேகமே கிடையாது. எனவே இந்தியா இது விடயத்தில் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். தீவிரவாதிகள் விரட்டியடிக்கப்பட்ட பின்னரும் கார்கில் திராஸ் பட்டாலிக் எல்லையோரங்களில் இறுக்கு கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். மேலும் தீவிரவாதிகளை கண்காணிக்க செயற்கைகோள் ஒன்றும் ஏற்படுத்த வேண்டும். இதுதான் கடைசி ஊடுருவலாக இருக்க வேண்டும். எனவே பாகிஸ்தானை நாம் கடுமையாக எச்சரிக்க வேண்டும். இனி இந்த மாதிரி நடந்தால் பாகிஸ்தானை எதிர்த்து பயங்கரப் போரில் ஈடுபட்டு அவர்களின் பகுதிகளையும் நாம் ஆக்கிரமிக்க வேண்டும். அது பாகிஸ்தானுக்கு நாம் கொடுக்கும் சாவு மணியாக இருக்க வேண்டும் என்றார் அவர்.

# சிபிஐ முன்னாள் இயக்குநர் கார்த்திகேயனுக்கு பழ. நெடுமாறன் எச்சரிக்கை

(10-06-99)

ராஜீவ் கொலை வழக்கில் உண்மைகளை மூடி மறைக்க தமிழீழ ஆதரவாளர்கள் பற்றி தவறான தகவல்களை வெளியிடும் சிபிஐ முன்னாள் இயக்குநர் கார்த்திகேயனுக்கு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அய்யா பழ.நெடுமாறன் எச்சரிக்கை விடுத்துள்ளார். சென்னையில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

ராஜீவ் கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டவர்களில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ரங்கநாத் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர். சுதந்திர மனிதராக வெளிவந்ததும் அவர் வெளியிடும் உண்மைகள் சிபிஐயில் முன்னாள் இயக்குநர் கார்த்திகேயனை பதட்டமடைய வைத்துள்ளன.

ராஜீவ் கொலைச் சதியில் சந்திராசாமிக்கு உள்ள தொடர்பு பற்றி தான் அறிந்த சில தகவல்களை கூறியபொழுது கார்த்திகேயன் தன்னை மிரட்டி வாய் மூடச் செய்ததாக ரங்கநாத் குற்றம் சாட்டினார். ஜெயின் கமி



ஷனும் சந்திராசாமியை விசாரிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. இவற்றைக் கண்டு ஆத்திரம் அடைந்த கார்த்திகேயன், ராஜீவ் கொலையின் கூட்டாளிகளே தனக்கு எதிராக தவறான செய்திகளைப் பரப்பி வருகிறார்கள் என்றும், கொலைச் சதியை மூடி மறைக்க அவர்கள் செய்த முயற்சிகளைத் தான் முறியடித்துள்ளதால், அவர்கள் தன்மீது ஆத்திரம் அடைந்துள்ளனர் என்றும் கூறியுள்ளார். அத்துடன் தேசிய மனித உரிமை ஆணையத்தின் டைரக்டர் ஜெனரலாக தான் பதவியேற்றபோது, எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய குழுக்கள்தான் 'தனக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும்' அவர் கூறியுள்ளார். இதுவே உண்மையை திரித்து கூறும் முயற்சியாகும். மனித உரிமை ஆணையத்தின் அதிகாரியாக கார்த்திகேயன் நியமிக்கப்பட்டதை எதிர்த்து தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்பு குழு ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. அவ்வாறு அவர் நியமிக்கப்பட்டதற்கு பல மாதங்கள் கழித்துத்தான் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தேசிய மனித உரிமை ஆணையத்தில் புலனாய்வு அதிகாரியாக உள்ள கார்த்திகேயன், நடுநிலையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தில் ராஜீவ் கொலை வழக்கு விசாரணை நடைபெற்ற பொழுது, சிபிஐ தரப்பில் பங்கு கொண்டு அவர் செயல்பட்டதைத்தான் நாங்கள் கண்டித்தோம். மனித உரிமை ஆணையப் பதவியிலிருந்து விலகிய பிறகு வழக்கு விசாரணையில் பங்கு கொள்வதுதான் நேர்மையாகும் என எடுத்துக் காட்டினோம். உண்மைகளையே திரித்துக் கூறுவதையே தனது வழக்கமாகக் கொண்டிருக்கும் கார்த்திகேயன் திருத்திக்கொள்ள மறுத்தால், அவரைப் பற்றிய மேலும் பல உண்மைகள் அம்பலமாகும் என எச்சரிக்கிறேன்.

# வாஜ்பாய் அரசு கார்கில் சிக்கலை சரியாகக் கையாளவில்லை - சோனியா

(11-06-99)

ஆந்திராவில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கிய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வாஜ்பாய் அரசை கடுமையாகச் சாடினார். கார்கில் பிரச்சி



னையை சரியாக கையாளவில்லை என்றும் குற்றம் சாட்டினார். மேலும் அவர் பேசுகையில், கார்கில் பகுதிக்குள் ஊடுருவி உள்ள தீவிரவாதிகளை இராணுவம் விரட்டி அடிக்க முழு ஆதரவு கொடுப்போம். ஆனால் இப்பிரச்சினையை அரசு கையாளும் முறை சரியில்லை. பல கேள்விகளுக்கு அரசிடம் இருந்து பதில் வரவில்லை. இப்பிரச்சினையை கிளப்புவதற்கு இது உகந்த நேரம் அல்ல. எனவே தீவிரவாதிகளை முற்றிலுமாக விரட்டி அடிக்கப்பட்ட பிறகு, அரசிடம் எங்கள் கேள்விகளுக்கு பதிலை கேட்போம். வாஜ்பாய் அரசு, நாட்டின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தி விட்டது. பலவீனமான அரசு நாட்டின் பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்தை உண்டாக்கும். எனவே நாட்டிற்கு நிலையான அரசு தேவை. பல்வேறு தரப்பினரை கொண்ட பெரிய கூட்டணி அரசு தேவையில்லை.

நான் பதவி ஆசை காரணமாக தீவிர அரசியலுக்கு வரவில்லை. இராஜீவ் காந்தி விட்டுச் சென்ற பணிகளை பூர்த்தி செய்யவே வந்துள்ளேன். நாட்டுக்காக நேரு குடும்பம் பல் வேறு தியாகங்களை செய்துள்ளது. அந்த குடும்பத்தின் மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கும் வழங்க வேண்டும். நாட்டிற்கு இப்போது தேவை, ஏழை மக்கள் மீது அக்கறை கொண்ட அரசு. காங்கிரசால் மட்டுமே நாட்டை எல்லா வழியிலும் முன்னேற்ற பாதையில் அழைத்து செல்ல முடியும் என்றார் அவர்.

# வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ "புலன்கொள் நிதிக்குவையோடு
புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும்
சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களிக்கும் மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்......"

– *திருமங்கை ஆழ்வார் (கி.பி.ஏழாம் நூற்றாண்டு) நாலாயிர திவ்விய பிரபந்தம்.*

☺ ஆழ்வார் வர்ணிக்கும் மாமல்லபுரத் துறைமுகம் இருந்ததற்கு இதுவரை வலுவான ஆதாரங்கள் இல்லாமலிருந்தது. தற்போது அந்த குறை நீங்கிவிட்டது. மாமல்லபுர கடற்கரை கோவிலை ஒட்டி சமீபத்தில் இந்திய தொல்பொருள் அகழ்வாராச்சித்துறை மேற்கொண்ட அகழ்வாராச்சியில் அங்கே 'ஜெட்டி பொயின்ற்' என்கிற துறைமுக சரக்கு ஏற்றுமதி - இறக்குமதி தளமான படகுத் துறை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்திய அகழ்வாராச்சித்துறை வரலாற்றில் இது ஒரு முக்கிய மைல்கல் என்கிறார் இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னைப் பிரிவின் கல்வெட்டு தொல்லியல் ஆய்வாளர் கே.டி. நரசிம்மன். பல்லவர் கால சிற்பக்கலையின் சிகரமாக தற்போது உலக அளவில் அறியப்பட்டுள்ள மாமல்லபுரம், பல்லவர் வருகைக்கு முன்பே முக்கிய தமிழக துறைமுகமாக விளங்கியதற்கு வலுவான ஆதாரம் தற்போதுதான் கிடைத்திருக்கிறது என்கிறார். இந்தக் கண்டுபிடிப்பு மாமல்லபுரத்தின் வரலாற்றை மட்டுமல்ல தமிழக-இந்திய துறைமுக வரலாற்றையும் புதிய கோணத்தில் அணுக வழி செய்திருக்கிறது.

– *09.06.99 இந்தியா டுடே இதழில்*

☺ ☺ ☺

☺ 'கருவாடு மீனாகாது, கறந்த பால் மடிபுகாது..' இந்த வரிசையில் இன்னும் ஐந்தாறு உங்கள் மொழிகளைக் கூறுங்களேன்?
'பகலிலே பசுமாடு தெரியாதவனுக்கு இரவிலே எப்படி எருமைமாடு தெரியும்?'
'மஞ்சள் துண்டைக் கண்டெடுத்த சுண்டெலி, மளிகைக்கடை வைக்க நினைத்ததாம்!'
'அருமை மருமகள் தலை போனாலும் போகட்டும், ஆதிகாலத்து உரல் போகக்கூடாது என்றாளாம்.'
'வெடித்துச் சிதறி வெப்பத்தை கக்கும் எரிமலைகளை வேடிக்கை மத்தாப்புகளாக கருதும் எங்களை இந்த ஈரம் படிந்த தீக்குச்சிகள் என்ன செய்யமுடியும்?'
'கால்வாயைத் தாண்ட முடியாதவன் கடலைத் தாண்டுவானா?
வெந்நீரில் குளிக்க முடியாதவன் தீயில் குதிப்பானா?'
போதும்! எஞ்சியவைகளுக்கு பொதுக்கூட்டத்திற்கு வாருங்கள்!

– *06.06.99 ஜூனியர் விகடன் இதழில் கனிமுத்து பதில்கள்*

☺ மகாத்மா காந்தியின் நினைவாக இப்பொழுது நம்மிடம் ஏதாவது இருக்கிறதா?
இருக்கிறதே! இடுப்பில் கட்டும் துண்டு!! எத்தனையோ கோடிப்பேர் இன்றும் கட்டுகிறார்களே!!

– *13.06.99 ராணி வாராந்திரியில்*

☺ ஈழத் தமிழர்களுக்குள்ள விழிப்புணர்வை, தமிழ்ப் பற்றை, தமிழ்க் கலை பண்பாடுகளைப் பேணும் ஆர்வத்தை வெளிநாடுகளில் குடியேறி வாழும் தமிழ்நாட்டு தமிழர் குடும்பங்களில் காண முடியவில்லை.

– *16.06.99 தேவி இதழில் மணவை முஸ்தபா*

☺ ஸ்தம்பித்து தேங்கி, அழுக்கும் நாற்றமும் கிளர்ந்த குட்டையின் மேல், கல்லெறிந்து சலனத்தை ஏற்படுத்தினார்கள் திராவிட இயக்க எழுத்தாளர்கள். இந்தியச் சுதந்திரம் அறிவிக்கப்பட்ட 1947-க்கு முன்பும் பின்புமாக உருவான கோபமும் தார்மீக ஆவேசமும் கொண்ட 'விரல்கள் எண்ணிக்கையில் அடங்கிய' இளைஞர்களின் குழு ஒன்று, தத்தம் பேனாக்களில் கந்தகத்தை நிரப்பிக்கொண்டு எழுதத் தொடங்கினார்கள். அவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் இருவர். ஒருவர் சி.என்.அண்ணாதுரை மற்றவர் கலைஞர் மு.கருணாநிதி.

– *ஜூன் 99 கணையாழி இதழில் பிரபஞ்சன்.*

# கட்சித் தலைவராக சரத் பவார் தேர்வு!

(10-06-99)

மும்பையில் நடைபெற்ற தேசிய காங்கிரஸ் கட்சி மாநாட்டில், சரத்பவார் கட்சியின் தலைவராக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநாட்டில் இது தொடர்பாக பி.ஏ.சங்மா கொண்டுவந்த தீர்மானத்தை, மத்திய முன்னாள் அமைச்சர் பவேஷ்வர் ராம் வழிமொழிந்தார். பின்னர் மாநாட்டில் பவார் உரையாற்றுகையில், அசாம் முன்னாள் முதல்வர் எஸ்.சி.சின்ஹாவின் சமாஜ்வாதி காங்கிரஸ் கட்சி, தமது தேசிய காங்கிரசில் இணைந்து விட்டதாக அறிவித்தார். அத்துடன் சமாஜ்வாதி காங்கிரஸ் தனது சர்க்கா சின்னத்தை தேசிய காங்கிரஸ் பயன்படுத்த அனுமதி அளித்து விட்டதாகவும் பவார் தெரிவித்தார். இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தை அணுக இருப்பதாகவும் அவர் சொன்னார். கட்சிக்கு நிர்வாகிகளை நியமிக்கவும் செயல் குழுவை நியமிக்கவும் மாநாட்டில் பவாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.




# இந்தோனேசியாவில் மேகவதி சுகர்னோ புத்திரி முன்னணியில்!

## வாக்குகள் எண்ணும்பணி மிகத்தாமதம்

(13.06.99)

கடந்த திங்களன்று இந்தோனேசியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்குகளை எண்ணும்பணி இன்னமும் முடிவடையவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அளிக்கப்பட்ட வாக்குகளில் பத்து சதவீதமானவை மட்டும் இதுவரை எண்ணப்பட்டுள்ளன. இதுவரை வெளியிடப்பட்ட முடிவுகளின்படி மேகவதி சுகர்னோ புத்திரியின் கட்சி முன்னணி வகிக்கின்றது. ஆளும் கோல்கார் கட்சி இரண்டாவது இடத்தில் திற்கின்றது. வாக்குகளை எண்ணுவதில் காட்டப்படும் இழுத்தடிப்பு, தேர்தலின் நேர்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது என வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தோனேசிய மாணவர் சமூகமும் இது தொடர்பான பல போராட்டங்களையும் நடாத்தி வருகின்றது. வாக்குகள் எண்ணும் பணியை துரிதப்படுத்துமாறு அமெரிக்காவும் கோரிக்கை விடுத்துள்ளது. இத்தாமதம் பற்றி உத்தியோக பூர்வமாக கருத்து வெளியிட்ட இந்தோனேசிய அரசு, தேர்தல் அதிகாரிகளின் திறமையின்மையே இத்தாமதத்திற்கு காரணம் என குற்றம் சாட்டியுள்ளது.



இந்தோனேசியாவின் தேர்தலில் ஜனாதிபதி கபீபியும் அவரது மனைவியும் வாக்களிக்கின்றார்கள். 40 வருடங்களின் பின் ஜனநாயகமுறையில் நடாத்தப்பட்ட தேர்தல் இது என வர்ணிக்கப்படுகின்றது.

இத் தேர்தல் பற்றி கருத்து வெளியிட்ட அரசியல் அவதானிகள் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறாது எனவும், கூட்டணிக் கட்சிகளின் அரசு ஒன்றே இந்தோனேசியாவில் அமையும் எனவும் கூறியுள்ளனர்.

# கொசோவோ சமாதான திட்டத்திற்கு ஐ.நா. பாதுகாப்பு அங்கீகாரம்

(13.06.99)

கொசோவோ சமாதானத் திட்டத்திற்கு ஐநா. பாதுகாப்பு சபை கடந்த 10ம் திகதியன்று அங்கீகாரம் அளித்துள்ளது. கொசோவோவில் இருந்து வெளியேறிய அகதிகள் நேட்டோ அமைப்பின் பாதுகாப்புடன் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பவும் ஐநா. உதவியுடன் அங்கு மீள் குடியேற்றப் பணிகளை மேற்கொள்வதற்கும் பாதுகாப்புசபை அங்கீகாரம் அளித்துள்ளது.

பாதுகாப்புச்சபை, தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் நேட்டோ அமைப்பிற்கும் யூகோஸ்லாவிய இராணுவ ஜெனரல்களுக்கும் இடையே கடந்த புதனன்று ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

ஐநாவின் தீர்மானத்திற்கு பொதுவாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. பல்கன் பிராந்தியத்தில் ஏற்பட்ட இருண்ட காலத்தின் முடிவு இதுவென ஐநா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.



கொசோவோ சமாதானத் திட்டத்தை அங்கீகரிக்க கூடிய ஐ.நா பாதுகாப்புசபை

பாதுகாப்பு சபையின் அங்கீகாரத்திற்கு 14 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. எதிர்த்து வாக்களிக்கும் என எதிர் பார்க்கப்பட்ட சீனா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது சீனாவின் ஆலோசனைகள் சிலவும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்தே, சீனா எதிர்த்து வாக்களிக்கவில்லை.

ஆனால் யூகோஸ்லாவியாவின் தீவிர வலதுசாரி சேர்பியர்கள் இத் தீர்மானத்தை எதிர்த்துள்ளனர். ஐ.நாவின் இத் தீர்மானத்தில் நெதர்லாந்து நாட்டின் கேக் நகரிலுள்ள யுத்தக் குற்றவாளிகள் தொடர்பான நீதிமன்ற விசாரணையில் சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

# கொங்கோவிலிருந்து சிம்பாப்வே துருப்புக்கள் விலகல்

கொங்கோ ஜனாதிபதி கபிலா தங்கியிருக்கும் மனோனோ (Manono) நகர பகுதியை நோக்கி கடந்த வியாழக்கிழமை அதிக எண்ணிக்கையிலான தீவிரவாதிகளும் ருவாண்டா துருப்புக்களும் முன்னேறி வந்ததனால் சிம்பாப்வே துருப்புக்கள் அந் நகரப் பகுதியிலிருந்து விலகத் தொடங்கின. இப் பகுதியில் 8000 துருப்புக்கள் நிலைகொண்டிருக்கின்றன. இத் துருப்புக்களின் விலகலுக்கு முன்னர் பல இழப்புக்களைச் சந்தித்ததாக தீவிரவாதிகள் தெரிவித்தனர். ருவாண்டா வானொலி 275 சிம்பாப்வே துருப்புக்கள் கொல்லப்பட்டதாக அறிவித்தது. 10 மாத கால கொங்கோ சிவில் யுத்தத்தில் கபிலாவிற்கு ஆதரவாக அங்கோலா, நமிபியா, சிம்பாப்வே போன்ற நாடுகள் படைகளை அனுப்பியிருந்தன. அதேநேரம் Tutsi இன தீவிரவாதிகளுக்கு ஆதரவாக ருவாண்டா, உகண்டா படைகளை அனுப்பியிருக்கின்றன.

# பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் வரவுசெலவு திட்டத்திற்கு எதிராக வேலை நிறுத்தம்

பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் எதிர்வரும் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவிற்கு எதிராக நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தினை ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டன. ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம் மக்களின் வேலை நாள் ஆகும். நிதியமைச்சர் கிப்ரியா (Kibria) எதிர்பார்க்கப்படும் வருமானமாக 2410.5 மில்லியன் தகாவும் (Taka), எதிர்பார்க்கப்படும் செலவீனமாக 1780 மில்லியன் தகாவும், மேலதிக வருமானமாக 630.5 மில்லியன் தகாவும் கொண்ட மேலதிக வருமானம்கொண்ட வரவு செலவுத் திட்டத்தினை முன்மொழிந்திருந்தார்.

பங்களாதேஷ் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒன்றாகும்.

# அமெரிக்காவிற்கு எதிரான புனித யுத்தம் தொடரும் - பின் லேடன் -

(13.06.99)

அமெரிக்காவிற்கு எதிரான புனித யுத்தத்தை தான் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப் போவதாக சவுதிஅரேபிய அதிருப்தியாளரும், அமெரிக்காவால் மிகவும் தேடப்பட்டு வருபவருமான கோடீஸ்வரர் பின் லேடன் எச்சரித்துள்ளார். டோகாவில் தொலைக்காட்சி சேவை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றின் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். சவுதி அரேபியாவில் நடைபெறும் ஊடுருவலுக்கு எதிராக இஸ்லாமிய மக்களை கிளர்ந்தெழச் செய்வது தனது பணியெனவும் தெரிவித்த அவர், எமது நிலத்தினை எதிரியிடம் இருந்து விடுவிக்க வேண்டும் எனக்கோரியதுடன் ஒவ்வொரு அமெரிக்கனும் எமது எதிரியாவான் என்றும் அவர் கூறினார். பேட்டியின் ஒரு கட்டத்தின் போது அமெரிக்க நிலைகளை தாக்கியவர்களையும் இவர் பாராட்டினார்.



# எமது தலைமையை அழிக்க நினைத்தால் துருக்கி அழிவுக்கு அது வித்திடும்

## - குர்திஸ் தொழிலாளர் கட்சி

(13.06.99)

எமது தலைமைத்துவத்தை அழிப்பதற்காக துருக்கிய அரசால் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் அதன் அழிவிற்கே வழிவகுக்கும் என குர்திஸ் தொழிலாளர் கட்சியின் இராணுவப் பிரிவு அறிவித்துள்ளது. தலைவர் ஒகலானால் விடுக்கப்பட்டிருக்கும் சமாதான தீர்விற்கான அழைப்பு நிராகரிக்கப்பட்டு அவர் . தூக்கிலிடப்பட்டால் துருக்கிய அரசாங்கத்திற்கு எதிரான தாக்குதல்கள் அதிகரிக்கும் என குறுரைத்த இராணுவப் பிரிவு, குர்திஸ் மக்கள் தமது தேசிய மதிப்பினை பாதுகாக்க எல்லா வழிகளிலும் போராடுவதற்கு உரித்து உடையவர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ் அறிவிப்பினை அடுத்து கருத்து வெளியிட்டுள்ள துருக்கிய அரசு குர்திஸ் தரப்புடன் தாம் ஒருபோதும் சமரசம் செய்யத் தயாராக இல்லை எனவும் அது ஒரு பயங்கரவாத அமைப்பெனவும் தெரிவித்துள்ளது.

# வட அயர்லாந்தில் மீண்டும் வன்செயல்

(13.06.99)

வட அயர்லாந்தின் தலைநகரான பெல்பாஸ்றிற்கு அருகே கடந்த செவ்வாய் அன்று சுமார் நூறு இளைஞர்களை கொண்ட் குழுவொன்று வன்முறைகளில் ஈடுபட்டுள்ளது. இக்குழுவினர் எரிகுண்டுகளை வீசியும் கற்களால் வீசியும் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். இவ் வன்முறை காரணமாக பெல்பாஸ்ற் நகரில் சிறிய அளவிலான பதட்டம் நிலவியது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கை முடிவடைந்ததன் பின்னர் ஏற்பட்ட வன்முறை இது என்பதால் இவ் வன்முறை குறித்த செய்திகளுக்கு முக்கியத்துவம் எழுந்துள்ளது.

# ஜூன் மாதத்தில் உலகில் நடைபெறும் தேர்தல்கள்

ஜூன் 10—13 வரை ஐரோப்பிய யூனியன் பாராளுமன்றத்திற்கான தேர்தலும், ஜூன் 13ல் பெல்ஜியம் பாராளுமன்ற தேர்தலும் அதேதினம் லக்சம்போர்க் பாராளுமன்ற தேர்தலும், ஜூன் 15ல் மலாவி (Malawi) பாராளுமன்ற தேர்தலும், ஜூன் 16ல் கொக் தீவுகளின் பாராளுமன்ற தேர்தலும், ஜூன் 25ல் வெனிசுலாவில் அரசியலமைப்பிற்கான கூட்டமும், ஜூன் மாதத்தில் நிஜீர் (Niger) சர்வசன வாக்கெடுப்பும், ஜூலை மாதத்தில் குவைத்திற்கான ஜனாதிபதி தேர்தலும் நடைபெறுகின்றன.



தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாபோ எம்பிக்கி மக்களை வாழ்த்தியபோது...

## நேட்டோ அமைதிப்படை தளபதி பிரிஸ்ரினா வருகை

பிரிஸ்ரினா (Pristina) விமான நிலையத்தை துருப்புக்கள், கவச வாகனங்கள், உலங்குவானூர்திகள் சுற்றிவளைத்து பாதுகாப்பு வழங்க அங்கு விஜயம் செய்த நேட்டோ அமைதிப்படைத் தளபதி மைக்கல் ஜக்சன், கொசோவோவிற்கான சர்வதேச சமாதானத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமபடி சகல தரப்பினருக்கும் அழைப்புவிடுத்தார்.

# வட ஆபிரிக்க நாடுகளுக்கு எகிப்திய ஜனாதிபதி விஜயம்

எகிப்திய ஜனாதிபதி முபாரக் கடந்த சனிக்கிழமை அல்ஜீரியாவிற்கு விஜயத்தினை மேற்கொண்டார். அவர் அல்ஜீரிய பயணத்தைத் தொடர்ந்து மொரோக்கோ (Morocco) இற்கு விஜயத்தினை மேற்கொண்டார். முபாரக் அல்ஜீரியாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் கூட்டம், முஸ்லிம் சமூகம், மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் பற்றி அல்ஜீரிய அரச தலைவருடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். மொரோக்கோவில் எகிப்திய—மொரோக்கோ உயர்மட்ட குழுவின் வருடாந்த கூட்டத்திலும் அவர்கலந்து கொண்டார்.

இக் கூட்டத்தில் அரசியல், பொருளாதார விடயங்கள் ஆராயப்பட்டன.

# ரஷ்ய ஏவுகணை பிரிவுக்கு சீன இராணுவ ஜெனரல் விஜயம்

சீன மத்திய இராணுவ ஆலோசனைச் சபையின் பிரதித் தலைவர் சங் (Zhang) ரஷ்ய ஏவுகணை பிரிவுக்கு June 12ம் திகதி விஜயம் ஒன்றை மேற்கொண்டார். சங் (Zhang) ரஷ்ய இராணுவ அதிகாரிகளைச் சந்திப்பதற்காக வால்டிவோஸ்ரோக் (Vladivostok) என்னுமிடத்திற்குச் சென்றார். நடப்பு வருடங்களில் ரஷ்யா, சீனா போன்றவை தங்களுக்கிடையிலான நல்லுறவில் முன்னேற்றம் கண்டு வருகின்றன. சீன இராணுவ அதிகாரி ரஷ்யாவில் தங்கியிருந்த காலத்தில் பிரதம மந்திரி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரோடு நேரடி பேச்சுவார்த்தையிலும் ரஷ்ய ஜனாதிபதியுடன் 30 நிமிட தொலைபேசி உரையாடலையும் மேற்கொண்டார்.

# ஏவுகணை எதிர்ப்பு ஆயுதப் பரிசோதனைக்கு ஏழாவது தடவையாக முயற்சி

ஏவுகணை எதிர்ப்பு றொக்கற்றான தாட் (Thaad)டினை ஏழாவது தடவையாக எதிர்வரும் செவ்வாயன்று பரிசோதிக்க உள்ளதாக அமெரிக்காவின் பென்ரகன் அமைப்பு அறிவித்துள்ளது. முன்னதாக ஆறு தடவைகள் இவ்வாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவையாவும் தோல்வியில் முடிவடைந்தன.

தாட் எனப்படும் இந்த றொக்கற்றானது லொக்கீற் மாட்டின் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பான பரிசோதனைகள் ஆறு தடவைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் வெற்றிகரமான இலக்கினை அச்சோதனைகள் எட்டவில்லை. 1992ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த றொக்கெற் தயாரிக்கும் திட்டம் வெற்றிபெற்றால் கண்டம்விட்டுக் கண்டம் தாவும் நடுத்தர ஏவுகணைகளில் இருந்து படைத்தளங்களைக் காத்துக் கொள்ள முடியும் என அமெரிக்கா நம்புகிறது. இதற்கு முன்னர் நடைபெற்ற சோதனைகளுக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகி இருக்கிறது.

அடுத்த வருடத்திற்குரிய வரவுசெலவுத் திட்டத்தில் தேசிய மட்டத்திலான ஏவுகணைப் பாதுகாப்புத் தொகுதி ஒன்றினை உருவாக்குவதற்கு 6.6 பில்லியன் டொலர்களை ஒதுக்கவிருப்பதாக் ஜனாதிபதி கிளின்டன் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## பெனாசிரின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான பெனாசிரின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததையடுத்து பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன், அவர்களில் பலரைக் கைது செய்தும் உள்ளனர். நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் மாநில ஆளுநரின் வீட்டைச் சுற்றிப் போடப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்களை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட வேளையிலேயே பொலிசாருடனான கைகலப்புத் தோன்றியது. கடந்த செவ்வாயன்று இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சிறை வைக்கப்பட்டுள்ள பெனாசிரின் கணவரை விடுதலை செய்யக் கோரியே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

## சிலி (Chile) இடதுசாரி தலைவரை ஏற்க தயார்

1973 ஆண்டிற்குப் பின்னர் முதன் முறையாக ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரி சோசலிசக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் முன்னணியில் இருப்பதாக நாட்டின் கடற்படைத் தளபதி கருத்துத் தெரிவித்தார். சோசலிச தலைவர் றிகாடோ லிகோஸ் (Ricardo lagos) ஜனாதிபதி தேர்தலில் முன்னணியில் நிற்கின்றார். இவருடைய தலைமைத்துவம் தரமானதாகவும், உலகத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகவும், திறமையானதாகவும் இருக்குமென்று கடற்படைத் தளபதி நம்பிக்கை தெரிவித்தார்.

## ஜப்பான் கடன் வங்கியில் திடீர் புலன்விசாரணை

நீண்டகால கடன் வங்கியில் (LTCB) திடீர் புலன் விசாரணையை மேற்கொண்ட பரிசோதகர்கள் கடன் தொடர்பான பிழையான பத்திரங்கள், சட்டரீதியற்ற கடன் கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்தனர். இவ்வங்கியில் 58.7 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி நடந்திருப்பதாகவும் இம் மோசடி தொடர்பாக வங்கியின் முன்னாள் தலைவர், பிரதி தலைவர்கள் இருவர் இரகசிய பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். இவ் வங்கி 1952ல் ஆரம்பிக்கப்பட்டது.


அன்புடன் அழைக்கின்றோம்

ALLO COM
ஆதரவில்
திருமகள் மூவிஸ்
வழங்கும்

உதயம்

திரைப்படத் தொடக்கவிழா

இடம்: PKM CINEMA
7, Rue Max Dormoy,
75018 Paris.

காலம்: 19.06.1999

நேரம்: 17 மணி

- ரவி - நிரு - சுதா - சுதன்ராஜா

உலக மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும்
தமிழ் தொலைபேசி அட்டை

# கார்த்திகன் கோல்

எமது தொலைபேசி நிலையத்தில் 10 'கார்த்திகன்கோல்'அட்டைகளுக்குமேல் வாங்குபவர்களுக்கு ஒரு அட்டை அன்பளிப்பாக வழங்கப்படும்.

**இந்தியா, இலங்கைக்கு தொடர்புகொள்ளக்கூடிய வாடிக்கையாளர்கள் Call Asia என்று கேட்டுவாங்கவும்.**




## கார்த்திகன் கோலில் வேலை வாய்ப்பு

100 இற்கு மேற்பட்ட பணியாளர்கள், பாரிஸ், பாரிசின் புற நகரங்களிலிருந்தும் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் 10.06.1999-10.07.1999 திகதிக்குள் விண்ணப்பிக்கலாம்

முக்கிய குறிப்பு:
★ பிரெஞ்சுமொழி கதைக்க, வாசிக்கத் தெரிந்திருத்தல்வேண்டும்.
★ வேலை செய்யக்கூடிய அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்வேண்டும்.

ஏனைய விபரங்களுக்கு:
**கார்த்திகன் கோல் சர்வதேச தொலைபேசி நிலையம்**




| | | இரவு | பகல் |
|---|---|---|---|
| இலங்கை | – | 60MN | 45MN |
| இந்தியா | – | 60MN | 45MN |
| பங்களாதேஷ் | – | 60MN | 45MN |
| மகராப் | – | 80MN | 70MN |
| ஆபிரிக்கா | – | 45MN | 40MN |
| ஐரோப்பா | – | 300MN | 150MN |
| கனடா | – | 300MN | 150MN |
| U.S.A | – | 300MN | 150MN |
| பாகிஸ்தான் | – | 60MN | 45MN |

இன்னும் பல நாடுகள்!
அதிக நிமிடங்கள்!
தெளிவான தொனி!

இத்தனையும் சேர்ந்த ஒரு தமிழ்
தொலைபேசி அட்டை

## கார்த்திகன் கோல்

### எமது கார்த்திகன் கோல் நிலையங்கள்

**KARTHIGAN CALL**
178, Rue de Fg St. Denis
75010 Paris
M°: La Chapelle *or* Gare du Nord
Tel: 01 53 26 94 54

**KARTHIGAN CALL**
69, Rue Marx Dormoy
75018 Paris
M°: Marx Dormoy
Tel: 01 40 38 37 90

**KARTHIGAN CALL**
47, Rue de la Chapelle
75018 Paris
(Office)
M°: porte de la Chapelle
Tel: 01 4034 40 95

Pub FR 23020

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# 'கெடுகுடிகளே சொற்கேளுங்கள்'

'கெடுகுடி சொற்கேளாது, சாகிறவன் மருந்துகுடியான்' என்பது தமிழ் வழக்கிலுள்ள ஒரு பழமொழியாகும். ஆனால் கெடுகுடிகளுக்குக்கூட தார்மீக மன்னிப்பளிப்பதற்கு விடுதலைப்புலிகள் விடுத்த பகிரங்க அழைப்பினை சமாதானத்தை விரும்பும் எந்த சக்திகளும் பாராட்டாமல் இருக்கமுடியாது. காலத்திற்குக் காலம் போர்வெறிக்குரலை நிஜமாகவும், சமாதானத்தின் குரலைப் போலியாகவும் எழுப்பிவரும் பேரினவாதத்தின் அடிவருடிகளாக செயற்பட்டுவரும் தமிழ் குழுக்களுக்கே விடுதலைப் புலிகள் இந்தப் பகிரங்க அழைப்பினை விடுத்துள்ளார்கள். அதி தீவிரமான பயங்கரவாத அரசிற்கு முண்டுகொடுத்தவாறு தமிழ் தேசியத்தை சிதைத்து அவர்களின் களவில் மண்ணை அள்ளிப் போடுவதற்கு முனைப்புக்கொண்டுள்ள இந்தச் சக்திகள் விடுதலைப் புலிகள் விடுத்துள்ள வேண்டுகோளிற்கு இனியாவது செவிசாய்ப்பார்களேயானால் ஓரளவு தப்பிக்கொள்ள முடியும் என்பது யதார்த்த நிலை.

பொதுவாக விடுதலைப்புலிகள் சமாதானத்திற்காக குரலெழுப்பும் போதெல்லாம் அதனை அவர்களின் பலவீனமான ஒரு நிலை எனக் கருதும் சிங்களப் பேரினவாதத்தின் அடிவருடிகளாக இக்குழுக்கள் இருப்பதால், இம்முறை வெளிப்பட்ட இந்த அழைப்பில்கூட அவர்கள் தமது 'ஜனநாயக சந்தேகத்தை' பூதக்கண்ணாடி வைத்துத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். தனிநாடே ஒரே கொள்கையென ஆரம்பத்தில் தமிழ்த்தேசியத்திற்கு 'பூச்சுற்றிய' இந்த சக்திகள் இன்று தமிழர் தாயகமென்பது யதார்த்த நிலைக்கு ஒவ்வாது என ஞானோதயம் பெற்றுள்ளனர் சிறிலங்கா அரசு போடும் எச்சில் எலும்புத்துண்டுகளில் தமது வாழ்வினை ஓட்டிவருவதன் விளைவுதான் இந்த ஞானோதயம் என்பதும் மறைபொருளான விடயமல்ல. ஆனால் இளைய சமூகத்தை தாம் செல்லும் அப்பட்டமான துரோகப் பாதையிலேயே வழிநடத்துவதற்காக இக்குழுக்களின் தலைமைத்துவங்கள் செயற்படுவதை அதன்கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு வெளிப்படுத்தியுள்ள விடுதலைப்புலிகளின் இந்த அறிவிப்பானது அட்டூழியங்கள் செய்யும் இக்குழுவினரிடம் மானசீகத் தமிழனாக' இருக்குமாறு தார்மீக விளக்கம்கொடுத்துள்ளது. ஆயினும் தலைமைத்துவங்களோ புலிகளின் இந்த அறிவிப்பை ஏற்றுக்கொள்ளாது துரோகப்பாதையிலேயே செல்வோமென அடம்பிடிப்பது அவர்களது அறிக்கைகள்மூலம் புலப்படுகின்றது. இவ் அறிக்கைகளில் ஜனநாயகம் என்பதற்கு புதிதான கருப்பொருளை இவர்கள் கொடுக்க முனைவது வேடிக்கையிலும் வேடிக்கை. அர்த்தமற்ற அவலச் சாவிற்கு இலக்காகி துரோகிகள் என்ற பட்டத்துடன் மரணிப்பதைவிடுத்து விடுதலைப்புலிகளின் இந்தப் பகிரங்க வேண்டுதலுக்கு செவிசாய்த்து 'தமிழர்களாக' வாழ்வதற்கு இக்கூலிக்குழுவினர் மனந்திரும்பவேண்டும் என்ற தமிழ் தேசியத்தின் அவாவிற்கு விடுதலைப்புலிகள் உருவாக்கம்கொடுத்ததுதான் இந்த பகிரங்க அறிவிப்பு. ஆனால் தமிழ்த்தேசியத்தின் இந்த அவா நிறைவேறாவிடில் அவலமான அழிவுகள்தான் அவர்களைத் துரத்தப்போகின்றதென்பதும் தமிழ்த்தேசியத்திற்குத் தெரியாததல்ல.

## வண. குருமார்கள் - இராணுவ ஜெனரல்களின்

# இராணுவச் சிந்தனை

* சிறிலங்காவின் மொத்த வெளிநாட்டுக்கடன் சுமார் 1000 பில்லியன் ரூபாய்கள் (1 பில்லியன் 100 கோடி)
* ஒவ்வொரு சிறிலங்கா குடிமகனும் 50,000 ரூபாய் கடன் சுமையுடன்தான் பிறக்கிறான் (சிறிலங்கா வாங்கிய கடனின் சராசரி)

- Mid week mirror (09.06.99)

## பார்வை

கொக்கிளாய்க் கிராமத்தைவிட்டு சிங்களவர்கள் (சிங்கள குடியேற்றவாதிகள்) கூட்டம் கூட்டமாக வெளியேறி அருகில் உள்ள சிறீபுரவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். இராணுவப் பாதுகாப்பில்-கடல்படையின் கண்காணிப்பில் கொக்கிளாய் தமிழர் கிராமத்தில் குடியமர்த்தப்பட்ட சுமார் 2000 சிங்களவர்கள் 300 படகுகளில் தமது 'மீன் பிடி' நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். கடந்தவாரம் இவர்களில் சிலர் இராணுவ வாகனம் ஒன்றில் பயணம் செய்தபோது கிளேமோர் தாக்குதலுக்கு உள்ளாகிக் கொல்லப்பட, இதுகாலவரையும் 'தமக்குள் இருந்த' பாதுகாப்பு உணர்வு இல்லாது போனதால் சிங்களவர்கள் இடம்பெயரத்தொடங்கினர்.

இவ் இடப்பெயர்வுக்கு எக் காரணங்கள் இருப்பினும் இவ் இடப்பெயர்வைத் தடுக்க சிங்கள அரசும் அமைப்புக்களும் காட்டும் அதீத ஆர்வம் அச்சமூட்டுகின்றது.

அ. கொக்கிளாயிற்கு மீன்பிடி அமைச்சரை உடனடியாக அனுப்பும் சந்திரிகா, மீனவர்களைத் தொடர்ந்தும் அங்கு இருந்து தொழில் புரியுமாறு 'மன்றாடுகின்றார்'

ஆ. 'சர்வோதயம் போன்ற அமைப்புக்களும், பௌத்த பிக்குமாரும் இவ் இடம்பெயர்ந்த (தமிழர் பிரதேசத்தில் பலாத்காரமாகக் குடியேறி விரட்டப்பட்ட) மக்களை பராமரிக்க நிதி-உணவு உடை சேகரிப்பு இயக்கங்களை நடாத்துகின்றனர்.

கொக்கிளாய் சிங்கள குடியேற்றவாதிகளின் வாழ்நிலையை விபரித்து சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்து வெளியிடுகின்றன. புலிகளினால் விரட்டப்பட்ட சிங்களவர்களாக இவர்களை இப் பத்திரிகைகள் விபரிக்கின்றன.

இச் சூழ்நிலையானது நிறுவனமயப்படுத்தப் பட்டுள்ள சிங்கள இனவாதத்தின் அடுத்த உதாரணமாகும். சிங்கள பேரினவாத அமைப்பின் பௌதீக அமைப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது முழுச் சிங்கள இயந்திரமும் 'இயல்பான எதிர்ப்பை பிரதிபலிப்பதை' 'கொக்கிளாய்' விடயங்கள் புலப்படுத்துகின்றன.

7 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வீடு-வாசல்களைவிட்டு விரட்டப்பட்டபோது சிங்களம் கண்ணீர் சிந்தவில்லை. 'சர்வோதயம்' போன்ற அமைப்புக்களோ-சிங்கள மதத் தலைவர்களோ இவ் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்நிலை பற்றி சிந்திக்கவில்லை. மடுவைவிட்டு பலாத்காரமாக இடம்பெயர்ந்த தமிழ்மக்களைச் சிங்கள அரசபடைகள் விரட்டியபோது நாங்கள் ஒரு எதிர்ப்புக்குரலைக் கேட்கவில்லை. சிங்களப் பத்திரிகைகள் சிறப்புக் கட்டுரைகள் வெளியிடவில்லை. ஆனால் தமிழர் வாழ்விடத்தினை பலாத்காரமாக ஆக்கிரமித்து இராணுவ-கடற்படைப் பாதுகாப்புடன் வாழ்ந்த சிங்கள மீனவர்கள் பீதிகொண்டு ஓட்டம் பிடிக்கும்போது முழுச் சிங்கள இயந்திரமும் ஏதோவகையில் செயல்படத்துடிக்கிறது. இது நிறுவனமயப்படுத்தப்பட்ட சிங்கள இயந்திரத்தைக் காட்டுகிறது.

கொக்கிளாய் விடயத்தை, மடுவில் தமிழர் விரட்டப்பட்டதிற்கு புலிகள் கொடுத்த பதிலடி என சிங்கள அமைச்சர் விபரிக்கின்றார். இச் சிங்கள மீனவர்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ மதபிதா ஜெயவர்த்தனா கொக்கிளாயில் இம் மீனவர்கள் இருந்தால் அவர்கள் படுகொலை செய்யப்படுவார்கள் என்பதற்கான எச்சரிக்கையை புலிகள் விடுத்துள்ளனர் எனக் கூறுகின்றார். ஆனால் இவரும் கொக்கிளாய், தமிழர் பிரதேசம் என்பதனையோ அல்லது அங்கு இராணுவ-கடற்படை பாதுகாவலில் இம் மீனவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதனையோ சுட்டிக்காட்டவில்லை. கடந்தவாரம் இடம்பெற்ற தாக்குதல் இராணுவ வாகனம் மீதுதான் இடம்பெற்றது. ஆனால் அதில் பயணம் செய்தவர்கள்தான் இம் மீனவர்கள் என்பதைக்கூட இவர்கள் குறிப்பிடவில்லை. சிங்கள கடற்படை இம் மீனவர்களை கடல் உளவுப் பணிகளுக்கு ஈடுபடுத்துவதை இத் தலைவர்கள் தெரியப்படுத்தவில்லை.

மாறாக புலிகளுக்கும்-தமிழர்களுக்கும் எதிரான கருத்துக்களைக் 'கக்கும்' களமாக கொக்கிளாய் சம்பவத்தை சிங்களம் பயன்படுத்துகின்றது.

இதையொத்த நிகழ்வு யால விலங்குகள் சரணாலயப் பகுதியில் இடம்பெறுகின்றது. இக்காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக செயற்பட்டுவருகின்றனர் என்ற அறிவிப்புடன் இப் பிரதேசத்தில் மீள இராணுவத்தை சிறிலங்கா குவித்துள்ளது.

வணக்கத்திற்குரிய பௌத்த பிதா ஒருவரின் நேரடி வழிகாட்டலில் யால பகுதிக்கு இராணுவ குவிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழத்தின் எல்லைப்பகுதிக் காடுகளை சிங்களமயப்படுத்தும் தமது திட்டங்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கு இராணுவ குவிப்பை உள்ளூர் சிங்கள-பௌத்த சக்திகள் பயன்படுத்துகின்றன. இது சிங்கள இயந்திரத்தின் இனவாதம் தொடர்பான ஆழமானதும், விரிவானதுமான பார்வையைப் புலப்படுத்துகின்றது. அவர்கள் போரைப் பற்றி தெளிவாகச் சிந்திக்கின்றனர். கொக்கிளாய் போன்ற தமிழீழத்தில் மையப்பகுதிகளையும் 'யால' (Yala) போன்ற எல்லைப் பகுதிகளையும் பாதுகாப்பது போரை வெல்வதற்கான தந்திர உபாய சிந்தனையில் முக்கியமானது. இதனை சிங்கள இராணுவ ஜெனரல்கள் மட்டுமல்ல பௌத்த பிக்குகளும் உணர்வார்கள்.

— ராஜா

## எதிரொலிகள்

### வாரம் தவறாமல் வரவேண்டும்

இனிய ஈழமுரசே:-

நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் அருமை. 'மண்ணாறு ஒரு வீரவரலாறு' இது உண்மையிலேயே ஒரு பெரிய வீரவரலாறுதான் இதைப் பார்க்கும்போது சில நிகழ்வுகள் நெஞ்சை உருக்குகின்றன. அடுத்து, சிறுவர் முற்றப் பகுதியில் அறிஞர் முற்றம், அறிவியல் முற்றம், அறிந்துகொள்ளுங்கள் என்பன மிக மிக வரவேற்கத்தக்கது. எனவே எங்கள் இனிய ஈழமுரசே நீ ஒவ்வொரு கிழமையும் புதன் அன்று புறப்பட்டுவா. இரண்டு, மூன்று கிழமைகள் பிந்திக் கிடைத்தது. நான் மிகவும் கவலை அடைந்தேன். நான் மட்டும் அல்ல, இன்னும் பலர். வாரந்தவறாமல் நீ வருவதை ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்! எனவே நீ தாமதிக்காமல் வந்து எனது கரம் சேர்வாய் என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன்.

அன்புடன்
சிந்துசன்
Essen

### மறுதலையாகிவிட்டதே!

ஆசிரியர் ஈழமுரசு,

ஈழமுரசு முழக்கம் 224ல் பெர்லின் தமிழாலயத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாபற்றிய அறிக்கையில் (கடைசி முதற்பத்தி) சில தவறான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

1. பெர்லினிலிருந்து மருத்துவத்துறையில் உயர்கல்வி கற்கத்தேர்வாகிய மாணவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினாலேயே மேற்படி விழாவில் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் பெர்லின் தமிழாலயத்தின் மாணவர்கள் அல்ல.
2. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பொறுப்பாளர் உயர்திரு. இரா. நாகலிங்கம் அவர்களுக்கு பெர்லின் தமிழாலயத்தின் நிர்வாகியும், ஆசிரியர்களும் ஆறாவது ஆண்டுவிழா ஞாபகார்த்தப்பரிசினை வழங்கினார்கள்.

அது தவறாக பிரதம விருந்தினரே இவர்களுக்கு வழங்கினாரென மறுதலையாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் இத்துடன் இணைத்துள்ள சரியான அறிக்கையை ஈழமுரசில் பிரசுரம் செய்யுமாறு அனைத்துத் தமிழாலயப்பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்
கருணாரஞ்சினி
பெர்லின்.

# சுவரொட்டிகள் - அரசியல்வாதிகள்-யுத்தம்

இப்போதெல்லாம் கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் ஏராளமான சுவரொட்டிகள் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான சில பலரின் கவனத்தையும் கவர்ந்துள்ளன. ஒரு சுவரொட்டியில் 94 முதல் 99 வரை எனத் தலைப்பிட்டு 12,000 இராணுவத்தினர் இறந்துள்ளனர் என எழுதப்பட்டுள்ளது. இந்த இறப்பு எண்ணிக்கையைக் கூறும் சுவரொட்டியைப் பார்க்கும்போது இந்த யுத்தம் அவசியம்தானா என்ற எண்ணம் பலர் மத்தியிலும் ஏற்படத்தொடங்கியுள்ளது. இந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தபின் இன்றுவரையான காலத்தில் ஏற்பட்டுள்ள இராணுவ உயிர் இழப்புத்தான் இங்கு கூறப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை சாதாரணமானதல்ல. இராணுவப் பாஷையில் சொல்லப்போனால் ஓர் படைத்தொகுதியும், மற்றொன்றின் 1/5 பகுதியும் அழிந்துபோயுள்ளன. கொழும்பு நகரிலோ அல்லது கிராமப் பகுதியிலோ இளைஞன் ஒருவன் பாதையால் போய்க்கொண்டிருக்கையில் சுவரில் காணப்படும் இச் சுவரொட்டிகளில் இறந்துபோன படையினரின் எண்ணிக்கையை பார்த்தானாகில் பயத்தினால் நிச்சயம் இரண்டடி பின்னால்தான் எடுத்துவைப்பான். அது சாதாரணமே. இதேவிடயங்கள் ஏதாவது ஓர் பத்திரிகையில் வெளியாகியிருந்தால் இராணுவத்தின் மனோ தைரியத்தைச் சிதைக்கும் செயல் என்றும் புலிகளுக்குத் தகவல் வழங்கும் செயல் என்றும் கூறி அப்பத்திரிகை கண்டனத்திற்குள்ளாக்கப்படும். இந்த சுவரொட்டிகளுக்கு இதுவரை இராணுவத் தரப்பிலிருந்து மறுப்புக்கள் எதுவும் வரவில்லை. இராணுவப் பேச்சாளரும் மௌனமாகவே இருக்கின்றார். சிலவேளைகளில் இதைப் பற்றி அவர்களுக்குத் தெரியாமல் இருக்குமோ? ஏன் என்றால் இராணுவத்தின் உளவுச்சேவை அப்படியான நிலையில்தான் இருக்கிறது. இன்று நாட்டு மக்களுக்கு ஓர் புதிய சிக்கல் தோன்றியுள்ளது. ஒருபுறம் 94 முதல் 99 வரை 12,000பேர் இறந்தனர் என்ற சுவரொட்டியும், மறுபுறம் 75% யுத்தம் முடிவடைந்துவிட்டது. 25% முடிக்கவும் மிகுதியான பகுதியைக் கைப்பற்றிக்கொள்ளவும் இளைஞர்களை படையில் சேர அழைக்கும் அறிவித்தல்கள் எதை நம்புவது? எதை ஏற்பது?

எமது இளைஞர்கள் படையில் சேருவது தமது பெயர்களுக்குப் பின்னால் சேரும் பதவிகளையும் கருத்திற்கொண்டுதான். ஆனால் ஒவ்வொரு பதவியும் அவர்களை வந்தடைய பல நீண்ட ஆண்டுகள் செல்கின்றன. வெளியே உள்ள இளைஞர்கள் ஒருவித கற்பனா வாதத்தில் உள்ளே வருகின்றனர். அவர்களது கனவு உள்ளே வந்தவுடன் கலைந்து சிதறுகின்றது. இதுவும் அவர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடக் காரணமாகிறது. சுமார் இரண்டு தசாப்தங்கள் எமது மக்கள் யுத்தத்தின் பாதிப்பினை அடைந்துவருகின்றன. அரசியல்வாதிகளோ ஒவ்வொரு ஆறு வருடங்களிலும் தாம் பதவிக்கு வந்தால் யுத்தத்தை முடிப்பதாகக் கூறி பதவிக்கு வருகின்றனர். யுத்தத்தை பிரச்சாரத்திற்கான பகடைக்காய்களாக்கி வியாபாரம் செய்கின்றனர். ஆனாலும் யுத்தம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

இந்த இனப் பிரச்சினை யுத்தத்தின் மூலம் மாத்திரம் தீர்க்கப்படமுடியாது என்பது எப்போதோ உணர்த்தப்பட்டுவிட்டது. இதனை ஏனிந்த அரசியல்வாதிகள் உணர மறுக்கின்றனர்.

## சிங்களம் கூறும் சில...

- மாந்தன் -

## யுத்தத்தை நிறுத்த கோவில் எதற்கு?

யுத்தம் எனும் சொல் எமக்கு பழக்கப்படாத ஒன்றல்ல. 20 வருடங்களாக அதன் பிரதிபலனைத்தான் அனுபவித்து வருகிறோமே. இந்த அரசு வந்தவுடன்கூட அரசியல்பேச்சுக்களினூடாக ஓர் தீர்வு ஏற்படும் என எண்ணிக் கொண்டிருந்தவேளை அது உடைந்து மீண்டும் யுத்தம். இன்றுகூட இந்த யுத்தத்தின் முடிவுக்காகக் காத்திருக்கின்றோம். ஒவ்வொரு அரசுகளும் மாறும்போதும் யுத்தத்தை நிறுத்த ஒவ்வொருவிதமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் மேற்கொள்ளுகின்றன. இப்போது புதிதாகத்தோன்றியுள்ளது கோவில் கட்டுவதென்பதாகும்.

இந்தியாவில் அமைந்திருக்கும் விஷ்ணு ஆலயத்தின் கோபுரம் இலங்கையைப் பார்த்துக்கொண்டிருப்பதாகவும், அதன் நிழல் இலங்கையில் விழுவதால்தான் யுத்தம் தொடர்வதாயும் கூறும் எமது பாதுகாப்புப் பிரதானிகள் அந்த ஆலயத்தின் தோஷம் நீங்க முத்துராஜவெல பகுதியில் ஒரு விஷ்ணு ஆலயம் கட்டவேண்டும் எனத் தீர்மானித்துள்ளனர். அதற்காக 60 கோடி ரூபாய்களை வர்த்தகர்களிடமிருந்து வசூலிக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

விஷ்ணு கோவில் ஒன்றை அமைப்பதன் மூலம் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர இவர்கள் எண்ணியிருந்தால் கடந்த 20 வருடங்களாக எமது இளைஞர்கள் தொகை தொகையாக கொல்லப்பட்டபோது பார்த்துக்கொண்டிருந்ததேன். அன்றே இதனைச் சாதித்திருந்தால் எப்போதோ இந்த இழப்புக்கள் தடுக்கப்பட்டிருக்குமே. பல ஆயிரம்பேர் உயிர் இழந்தபோது, பல ஆயிரம்பேர் அங்கவீனர்களானபோது, பல ஆயிரம் பேர் வீடுவாசல்களை இழந்து தவித்தபோது இன்று கோயில்கட்ட முனைவோர் போனதெங்கே?

செய்யவேண்டியவற்றைப் பின்தள்ளி அறிய முடியாத சக்திகளுக்கு எமது நாட்டை ஒப்படைப்பதற்கு இவர்கள் ஏன் தயாராகிறார்கள். இது யாருடைய தேவைக்காகவோ? எப்படியாயினும் எமது பௌத்த தலைவர்கள் கோவிலைக்கட்டுவதால் யுத்தம் முடிவடையும் எனக் கருதுவது இனத்திற்கு ஏற்பட்டுள்ள ஓர் ஆபத்தே.

- லங்கா தீபவில் ஒருவர்


# சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்

# Telecom international

சர்வதேச தொலைத்தொடர்பு வலையின் பங்காளர்கள் நாம்!

| | | |
|---|---|---|
| இலங்கை | – | 61 நிமிடம் |
| இந்தியா | – | 65 நிமிடம் |
| கனடா | – | 300 நிமிடம் |
| அமெரிக்கா | – | 300 நிமிடம் |
| இங்கிலாந்து | – | 300 நிமிடம் |
| ஐரோப்பா | – | 200 நிமிடம் |




இன்னும் பல நாடுகளுக்கு அதிகளவான நேரத்தை T.I. தொலைபேசி அட்டை தருகின்றது.

158, Rue St-Maur,
75011 Paris.
Tel: 0153368120
0153360405
0153360313 (தமிழில்)
Fax: 0153360414
M°: Belleville / Goncourt

113, Rue de Crimée,
75019 Paris.
Tel: 0142067494
Fax: 0142493621
M°: Laumiére

67, Rue De L'ourcq,
75019 Paris.
Tel: 0140384338
Fax: 0140384336
M°: Crimée

Pub Fr23009

# தலைவரின் செவ்விகள்

⑥ முரசின் சிறப்பு ஆவணம்

1986ம் ஆண்டு பம்பாயிலிருந்து வெளிவந்த ஜெண்டில்மன் சஞ்சிகைக்கு தமிழர்களது தேசிய தலைவர் அளித்த செவ்வி. இந்திய அரசின் மத்தியத்துவத்தின்கீழ் ஜே.ஆர் தலைமையிலான அரசுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற அன்றைய காலகட்டத்தில் இந்தியாவின் பாத்திரம் பற்றிய தமிழர்களதும், புலிகளினதும் எதிர்பார்ப்பை தலைவர் வெளிக்காட்டியிருந்தார்.

(ஆ.ர்.)

கேள்வி: சில சூழ்நிலைகள் காரணமாக தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் மத்தியிலான உறவுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இந்தியா தனது ஆதரவை வாபஸ் பெற்றுக்கொள்கிறது என வைத்துக்கொள்வோம். அப்படியாயின் தனித்து நின்று போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நிலையில் இருக்கிறீர்களா?

பதில்: எமக்கு வேறெதாவது மாற்று வழி உண்டா? எமது இலட்சியத்தை அடையும்வரை நாம் போராடித்தான் ஆக வேண்டும். இந்தியாவின் அனுதாபம் எமக்குத் தார்மீக பலத்தைக் கொடுக்கிறது. ஆனால் இந்தியா தனது ஆதரவை நிறுத்திக்கொள்ளுமாயின் அதனால் எமது விடுதலைப் போராட்டம் நின்றுவிடப் போவதில்லை. இந்தியாவின் ஆதரவுடனோ அல்லது வேறெந்த வெளிநாட்டு சக்திகளின் உதவியுடனோ நாம்

அரசியல் அதிகாரம்பெறும் ஒரே நோக்கத்திற்காக அரசியல்வாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் இனத்துவேச விதைகளை விதைத்தார்கள். பெளத்த குருமார் பேரினவாதத்தையும் மதவெறியையும் தூண்டவிட்டார்கள்.

அரசியலில் ஈர்க்கப்பட்ட நான் பொலிசாரால் தேடப்பட்டுவந்தேன். இதனால் 19 வயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறி தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட நேர்ந்தது. அதிலிருந்து பெற்றோருடனான உறவுகளை நான் இழந்துவிட்டேன்.

கேள்வி: தமிழரின் தீவிரவாத போராட்டத்தின் சின்னமாக உங்களைச் சித்தரித்துக்காட்டுகிறார்கள். உங்களது இயக்கம்

என்னவென்றால், பேச்சுக்கள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க, மறுபுறம் மேலும், மேலும் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். எமது மீனவர்களைக் கொன்று அழிப்பதற்காக சிங்கள அரசு சிங்கப்பூரிலிருந்து பீரங்கிப் படகுளை வாங்கியிருக்கிறது. தரைப் படை, விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளுமே கூட்டாகச் சேர்ந்து தமிழர்களுக்கு எதிராக போர் நடவடிக்

என்ற முகமூடி அணிந்து நடிக்கிறார். ஜெயவர்த்தனாவின் இந்த கபட நாடகத்தால் இந்திய அரசு தான் விரும்பியது எதையுமே சாதிக்கமுடியவில்லை இதனால் ஒரு முரண்பாட்டு நிலை ஏற்பட்டிருக்கிறது. இரு தரப்பினரையும் ஒரு இணக்கத்திற்குக் கொண்டுவர இந்தியா முயற்சிக்கலாம். இவ் விசயத்தில் இந்தியா தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கேள்வி: ரொமேஷ் பண்டாரியுடன் நீங்கள் பேச்சுக்களை நடத்திய போது இதுபற்றிச் சொன்னீர்களா?

பதில்: ஆம். இதுபற்றிக்கூறினோம்.

கேள்வி: திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் விவசாயிகளை விரட்டிக்கலைத்துவிட்டு அப்பகுதிகளில் இராணுவம் சிங்களவர்களைக் குடியமர்த்துவதாக சில செய்திகள் கூறுகின்றன. போராளிகள் அமைப்புக்கள் ஏன் வெளிநடப்புச்செய்தன?

பதில்: தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ பயங்கரவாதமும், இனப்படுகொலையும் கட்டவிழ்த்து விடப்பட்ட காரணத்தினால்தான் நாம் வெளிநடப்புச் செய்தோம். அப்படியான ஒரு சூழ்நிலைதான் இப்பொழுதும் சிறிலங்காவில் தாண்டவமாடுகிறது.

கேள்வி: உங்களது அரசியல் தத்துவம் என்ன?

உங்களை பெரிதும் கவர்ந்த கெரில்லாப் போராட்டத் தலைவர் யார்?

பதில்: புரட்சிகர சோசலிசம் தான் எனது அரசியல் சித்தாந்தம். சோசலிசம் எனும்பொழுது வர்க்க வேறுபாடு ஒழிந்த, மனிதனை மனிதன் சுரண்டும் அநீதி நீங்கிய, சமத்துவ சமூக அமைப்பையே குறிப்பிடுகிறேன். இந்தப் புரட்சிகரமான சமுதாயத்தில்

# இந்தியா எம்மை அங்கீகரிக்கவேண்டும்!

எமது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. நாம் சாகும்வரை போராடியே தீருவோம். நான் இறந்துபோக நேருமாயின் இன்னுமொருவர் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுவார். மாவீரன் சுபாஸ் சந்திர போஸ் குறிப்பிட்டதுபோல, 'எந்த ஒரு விடுதலைப்போராளியும் தான் தனியாக நின்று சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது' எனது தலைமுறைச் சுதந்திரத்தை அடைய முடியாது அழிந்து போனால் அடுத்த பரம்பரை போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்லும்.

* * *

கேள்வி: சிங்கள மக்களின் நல்லாதரவைப் பெற நீங்கள் முயற்சி செய்கின்றீர்களா?

பதில்: சிங்கள மக்களின் ஆதரவைப்பெற நாம் சம்மானமான முயற்சிகளைச் செய்து வருகிறோம். ஆயினும், இனவாத அரசியல்வாதிகளும் பெளத்த குருமாரும் தமிழ் மக்களுக்கு எதிரான முறையில் சிங்கள மக்களின் மனதில் விஷத்தை ஊட்டி வருகிறார்கள். இதனால், எமது போராட்டம் நியாயமானதாக இருப்பினும் சிங்கள மக்களை எமது போராட்டத்திற்கு ஆதரவாக அணிதிரட்டுவது கடினமாக உள்ளது. எனினும் சிங்கள மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்கு நாம் தொடர்ந்து முயற்சிப்போம்.

கேள்வி: உங்களது குடும்பப் பின்னணி பற்றியும், குடும்பத்துடனான உங்கள் உறவு பற்றியும் கூறுவீர்களா?

பதில்: ஒருசாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். எனது தந்தையார் ஒரு அரச ஊழியர். எனக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்கள் திருமணமாகி குடும்பம் நடத்துகிறார்கள். இளம் பராயத்திலிருந்தே புரட்சிகர

உங்களை ஒரு மாவீரனாக வர்ணிக்கிறது ஒரு புரட்சிவாதி என்ற ரீதியில், இப்படியான தனிமனித வழிபாட்டினை நீங்கள் அனுமதிக்கலாமா?

பதில்: இப்படியான கருத்துருவ தோற்றப்பாடுகள் சித்திரிப்புகளுக்கு—என்னால் ஒன்றும் செய்ய இயலாதிருக்கிறது. ஒடுக்கப்பட்ட எனது மக்களின் சமூக விடிவும், அரசியல் விடுதலையுமே என்னை சதா ஆட்கொண்டுவரும் அக்கறைகளாகும். எனது விடுதலைப் பற்றை மக்கள் நன்கு அறிவார்கள். அதனால் என் மீது அவர்களுக்கு அபார நம்பிக்கையுண்டு. நான் அவர்களை சரியான பாதையில் வழிநடத்திச் செல்கிறேன் என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். இதனால் என்மீது ஆழமான அன்பைக் காட்டுகிறார்கள். என்னைப்பற்றிய தோற்றப்பாடுகள் மக்கள் என்மீதுகொண்ட அன்புணர்வின் வெளிப்பாடுகளாக இருக்கலாம்.

கேள்வி: சென்ற தடவை நீங்கள் டெல்லிக்கு விஜயம் செய்த பொழுது உங்களுக்கு அரசியல் சாதகமான முறையில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிக்க, சிறீலங்கா அரசாங்கம் இணங்கியது அல்லவா? இந்தப்போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டதை அடுத்து வன்முறை தணிந்து சமாதானம் நிலவக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை பிறந்துள்ளது என்று சொல்லலாமா?

பதில்: நீங்கள் எந்தக் கண்காணிப்புக் குழுபற்றி சொல்கிறீர்களோ எனக்குத் தெரியாது. அப்படி இந்தக் கண்காணிப்புக் குழு ஏதாவது அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கிறதா? ஜெயவர்த்தனா அரசின் ஆயுதம் தரித்த காடையர்கள் புரிந்த போர்நிறுத்த மீறல்கள் பற்றி இந்தக்குழு விசாரணை ஏதாவது நடத்தியிருக்கிறதா? உண்மை

வைகளில் ஈடுபட்டுவருகின்றன. இதுதான் உண்மை நிலை.

கேள்வி: அப்பொழுது இந்த சமாதான அணுகுமுறை தோற்றுவிட்டது என்றா சொல்லுகிறீர்கள்?

பதில்: சமாதானப் பேச்சுக்களால் உருப்படியான பலன்



எதுவும் கிட்டவில்லை என்பதே எனது கருத்தாகும்.

கேள்வி: இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை வாயிலாகத் தீர்வு காணும் சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை என்பது அதன் அர்த்தமா?

பதில்: அது எதனைப் பொறுத்தது என்றால்...

கேள்வி: இந்தியாவின் நிலையைப் பொறுத்தது... அப்படித்தானே?

பதில்: ஒருவகையில் ஆம்.

கேள்வி: மேலும் இரத்தக்களரியைத் தவிர்ப்பதென்றால் சமாதானப்பேச்சு மூலம் தீர்வு ஒன்றை காண்பதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும் என எண்ணுகிறீர்களா?

பதில்: கடந்தகால வரலாற்று அனுபவங்களிலிருந்து பார்த்தால் சிங்கள அரசு ஒரு நியாயமான இணக்கப்பாட்டிற்கு வரப்போவதில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லலாம். ஜெயவர்த்தனா ஒரு நாடகத்தை அரங்கேற்றி சமாதானப் பிரியன்

இந்தச் செய்திகள் உண்மையாக இருந்தால் உங்களது நிலைப்பாடு என்ன?

பதில்: நாம் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. போராட்டம் மூலமாகவே இராணுவத்தினரின் இத் திட்டத்தை முறியடிக்க முடியும்.

கேள்வி: தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் அணுகுமுறையும், இரு சாராருக்கும் இடையில் மத்தியத்துவம் வகிக்கும் இந்தியாவின் பங்கும் உங்களுக்குத் திருப்தியாக உள்ளதா?

பதில்: மத்தியஸ்தர் என்ற நிலையில் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் வாயிலாக ஒரு தீர்வுகாணவேண்டும் என இந்தியா நேர்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவின் அணுகுமுறை எமக்குத் திருப்தியை அளித்தபோதும் ஜெயவர்த்தனாவின் அணுகுமுறை ஆழமான ஏமாற்றத்தைக்கொடுக்கிறது. தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக்காண வேண்டும் என்ற இந்தியாவின் நல்லெண்ண முயற்சிக்கு ஜெயவர்த்தனாவின் ஆணவம் கொண்ட கடும்போக்கு ஒருபெரும் முட்டுக்கட்டையாக அமைந்துவிட்டது.

கேள்வி: அப்படியென்றால் திம்புப் பேச்சுவார்த்தையின் போது

மனித சுதந்திரங்களும் உரிமைகளும் பேணிப்பாதுகாக்கப்படும், மனித வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படும். சேகுவாராதான் என்னை மிகவும் கவர்ந்த கெரில்லாப் போராட்டத் தலைவர்.

கேள்வி: தமிழ் மக்களின் போராட்டத்தை எவ்வாறு வர்ணிப்பீர்கள்?

பதில்: தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

கேள்வி: சிங்கள அரசியல்வாதிகளும், பெளத்த குருமாரும் இனப்பிரச்சினையில் எத்தகைய பங்கு வகித்தார்கள் எனக் கருதுகிறீர்கள்?

பதில்: இந்தத் தேசியநெருக்கடியை உருவாக்கும் பொறுப்பில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் பெளத்த குருமாருக்கும் முக்கியமாக பங்குண்டு. அரசியல் அதிகாரம்பெறும் ஒரே நோக்கத்திற்காக அரசியல்வாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் இனத்துவேச விதைகளை விதைத்தார்கள். பெளத்த குருமார் பேரினவாதத்தையும் மதவெறியையும் தூண்டவிட்டார்கள். சிங்கள பெளத்த பேரினவாதச் சித்தாந்தமானது ஒரு பாரிய சக்தியாக சிங்கள மக்களைப் பற்றிக்கொண்டது. இதனால் தமிழர் விரோத அரசியல் வளர்ந்து இன்றைய இனப் பிரச்சினைக்கு மூல காரணியாக அமைந்தது.

கேள்வி: தமிழ்நாட்டில் உங்களது புகழ் மேலோங்குவதைக் கண்டு பயந்த எம்.ஜி.ஆர் உமா மகேஸ்வரனுக்கு பகிரங்கமாக ஆதரவளிப்பதாக சொல்லப்படுகிறதே?

பதில்: உண்மையில், அப்படி எதுவும் நிகழவில்லை.

(தொடரும்)

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி காருண்யா கருணாஹரமூர்த்தியை** பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## குறள் முற்றம்

**'நிறை உடைமை நீங்காமை வேண்டின்
பொறை உடைமை போற்றி ஒழுகப்படும்'**

நிறையுடைமை என்கின்ற குணம் மிகுந்தவன் என்ற பெருமை தனக்கு நீங்காமல் இருக்க வேண்டின், பொறுமை என்கின்ற குணத்தை போற்றிக் காக்கவேண்டும்.



**செல்வி சாருமதி செல்வநேசன்**
வயது: 07 (20.01.1992)
இடம்: கம்போர்க்,
ஜேர்மனி.

கிளி



1. கிளி பேசும்.
2. கிளி பச்சை நிறம்.
3. கிளியின் சொண்டு சிவப்பு
4. கிளி பறக்கும்.
5. கிளி அழகான பறவை.

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 34**

பிள்ளைகளே!
சொற்களைக் கண்டுபிடிக்க முயன்றுபாருங்கள்.
முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ╳ 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | ╳ 15 |
| 16 | 17 | ╳ 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | ╳ 24 | 25 |

**இடமிருந்து வலம்**

1. 1–5 அழித்தல் என்று பொருள்படும்.
2. 8–10 பணம் அல்லது பொருள் என்று பொருள்படும். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
3. 11–14 நன்றாக இனிக்கும். இதிலிருந்து சீனியும் உற்பத்தி செய்வார்கள்.
4. 16–17 பெண்ணின் பெயர். அழகானவர் என்று பொருள்.
5. 19–20 இதனால் மீன் பிடிக்கலாம்.
6. 21–23 ஒரு கிராமிய நடனவகை. நீங்களும் கூடி ஆடலாம். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.

**மேலிருந்து கீழ்**

7. 1–23 வட்டமாக இருக்கும். சில்லு என்றும் சொல்லலாம்.
8. 12–22 இரத்தம் என்றும் சொல்வர் இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
9. 3–13 படல் என்றும் சொல்வர்.
10. 4–19 எல்லையையும் குறிக்கும். வயல்களிலும் இதனைக் காணலாம். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
11. 20–25 குன்று என்றும் சொல்லலாம். இங்கு எழுத்துக்கள் தலைகீழாக உள்ளது.

**சொற்சிதறல் எண் முப்பத்தி மூன்றின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| கா | ர் | மே | க | ம் |
| ப் | ■ | ய் | ம் | த |
| பு | ளி | ப் | பு | ன |
| ழு | ய | ப | ■ | ச |
| தி | ய | ன் | மெ | ன் |

குறிப்பு:
*சொற்சிதறல் எண் 33ல் 19ம் இலக்கச் சதுரம் அடைக்கப்படுவதற்குப் பதிலாக தவறுதலாக 22ம் இலக்கச் சதுரம் அடைபட்டுவிட்டது என்பதை அறியத்தருகின்றோம். தவறினைச் சுட்டிக்காட்டியவர்களுக்கு நன்றி.*



## குட்டிக்கதை படிப்போம்

# எது கருணை?

நீண்ட காலத்துக்கு முன் ஓர் அரசன் ஒரு நாட்டை ஆண்டுவந்தான். அவன் தாராள மனமும் தயாள குணமும் கொண்டவன். எல்லா ஜீவராசிகளிடமும் அன்பும் இரக்கமும் காட்டுவான். அதற்கு அடையாளமாக அவன் தன் ஒவ்வொரு பிறந்த நாளன்றும் ஆயிரக்கணக்கான புறாக்களை விலைக்கு வாங்குவான். அவற்றைத் தன் கையாலேயே பறக்கவிடுவான். புறாக்கள் விடுதலை பெற்று சந்தோஷத்துடன் பறந்து செல்வதைக் கண்டு பூரித்துப்போவான்.

ஒரு சயமம் பிறந்த நாளன்று ஆயிரக்கணக்கான புறாக்களை ஒவ்வொன்றாக கையில் எடுத்து வானத்தில் பறக்கவிட்டுக்கொண்டிருந்தான். அப்போது ஒரு புறா மட்டும் அவன் கையை விட்டுப்போக மறுத்தது.

மன்னன் அதைத் தடவிக்கொடுத்து, 'உனக்கு விடுதலை கொடுக்கிறேன். சந்தோஷமாகப் பறந்துபோ' என்றான்.

புறா, 'மன்னா! நீ கொடுக்கப்போகும் ஒரு நாள் விடுதலைக்கா மகிழ்ச்சி அடைய முடியும்?' என்று கேட்டது. மன்னன் விழித்தான்.

'மன்னரே! பிறந்த நாளில் எங்களை வாங்கி விடுதலை அளிக்கிறீர்கள். எங்களை விற்பவர்கள் எங்களை வருஷம் முழுவதும் கூண்டில் அடைத்து வைக்கின்றனர். நீங்கள் இன்று விடுவீர். அவர்கள் உடனே பிடித்து கூண்டில் அடைத்துவிடுவர். ஆண்டு முடிவதற்குள் எங்களில் பலர் கூண்டிலேயே இறந்துவிடுவோம். உங்கள் கருணைச்செயல் எங்களுக்குப் பெருந் தொல்லையாகும்' என்று கூறியது.

மன்னன் உண்மையை உணர்ந்து அன்று முதல் புறாவிடும் வேலையைக் கைவிட்டான். எந்தப் பறவைகளையும் கூண்டில் அடைக்கக் கூடாது என்ற சட்டத்தையும் கொண்டுவந்தான்.

## அறிந்துகொள்ளுங்கள்

# ஓர்க்கிடுப் பூக்கள்



ஓர்க்கிடுகள், பொதுவாக சில மரங்களின்மீது வளரும் வண்ண மலர்ச்செடிகள். அவை பிற தாவரத்தின் மீது வளர்ந்தாலும், தங்கள் உணவைத் தாங்களே தயாரித்துக்கொள்கின்றன. சிலவகை ஓர்க்கிடுகள் நிலத்திலேயே வளர்கின்றன. ஓர்க்கிடுகள் வாழ்வதற்கு ஒரு வகை காளான் உதவி செய்கிறது. இது, ஓர்க்கிடுவினிடம் இருந்து தானும் சிறிது உணவைப் பெறுகிறது. ஓர்க்கிடின் விதை மிகமிகச் சிறியது. கண்ணுக்குத் தெரியாது. இது காற்றில் பறந்துசெல்லும். இது எங்கு விழுகின்றதோ, அங்கு தனக்கு உதவியான காளான் இருந்தால்தான் முளைக்கும்; இல்லையெனில் முளைக்காது.

அழகிற்காக இன்று ஓர்க்கிடுகளைக் கண்ணாடிப் பெட்டியில் வளர்க்கிறார்கள். வெள்ளை, இளஞ்சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், பழுப்பு எனப்பல நிறங்களில் ஓர்க்கிடுகள் அழகாக உள்ளன. ஓர்க்கிடுவில் பல இனங்கள் நறுமணமுள்ளவை.

இப்போது சுமார் 15,000 வகை ஓர்க்கிடுகள் உள்ளன. ஆர்க்டிக் பிரதேசம் தவிர எல்லா வெப்ப மண்டல நாடுகளிலும் ஓர்க்கிடு வளரும்.

## தகவல் முற்றம்

# விலங்குகள்!

| | |
|---|---|
| மிகப் பெரிய நீர் விலங்கு | - **நீலத் திமிங்கிலம்** |
| மிகப் பெரிய நில விலங்கு | - **ஆபிரிக்க காட்டு யானை** |
| இக்காலத்தில் வாழும் மிக உயரமான விலங்கு | - **ஒட்டகச் சிவிங்கி** |
| குரல் இல்லாத (கொடுக்காத) விலங்கு | - **ஒட்டகச்சிவிங்கி** |
| நீர் குடிக்காத விலங்கினங்கள் | - **கங்காரு, எலி, கோலா கரடி** |
| நீண்டகாலம் வாழும் விலங்கினம் | - **ஆமை** |
| தன் உடலை விட நீளமான நாக்கை உடைய விலங்கு | - **பச்சோந்தி** |
| மனிதனைத் தவிர நிறங்களை வேறுபடுத்தி அறியும் ஆற்றல் உள்ள விலங்கினம் | - **வாலில்லாக் குரங்கு** |
| பறக்கும் பாலூட்டி | - **வெளவால்** |
| பற்கள் இல்லாத பாலூட்டி | - **பேங்கோலின் எனப்படும் எறும்பு தின்னி** |
| உடலை விட நீளமான வால்கொண்ட விலங்கு | - **குரங்கு** |
| முற்றிலும் அழிந்துவிட்ட விலங்கினம் | - **டைனோசர்** |
| அழியக்கூடிய நிலையில் இருக்கும் விலங்கினம் | - **சிங்கவ குரங்கு** |

*செல்வி அருள்நேசன் லூட்ஸ் பிரின்ஸி (சுஜா)*
*வயது:10*
*பிரான்ஸ்*

# மாவீரர் கனவை நனவாக்கிய ஓயாத அலைகள்

கவச வாகனத்தை நெருங்கிய போராளிகளை நோக்கி முன்னரங்க காவல் நிலையில் நின்ற படையினரின் 50 கலிபர் வேட்டுக்களை தீர்க்கத் தொடங்கியது. அவ்வேட்டொன்றினால் அரவிந்தன் காலில் காயமடைந்தான். அதனால் அவனுடன் சென்ற போராளிகள் கவசவாகனத்தை விட, அரவிந்தனை காப்பாற்று



**மேஜர் அரவிந்தன்**
**(வேலங்கர் நவானந்தராசா)**
பொலிகண்டி, யாழ்ப்பாணம்

வதே முக்கியம் எனக் கருதினர். காயமடைந்த அரவிந்தனை மீட்டுவந்து மேலதிக சிகிச்சைக்காக இந்தியா கொண்டு செல்லத் தயாரானார்கள். ஆனால் இந்தியா கொண்டு செல்லும்வேளை, கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படை, படகினை சுற்றிவளைக்க மோதல் தொடங்குகின்றது. இன்றுபோல் அன்று வளர்ச்சியடையாத நிலையில் கடற்புலிகள். எனவே கடற்படையின் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்பதில்தான் அன்று போராளிகள் உறுதியாக இருந்தனர். எனவே மோதலை தவிர்த்தபடி பின்வாங்கத் தொடங்கினர். ஆனால் மேலதிகமாகக் கடற்படை படகுகள் அவ்விடத்திற்கு வரவே, அந்நியப் படைகளின் கைகளில் தன் புதல்வர்கள் அகப்பட்டுவிடக் கூடாது என நினைத்த தமிழீழக் கடலன்னை, எத்தனையோ போராளிகளை தன் மடியில் ஏந்திக்கொண்டது போல் அரவிந்தனையும் ஏந்திக் கொண்டாள்.

* * *

தித்திலைக்குள முகாமில் வேவுப்புலியாக சென்று வேவு பார்த்து, பின்னர் தானே கரும்புலியாகவும் சென்று இந்தியப் படையினரின் வியாலங்களை தகர்த்தெறிந்து வெற்றியுடன் மீண்டவன் அரவிந்தன்! செக்மேற், 1, 2, 3, ஒப்பிரேஷன் பவன், புயல் என தலைவரை அழிக்க இந்தியப்படை நடாத்திய எத்தனையோ தாக்குதல்களை களமுனைகளில் தளபதியாக நின்று தடுத்து நிறுத்தி எதிரிக்கு பலத்த இழப்பை உண்டு பண்ணியவன். ஈழப்போர் இரண்டில் தளபணிக்கு ஓய்வுகொடுத்து விழி மூடிக்கொண்டான்.

அன்று முல்லைத் தளத்திலிருந்து சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிக்கவேண்டும் என்று அரவிந்தன் போல் எத்தனையோ போராளிகள் அம்மண்ணின் விடுதலைக்கு விதையாகிப்போனார்கள். ஆனால் இன்று புயலாக எழுந்த 'ஓயாத அலைகளால்' முகாம் முற்றாக துடைத்தழிக்கப்பட்டு தமிழரின் கைகளுக்கு வந்துவிட்டது. ஆக்கிரமிப்பாளனின் மூச்சுக்காற்றில்லாத அந்த மண்ணில் இன்று மக்கள் மாவீரர்களின் நினைவைச் சுமந்தபடி நிம்மதியுடன் உலா வருகின்றனர்.

* * *

## சாம்பனிகுளம் மினிமுகாம் தகர்ப்பும்

மணலாற்றின் சிங்களக்குடியேற்றங்கள் இந்தியப்படையின் வெளியேற்றத்தை தொடர்ந்து, மேலும் மேலும் அதிகரிக்கத் தொடங்கின. தமிழர்களின் மண்ணை குடியேற்றம் என்ற பெயரில் சிங்கள தேசமாக மாற்ற முயன்று கொண்டிருந்த



சிங்கள அரசு. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பதே புலிகளின் திட்டம். அங்குள்ள குடியேற்றக்காரர்களை விரட்டுவதை விட அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் சிங்களப் படையை அடித்துவிரட்டினால் அவர்கள் தாங்களாவே வெளியேறிவிடுவார்கள் என்பது தெரிந்

இவ் வரலாற்றினை எழுதிக் கொண்டிருக்கும் வேளை (10.06.99) மணலாற்றில் சிங்களப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து அங்கு குடியேற்றப்பட்ட குடியேற்றவாசிகள் தமது ஆக்கிரமிப்பு மண்ணை விட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தொரு விடயம். எனவே சிங்களப் படையினரை முதலில் விரட்டியடிக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் மணலாற்றின் எல்லைக் கிராமத்தில் அமைந்திருந்த மினிமுகாம் ஒன்றை தாக்கியழிப்பதற்கு திட்டமிடப்பட்டது. மணலாற்றில் முதன்முதன் நடக்கப்போகும் மினிமுகாம் தகர்ப்பு இதுதான் என்பதால் இத் தாக்குதலை தானே வழிநடாத்திச் சென்று தாக்கியழிக்க அனுமதி தரவேண்டும் என்று தளபதியுடன் ஏற்கனவே உறுதியாக சொல்லிவைத்திருந்தான் மேஜர் சங்கர் (அரியரட்ணம் லவலோகிநாதன்— தம்பலகாமம் திருமலை). எனவே தாக்குதலுக்கான பொறுப்பு அவனிடமே ஒப்படைக்கப்பட்டது.

போராளிகள் எப்படியெல்லாம் வியூகம் எடுத்திருக்க வேண்டும், எவ்வாறு தாக்குதலை தொடுக்க வேண்டும் என்பதை மிகவும் தெளிவாக திட்டமிட்ட பின்னரே தாக்குதலின் தளபதியாக போராளிகளை வழிநடத்திச் சென்றான். தனது இன மக்களை அத்து மீறி குடியேற்றி விட்டு, அவர்களுக்கு காவல் இருந்த சிங்களத்தின் மினி முகாம் மீது சங்கரின் அணி 01.11.90 அன்று தாக்குதலைத் தொடுத்தது. ஒரு சில நிமிடங்கள்தான்; முகாம் புலிகளின் கைகளில் முற்றாக வீழ்ந்தது. ஆக்கிரமிப்பு படையினர் பலர் கொல்லப்பட்டதுடன் ஆர்.பி.ஜி, எல்.எம்.ஜி உட்பட பெறுமதியான பல ஆயுதங்களும் கைப்பற்றப்



பட்டன. ஆனால் தாக்குதலை வழிநடத்திச் சென்ற மேஜர் சங்கர் அவன் பின்னே களம் சென்ற 2ம்லெப்டினன்ட் (தவராசசிங்கம் விஜயசேகரன்— மீசாலை சாவகச்சேரி), முகசேனி (ஆசிரகாம் தவசீலன்— கட்டைப்பறிச்சான் (மூதூர்) ஆகிய போராளிகளும் வெற்றிக்கு விதையாகினர். மேஜர் சங்கர், எத்தனையோ களங்களில் விழுப்புண் அடைந்து காப்பாற்றப்பட்டவன். ஏற்கனவே ஒரு முறை மரணத்தில் எல்லை வரையே சென்று மீண்டிருக்கிறான்.

* * *

1987, இந்தியப்படைகளுடன் போர் ஆரம்பித்த ஆரம்ப காலம். படையினரின் கண்களுக்குள் மண்ணைத்தூவிவிட்டு போராளிகள் மக்களோடு மக்களாக கலந்திருந்தகாலம். இந்தியப்படைகளின் கழுகுக் கண்களுக்கு மத்தியில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது எத்தனையோ மக்கள் போராளிகளை தமது பிள்ளைகள்போல் கவசமாக நின்று காத்திருக்கின்றார்கள். அப்படித்தான் சங்கரும் ஒரு பெரியவரால் காப்பாற்றப்பட்டிருக்கிறான். பெருகல் ஆறு கடலுடன் கலக்கும் மணற்பரப்பில் அதிகாலைப் பொழுதொன்றில் தனது சகபோராளிகளுடன் படையினர் மீதான தமது அடுத்த தாக்குதல் பற்றி அளவளாவிக்கொண்டிருந்தான். சங்கரையே வலைவீசித் தேடித்திரிந்த படையினருக்கு அப்பகுதிக்குள் சங்கர் வந்துவிட்டது எப்படியோ தெரியவருகின்றது. படையினர் அப்பகுதிக்கு வந்துவிட்டதையும் சங்கருக்கு ஏற்படப் போகும் ஆபத்தையும் உணர்ந்த பெரியவர் ஒருவர் அப்பகுதிக்கு விரைந்துவந்து 'தப்பிப்போடுங்கோ தம்பியவை..' என்று குரல்கொடுத்தார். ஆனால் அதற்கிடையில் இந்தியப்படையினரின் துப்பாக்கிகள் பல முனைகளிலும் இருந்து சீறத் தொடங்கிவிட்டன. அங்கிருந்து தப்புவதற்கு இடையில் ஐந்து குண்டுகள் சங்கரின் உடலில் பாய்ந்துவிட்டன. ஆனால் அவர்களுக்கிடையில் லிங்கையா என அழைக்கப்படும் அந்தப் பெரியவர் புகுந்துகொண்டதால், சங்கரை ஏனைய போராளிகள் வேகமாக பாதுகாப்பான வேறு பகுதிக்கு கொண்டு சென்றுவிட்டனர். ஆனால் லிங்கையாவோ..! எங்கள் தேசத்தை மீட்கும் வீரர்களை காப்பாற்றிவிட்ட பெருமையில் படையினரின் துப்பாக்கிகள் கக்கிய குண்டுகளால் கடற்கரை மணலில் வீழ்ந்துகிடந்தார்.

காயமடைந்த சங்கரை, போராளிகள் படையினர் அறியமுடியாதபடி வைத்தியசாலையில் கொண்டுசென்று அனுமதித்தனர். ஆனால் வைத்தியர்கள் ஒரு வாரமாக முயற்சி செய்தும் எதுவுமே செய்யமுடியவில்லை. 'அவனது உயிர் பிரியப்போகின்றது இனிமேல் காப்பாற்றுவது கடினம். இன்னும் இரண்டு நாட்கள்தான்' என வைத்தியர்கள் தலைமைகூட கூறிவிட்டனர். ஆனால் புலிகளின் மருத்துவப்பிரிவு போராளிகள் சங்கரை எப்படியும் காப்பாற்றியே தீருவது என உறுதிகொண்டனர். லிங்கம் என்ற மருத்துவப்பிரிவு போராளி சங்கரை வைத்தியசாலையில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு கொண்டு சென்று மரநிழலின்கீழே படுக்க வைத்தான். மயக்க மருந்து இல்லாமலே சத்திரசிகிச்சையை செய்யத் தொடங்கினான். பார்த்துக் கொண்டிருந்த போராளிகளுக்குத்தான் மயக்கம் வந்துவிடும் போல் இருந்தது.

(தொடரும்)

எஸ்.தீரன்

## மணலாறு ஒரு வீரவரலாறு



21




# அவலட்சணமான அளவுகோல் ஏன்?

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் விட்டுக்கொடுத்தல், மன்னித்துவிடுதல், பணிந்து நடத்தல் என்ற உணர்வுபூர்வமான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருக்காது. ஏனெனில் எல்லோருமே எப்போதுமே ஒரேமாதிரியான உணர்வுகளால் ஆட்கொள்ளப்பட்ட ஒரே மாதிரியான சிந்தனைகளையும் செயற்பாடுகளையுமே தம்மிடையே ஏற்படுத்தி வாழமுடியாது. ஆகவே எல்லோருமே எப்போதுமே ஒரு சமயம் பிழைவிடுபவர்களாகவும், மறு சமயம் அதை உணர்ந்து திருந்துபவர்களாகவுமே இருப்பார்கள். எனவேதான் எங்கள் எல்லோரது வாழ்வியல் நடைமுறையிலுமே இந்த விட்டுக்கொடுத்தல், மன்னிப்பு வழங்குதல், பணிந்து நடத்தல் போன்ற பழக்கங்கள் ஓர் அத்தியாவசியமான விடயமாக பின்னிப் பிணைந்து இருக்கின்றன. ஆனால் ஏனோ இந்தப் பொதுவான மனிதப் பழக்கத்தைக்கூட எல்லோருமே இது மனிதர்கள் அனைவருக்குமே பொதுவானதெனக் கருதுவது குறைவு. குறிப்பாக எங்கள் தமிழ்ச் சமுதாயத்தை எடுத்துக்கொண்டால், மேற்குறிப்பிட்ட இந்த விடயம் பெண்ணையே முழுமையாகச் சார்ந்துள்ளது. அதாவது விட்டுக்கொடுக்க வேண்டும் என்றாலோ மன்னிக்க வேண்டுமென்றாலோ பணிந்துபோகவேண்டும் என்றாலோ அதைப் பெண் செய்யும் போதுதான் நல்லதொரு விடயமாகக் கருதுகிறார்கள். ஆனால் மாறாக ஆண்களுக்கு இவ்வாறான ஒரு நிலை வரும்பட்சத்து அவர்களும் இத்தகைய செயற்பாடுகளை தம்வசம்கொண்டிருந்தால், பொதுவாக அவரை பெண்களுக்குப் பயந்த அல்லது கோழையான ஒரு ஆளாகவே எண்ணிக்கொள்கிறார்கள். இதனால் பல ஆண்கள் உள ரீதியில் இத்தகைய பண்புகளை முழுமையாக ஏற்றுக்கொண்டிருந்தாலும் வெளியே உள்ள எம் இந்தத் தவறான சமுதாயத்தின் பார்வையால்; அகமுரண்பாட்டுடன் நடந்துகொள்ள முனைகிறார்கள். இது சாதாரணமாக சமூகத்தை ஒன்றிணைத்துப் பார்க்கும்போது, அச் சமூகத்தில் இடம்பெறும் பிரச்சினைகளுள் இவ் விடயம் என்பது மிகவும் சிறிதாகத்தான் இருக்கும். ஆனால் குடும்பம் என்ற அலகில் குறிப்பிட்ட ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இவ்விடயம் வரும்போது, சரியான புரிந்துணர்வு இல்லாத பட்சத்தில் குழப்பங்களை இது உருவாக்கிக்கொள்ளுகின்றது. பலரும் இதை மனிதர்களின் பொதுவான ஒரு வழக்கமாக எடுத்துக்கொள்வதில்லை. ஆண், தான் இவ்விடயத்தைக் கையாண்டால் மனைவியிடம் அவமானப்படுகிறேன் என்றும், மனைவி இவ்வாறான விடயத்தை தான் கருத்திற்கொண்டால் தானொரு கோழையாகவும் இருப்பதாகவும் எண்ணிக்கொள்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, இன்னும் சில வீடுகளில் கணவன்மார் தம் மனைவியிடத்தே இத்தகைய குணத்தை பலவந்தப்படுத்தி அடைந்துகொள்ள நினைப்பதும் உண்டு. அதாவது தம் மனைவி என்பவள் தமக்கு எல்லாவழிகளிலும் பணிந்துபோயும் தான் விடும் பிழைகளை எப்போதும் மன்னித்தும், தனக்கு வேண்டிய எக் கருமத்திற்கும் தம் மனைவி அவரின் சொந்தத் தேவையைக் கருத்திற்கொள்ளாது கணவனாகிய தனக்கு விட்டுத்தர வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள். இல்லாவிடின் குறிப்பிட்ட அப்பெண் சகல குணநலன்களும் மிக்க ஒரு நல்ல மனைவியாக இல்லையோ என விசனப்படத் தொடங்குகிறார்கள்.

இதே நிலை பல கணவன்மார்களுக்கும் மனைவியால் ஏற்படுவதுமுண்டு. ஆகவே முதலில் நாம் எல்லோரும் இவ்விட்டுக் கொடுத்தல் என்பதையும் மன்னிக்கப் பழகுதலும், பணிந்து போதலையும் சரியானபடி புரிந்துகொள்ளப் பழகுதல் வேண்டும். அதாவது மேற்சொன்ன இவ் விடயங்கள் அவமானத்திற்குரிய விடயங்கள் அல்ல. மாறாக மனித நேயத்தை வெளிப்படுத்தும் குணங்களே இவை என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

அதற்காக எல்லாவற்றிற்கும் விட்டுக்கொடுக்கவோ பணிந்து போகவோ மன்னிக்கவோ முடியாது என்பது உண்மைதான். எனினும், சாதாரணமாக ஆண், பெண்ணுக்கு விட்டுக்கொடுப்பதோ, அல்லது பெண் ஆணுக்கு விட்டுக்கொடுப்பதோ அவர்களின் சுயமரியாதையை அளவிடும் ஓர் அளவுகோல் அல்ல.

*- நர்மதா*

# அறுவைப் பிரசவம்தான் என்னும் முடிவின்போது...

கடந்த இரண்டு வாரங்களாக குழந்தை கருவில் இருக்கும்போது தாய் இருக்கும் நிலைமைகளையும், மற்றும் பிரசவவலியைக் கண்டுபிடிப்பது, அறுவை பிரசவம் எச்சந்தர்ப்பங்களில் நேருகிறது என்பதைப் பற்றிப் பார்த்திருந்தோம். இந்தப் பகுதியை இவ்வாரத்தில் நிறைவு செய்ய, 'அறுவைப் பிரசவம் செய்யப்படவேண்டும்' என்ற கட்டாயத்தில் அத்தாய் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வார் எனப் பார்ப்போம். அதாவது அறுவைப் பிரசவம் தான் எனும் முடிவு வைத்தியர்களால் எடுக்கப்பட்டதும் அடிவயிற்றை முடிநீக்கி சுத்தப்படுத்தி 'ட்றிப்' ஏற்றுவார்கள். சிறுநீர்ப்பையில் கொஞ்சமும் சிறுநீர் தேங்கிக்கொள்ளாதவாறு பார்த்துக்கொள்வார்கள். அதன் பின் அத்தாயின் குருதி என்ன பிரிவைச் சேர்ந்தது எனப் பார்த்து, அப்பிரிவுக் குருதியை ஆயத்தமாக வைத்துக்கொள்வார்கள். ஏனெனில் இவ் அறுவைச் சிகிச்சையின்போது இரத்தம் அதிகளவில் வீணாகும் சந்தர்ப்பங்கள் பலருக்கு உருவாகும். அத்தோடு அறுவைச் சிகிச்சை செய்யப்படுமுன் குறிப்பிட்ட அப்பெண்ணை பரிசோதித்து அவருக்கு எவ்வகையில் மயக்கமுறச்செய்வது என திட்டமிடுவார்கள். ஏனெனில் உடம்பில் வியாதிகள் பிரச்சினைகள் அற்ற பெண்களுக்கு வாய் வழியிலான மயக்கமருந்தும், ஆஸ்மா, இதயநோய் போன்ற நோய்கள் உள்ள பெண்களுக்கு இடுப்பில் ஊசி ஏற்றுவதன் மூலமுமே நினைவிழக்கச் செய்வார்கள்.

இவ்வாறு இடுப்பில் தரப்படும் ஊசிமூலமான மயக்கம் என்பது குறிப்பிட்ட அப் பகுதியை மட்டுமே உணர்விழக்கச் செய்யும். மற்றையபடி அப் பெண் தன் குழந்தையை வைத்தியர்கள் வெளியே எடுப்பதைக் கூட பார்த்துக்கொண்டிருப்பார். சிலவேளைகளில் எதிர்பாராத விதமாகச் செய்யப்படும் அறுவைப் பிரசவத்திற்கும் இடுப்பில் ஊசி போடுவதன் மூலமே மயக்கமுற வைப்பார்கள். இத்தகைய அறுவைப் பிரசவம் நடந்த பின், அன்று முழுக்க அடுத்த நாளும்கூட 'ட்றிப்'தான் கொடுப்பார்கள். சாப்பிட எதுவும் அனுமதிக்கமாட்டார்கள். இவ் அறுவைப் பிரசவத்தின்போது வயிற்றுப்பகுதி திறக்கப்படுவதால், அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு சிறிது நேரம் குடல் பகுதி வேலை செய்யாது நின்றுவிடும். பின் உடம்பில் இருந்து வாயு வெளியேறும்போதுதான் குடல் பகுதி சேவைசெய்ய ஆரம்பித்து விட்டது எனத் தெரியும். அதன் பிற்பாடுதான் சாப்பிட அனுமதிப்பார்கள்.

இவ்வாறு அறுவைப் பிரசவம் செய்தவர்கள் அப்பிரசவத்திற்குப் பின் சிறிது காலத்திற்கு மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். அதிக பாரமுள்ள பொருட்களைத் தூக்கக்கூடாது. அடுத்த குழந்தையையும் விரைவில் எதிர்பார்க்கக் கூடாது. குறைந்தது நான்கு வருடங்களுக்குப் பின் அல்லது இரண்டு வருடங்களாவது கட்டாயம் பொறுத்திருத்தல் வேண்டும். அத்தோடு அறுவைச் சிகிச்சைக்கு முன்பே குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்போகிறீர்களா என்பதை ஆலோசித்து, அவ்வாறு செய்யப்படல்வேண்டுமெனில் முன்கூட்டியே வைத்தியருடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

ஏனெனில் இவ்வாறு அறுவைச் சிகிச்சைப் பிரசவ நேரமே அக் குடும்பக்கட்டுப்பாட்டுச் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதால், இருதடவை வயிற்றைக் காயப்படுத்த வேண்டியதேவை ஏற்படாது.

# சிதைவுகள்

மனவெளியோரம் காலார
நடந்து செல்கிறேன் அங்கே
நான் துள்ளி ஏறிய மரத்தில்
'பெட்டைக்கு என்ன
துடியாட்டம்?' என்ற
அண்ணனின் அதட்டல்!
வெட்டுக்கள் கோரமாக....
இன்னும் நடக்கின்றேன்
பள்ளியில் முதலாம் பிள்ளை
என்ற மகிழ்வின் சுவடுகளில்
அப்பாவின் 'படிச்சு என்ன
செய்யப்போகிறாய்?'
என்ற கோபமான
அடையாளங்கள் ஏராளமாக....
இன்னும் நடக்கின்றேன்
இளமையின் வசந்தத்தில்
மணவாழ்வின் தேனாற்றில்
கணவனின் 'அடக்கமாய் இரு'
என்ற அதிகார
விசத்துளிகள் கொந்தளிப்பாக....
என்னால் இனியும்
நடக்கமுடியவில்லை
கால்கள் துவளுகின்றன
அவசரப்பதைப்புடன் அடிவயிற்றை
ஆறுதலுக்கு அணைக்கின்றேன்
என் கருவினில் வளருவது 'ஆணாக'
இருக்கக்கூடாதென்ற ஆசையில்!

*லதா உதயன்*
*வின்ரதூர்*
*சுவிற்சலாந்து.*

# விபரீதத்தில் சில வீராங்கனைகள்



பெண்கள் தற்போது எத்துறையிலும் ஆண்களுக்கு சரிநிகர் எனக் காட்டுவதுபோல விளையாட்டுத் துறைகளிலும் அதை நிரூபித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் தாய்லாந்து நாட்டில் உள்ள பெண்கள் இருவர் நடாத்தும் விபரீதமான வேடிக்கை விளையாட்டு ஒன்று, பல ஆண்களையுமே திகைக்க வைத்துள்ளது. அதாவது தாய்லாந்து நாட்டிலுள்ள மிருகக்காட்சிச் சாலையில் இரண்டு பெண்கள் முதலையுடன் காட்டும் வேடிக்கையான விளையாட்டைப் பார்க்கும்போது எல்லோருமே பயத்தில் உறைந்துவிடுகிறார்கள்.

அதாவது பார்வையாளர்கள் தமக்குக் கொடுக்கும் அன்பளிப்புப் பணத்தை வாயில் கவ்விய படியே, ஆவென வாயைத் திறந்திருக்கும் முதலையின் வாய்க்குள் தம் உடலை உள்ளே செலுத்தி, சிறிது நேரத்தில் வெளியே எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதைப் பெரும்பாலான பார்வையாளர்கள் விரும்பிப் பார்த்தாலும், இவ் வேடிக்கை விளையாட்டில் இந்த இரண்டு பெண்கள் 'மட்டுமே' ஈடுபட்டுக் கொள்ளுகிறார்கள் எனும் போதே, இந்த விளையாட்டின் விபரீதத்தை எம்மால் உணர்ந்து கொள்ள முடியுமல்லவா?

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு மீள் விண்ணப்பத்தினால் உச்சநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட தமிழகத்தின் தலைசிறந்த புகைப்படப்பிடிப்பாளரும்–பத்திரிகை எழுத்தாளரும்–தமிழ் ஆர்வலருமான திருசுபா சுந்தரம் அவர்களை ஈழமுரசு ஒரு அனுபவத் தொடருக்காக அணுகியது. புகலிடத் தமிழர்களுடன் தன் சிறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கில் தமிழகத்தில் நக்கீரன் சஞ்சிகைக்கு தான் எழுதிவரும் 'மறுபிறவி' எனும் தொடரை ஈழமுரசில் பிரசுரிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். அவருக்கும் நக்கீரனுக்கும் நன்றி தெரிவித்து இத்தொடரை தன் வாசகர்களுக்காக ஈழமுரசு பிரசுரிக்கின்றது.

# மறுபிறவி

4

**– சுபா.சுந்தரம் –**

(தன் சிறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் தமிழ்ஆர்வலர்)

91–ம் ஆண்டு, மே 21

காலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அலுவலகமாக அப்போது இருந்த சத்தியமூர்த்தி பவனுக்குச் சென்றேன். தேர்தல் வேலைகள் வேகமாக நடந்துகொண்டிருந்தன. பிரச்சாரத்திற்காக 'வாழ வைக்கும் கை' என்ற கசட்டை நான் தயாரித்துக்கொண்டிருந்தேன். அதற்கான பாக்கித் தொகையைக் கேட்பதற்காகத்தான் சத்தியமூர்த்தி பவனுக்குச் சென்றிருந்தேன்.

'தலைவர் ராஜீவ்காந்தி இன்று, பிரச்சாரத்திற்காக சென்னை வருகிறார். அவரது சுற்றுப்பயணம் முடிந்தபின் 24-ந் திகதிக்கு மேல் பணம் வாங்கிக்கொள்ளலாம்' என்று காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் தெரிவித்தனர். ராஜீவ் வருகிறார் என்ற தகவலை அப்போதுதான். நான் தெரிந்துகொண்டேன்.

அங்கிருந்து, எனது திருவல்லிக்கேணி அலுவலகத்திற்கு வந்தேன். பராமரிப்பு வேலைகள் நடந்து கொண்டிருந்தன; அதைப்பார்த்துவிட்டு இரவு வீட்டிற்குத் திரும்பினேன்.

நல்ல உறக்கம்

திடீரென போன் ஒலித்தது. கடிகாரத்தைப் பார்த்தேன். இரவு 12.45 மணி 'இந்த நேரத்தில் யாராக



இருக்கும்' என்று யோசித்தபடியே ரிசீவரை எடுத்தேன்.

'நான்தான் ரவிசங்கர் பேசுறேன். ஸ்ரீபெரும்புதூரில் வெடிகுண்டு விபத்தில் ராஜீவ்காந்தி இறந்துவிட்டார்' போட்டோகிராபர் ரவிசங்கர் சொன்ன தகவலை அந்த நள்ளிரவில் கேட்டவுடன் அதிர்ச்சியாக இருந்தது. எதுவும் பேசுகிற நிலையில் இல்லை. 'அப்படியா?' என்று மட்டும் கேட்டுவிட்டு ரிசீவரை வைத்தேன்.

ரவிசங்கர் சொன்ன தகவலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, தினமலர் நாளிதழுக்கு போன் செய்தேன். 'நான் சுபா சுந்தரம் பேசுகிறேன்... ராஜீவ் காந்தி இறந்துவிட்டதாக தகவல் வந்தது...'

'ஆமாம்...' என்றது எதிர்முனை.

செய்தியை உறுதிப்படுத்திக் கொண்ட பின், ஒரு பத்திரிகை புகைப்படக்காரனாக எனது செயல்பாடுகள் தொடங்கின. அப்போது நான் 'Agence France Presse' என்ற உலகப் புகைப்பட நிறுவனத்துக்காக (AFP) பணியாற்றிக் கொண்டிருந்தேன். ராஜீவ் கொல்லப்பட்ட படத்தை அந்த நிறுவனத்துக்கு அனுப்ப வேண்டியிருந்தது. ஸ்ரீ பெரும்புதூர் நிகழ்ச்சிக்கு என்னிடம் பணியாற்றும் புகைப்படக்காரர்கள் யாரையும் நான் அனுப்பவில்லை. அதனால் எங்கிருந்து படங்களைப் பெறுவது என்ற யோசனையுடன் ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திற்கும் போன் செய்துகேட்டேன்.

தினமலர் அலுவலகத்தை மீண்டும் தொடர்பு கொண்டேன். 'ராமமூர்த்திதான் ஸ்ரீ பெரும்புதூருக்கு சென்றிருக்கிறார். அவர் இன்னும் வரவில்லை' என்ற பதில் கிடைத்தது. போட்டோகிராபர் ராமமூர்த்தியின் வீட்டிற்குப் போன் செய்தேன்.

அவரது மனைவிதான் பதிலளித்தார். 'பூந்தமல்லி போலிஸ் ஸ்டேஷனில் இருக்கிறதா போன்பண்ணி சொன்னாங்க' என்றார் நான், பூந்தமல்லி போலீஸ் ஸ்டேஷன் நம்பரைத் தேடிப் பிடித்து போன்செய்தேன். ராமமூர்த்தி லைனில் வந்தார். 'நான் காலையில்தான் சென்னைக்கு வரமுடியும். எங்க ஆபீசுக்கு சில படங்களை அனுப்பியிருக்கிறேன். அதை வேண்டுமானால் கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள்' என்றார். நான் ரிசீவரை வைக்கப்போனேன். அப்போது அவரது குரல் பதட்டத்துடன் ஒலித்தது.

'உங்களிடம் வேலை பார்த்த ஒரு பையன் வெடிகுண்டு விபத்தில் அடிபட்டு பலத்த காயத்துடன் அசைவற்றுக்கிடக்கிறான்' என்றார்.

'யார்?' என்றேன் பதறியபடி.

'ஹரிபாபு...'

'அந்தப் பையன்தானா....?'

'ஆமாம்... நான் பார்த்தேன்' என்றார் ராமமூர்த்தி.

ஹரிபாபு என்னிடம் வேலை பார்த்த பையன்தான். ஓராண்டுக்கு முன் வேலையிலிருந்து நின்றுவிட்டார். தனிப்பட்ட முறையில் சில படங்கள் எடுத்து பத்திரிகைகளுக்குக் கொடுத்து வருகிறார் என்பதை அறிந்திருந்தேன். ராமமூர்த்தியிடம் தகவல் தெரிந்துகொண்ட பிறகு, புகைப்பட நிறுவனத்துக்கு (AFP) படங்களை அனுப்பவேண்டிய பணியில் தீவிரமானேன்.

மே 21-ம் திகதியன்று காலையில் நடிகை ஜெயசித்ரா எனது அலுவலகத்திற்குத் தொடர்புகொண்டு, ராஜீவ் வரும்போது அவருடன் தான் படமெடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தார். ராமச்சந்திரன் என்ற போட்டோகிராபரிடம் அந்த வேலையை ஒப்படைத்திருந்தேன்.

அவர் எடுத்து வந்திருந்த ரோலுடன் ராயப்பேட்டை ஹைரோட்டிலுள்ள எனது ஸ்டுடியோவுக்கு மகன் அருணுடன் சென்று 'டெவலப்' செய்தபோது புது 'ஷே'வுடன் ராஜீவ் போஸ் தந்திருந்தார். அந்தப் படத்துடன் 22-ந் திகதி அதிகாலையில் வெளிவந்த தினமணியில் பிரசுரிக்கப்பட்டிருந்த ராஜீவ் இறந்துகிடக்கும் படத்தையும் எனக்குத் தெரிந்த தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரே படமாக இணைத்தேன். பிறகு அதை புகைப்பட நிறுவனத்திற்கு (AFP) தொலைநகல் மூலம் அனுப்பினேன்.

ராஜீவ் கொலை செய்யப்பட்டதால் கொந்தளித்த கட்சிக்காரர்கள் நகரம் முழுவதுமுள்ள எதிர்க்கட்சியினரின் போஸ்டர்களையும் பேனர்களையும் கிழித்து எறிவதாகவும் தீயிடுவதாகவும் எனக்கு தகவல் வந்ததால், அதனைப் படமெடுக்க ஆட்களை அனுப்பிவைத்துவிட்டு, ஹரிபாபுவின் பழைய படம் ஏதாவது இருக்கிறதா எனத் தேடத் தொடங்கினேன். அந்த படத்தையும் புகைப்பட (AFP) நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டியிருந்தது.

ஒவ்வொரு ரோலிலும் இரண்டு, மூன்று பிரேம்கள் மீதமாவது வழக்கம். எனது ஸ்டுடியோவில் கற்றுக் கொண்டவர்கள் அந்த பிரேம்களில் ஒருவரையொருவர் படம் பிடித்துக் கொள்வார்கள். அப்படி எடுக்கப்பட்ட ஹரிபாபுவின் படம் ஏதேனும் இருக்கிறதா எனத் தேடினேன். சில படங்கள் கிடைத்தன. அவற்றையும் AFP க்கு அனுப்பினேன்.

ராஜீவின் உடல், சென்னை அரசு பொது மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு பிறகு விமானம் மூலம் டெல்லிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்ற விபரத்தை அறிந்துகொண்டேன். ஹரிபாபு இறந்த செய்தி, அவரது வீட்டுக்குத் தெரியுமா என்பது பற்றி விசாரித்தேன். இன்னும் அவர்களுக்கு செய்தி எட்டவில்லை என்று தெரிந்ததும் அவரது வீட்டுக்கு தகவல் தெரிவிக்கச் சொல்லிவிட்டு, எனது வேலைகளை கவனிக்க ஆரம்பித்தேன்.

ஹரிபாபு மரணமடைந்த செய்தியை அறிந்த பத்திரிகையுலக நண்பர்கள் எனது அலுவலகத்திற்கு வந்தனர். 'ஹரிபாபுவின் படம் இருக்கிறதா?' என்று கேட்டபோது அவர்களுக்கு பிரிண்ட் போட்டுக்கொடுத்தேன்.

பத்திரிகை புகைப்படக்காரனாக எனது கடமையைச் செய்து கொண்டிருந்தவேளையில், மே 22-ம் திகதி இரவு சென்னை போலிசார் விசாரணைக்காக என் அலுவலகப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தனர்.

ஸ்டுடியோவுக்குள் நுழைந்த போலிசார், எடுத்த எடுப்பிலேயே ஹரிபாபு பற்றித்தான் விசாரித்தனர். அவர்களின் வளையத்திற்குள் நான் சிக்கவேண்டும் என்ற கோணத்திலேயே கேள்விக்கணைகள் பாய்ந்து வந்தன.

'ஹரிபாபுவை எத்தனை ஆண்டுகளாக உங்களுக்குத் தெரியும்?'

'எவ்வளவு காலம் உங்களிடம் பணியாற்றினார்?'

'கடைசியாக அவரை எப்போது சந்தித்தீர்கள்?' தொடர்ந்து வந்த கேள்விகளுக்கு அமைதியாகவே பதிலளித்து வந்தேன். எனக்குத் தெரிந்த உண்மைகள் எதையும் மறைக்காமல் பொலிசாருக்கு ஒத்துழைத்தேன். நான் பிரிண்ட் போட்டு வைத்திருந்த ஹரிபாபுவின் படங்களை வாங்கிக்கொண்டு பொலிசார் சென்றனர்.

விசாரணை அத்துடன் முடிந்தது என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால், காலைச்சுற்றிய பாம்பாக விசாரணைக் கெடுபிடிகள் தொடர்ந்தன. தமிழக பொலிசார் விசாரித்துச் சென்றபின், அடுத்தடுத்த நாட்களில் மத்திய உளவுத்துறையான ஐ.பி.யிலிருந்து அதிகாரிகள் வந்தனர். விசாரணைக் கேள்விகள் கடுமையாகவே இருந்தன. அதையடுத்து சிறப்பு புலனாய்வுக்குழு SIT-யிலிருந்து அதிகாரிகள் வந்தனர். அவர்களும் ஹரிபாபு பற்றித்தான் விசாரித்தனர்.

ராஜீவ் மரணத்தின்போது ஹரிபாபு எடுத்திருந்த புகைப்படங்கள் சிலவற்றை என்னிடம் காட்டினர். மரணத்திற்கு முன்பான நிமிடங்களில், மாலை அணிவிக்க காத்திருந்த பெண்களுடன் ராஜீவ் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி, 'இந்தப் படத்தை ஹரிபாபு எப்படி எடுத்திருப்பார்?' என்றார் எஸ்.ஐ.டி அதிகாரி ஒருவர்.

'இது Wide angle லென்ஸ் மூலம் எடுக்கப்பட்டிருக்கிறது. தலைக்கு மேலே கமராவைத் தூக்கிப்பிடித்து படமெடுத்திருக்கிறார்' என்று விளக்கினேன். எனது பதில் அவருக்கு திருப்தி அளித்திருந்தாலும் அவரது பார்வையில் கோபக்கனல் வீசியபடி இருந்தது.

'படத்தில் இருப்பவர்கள் யார்? யாரென்று சொல்லுங்கள்?' அதிகாரியிடமிருந்து வெளிப்பட்ட கேள்வி இதுதான்.

'ராஜீவ்காந்தியைத் தவிர மற்றவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது'.

அந்தப் பதிலைக் கேட்டதும் எஸ்.ஐ.டி.யினர் முறைத்துப் பார்த்தனர். 'உன்னை அப்புறம் பார்த்துக் கொள்கிறோம்' என்பதுபோல் பார்வையை வீசிவிட்டு அவர்கள் சென்றனர். அவர்களின் அணுகுமுறைகள் கரடுமுரடாக இருந்தாலும், கடமையைத்தானே செய்கிறார்கள் என்ற வகையில் நானும் அவர்களுக்கு ஒத்துழைப்பாகத்தான் இருந்தேன். அதே நேரத்தில், பத்திரிகை புகைப்படக்காரனாக நானும் எனது கடமையைச் செய்துகொண்டுதான் இருந்தேன்.

ராஜீவ் மரணத்தின்போது ஹரிபாபு எடுத்த படங்களையும், மற்றொரு புகைப்படக்காரர் எடுத்த படங்களையும் வைத்து 45 நிமிட தேர்தல் பிரச்சார கசட் தயாரிக்கும் பணியில் இறங்கினேன். ஹரிபாபு எடுத்த படங்களில் ஒரு செட் கிடைத்தது. அதை 10'x8' என்ற அளவில் மூன்று செட் பிரிண்ட்போட்டுக் கொண்டேன். திரைப்பட இயக்குநர் எம்.ஜி.வல்லபன் மூலமாக ஆடியோ பிரச்சாரக் கசட் தயாரிக்கும் வேலையும் நடைபெற்று வந்தது. வல்லபன் எழுதிய பாடல்களை மலேசியா வாசுதேவன், வாணிஜெயராம் ஆகியோர் பாட, ஆடியோவில் பதிவானது.

இந்த பணிகள் நடந்துகொண்டிருந்த போதுதான் மே 29-ந் திகதியன்று மத்திய அரசின் செய்திப் பிரிவான PIB, ஹரிபாபுவின் கடைசி நேர 'க்ளிக்'கில் சிவராசன், தனு ஆகியோரின் கலர் படங்களை பத்திரிகைகளில் வெளியிட்டது. அந்த சிவராசன் படம்தான் பெரிய பெரிய போஸ்டர்களாக தமிழகம் முழுவதும் ஒட்டப்பட்டு, பரபரப்பை ஏற்படுத்தியது. PIB வெளியிட்ட சிவராசனின் கலர்படத்துடன் போட்டோகிராபர் ராமமூர்த்தி என்னைச் சந்திக்க வந்தார். அவற்றை கருப்பு வெள்ளையாக பிரிண்ட் போட வேண்டுமென்றார். அவருக்கு ஒரு செட் பிரிண்ட் போட்டுக்கொடுத்துவிட்டு, நானும் ஒருசெட் பிரிண்ட் போட்டுக்கொண்டேன். பிறகு, அவருடனேயே வெளியில் வந்து, சிவராசனின் கருப்பு வெள்ளை படத்தை அவருக்கு அனுப்பிவிட்டு, ராமமூர்த்தியை பீட்டர்ஸ் காலனியில் உள்ள அவரது வீட்டில் விட்டுவிட்டு நான் ஸ்டுடியோவுக்குத் திரும்பினேன்.

ராஜீவ்காந்தியின் அஸ்திக்கலசம் தமிழகத்திற்கு வரும்போது அந்த அஸ்திக்கலசத்துடன் வைப்பதற்காக ராஜீவ் படம் ஒன்று வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் கேட்டிருந்தனர். அதற்காக 24'x20' அளவில் அழகும் அமைதியும் தவழும் ராஜீவ் படம் ஒன்றைக் கொடுத்திருந்தேன். ராஜீவின் அஸ்திக்கலசத்துடன் அந்தப்படம்தான் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

ஜூன் 5ம் திகதி மாலையில், சத்தியமூர்த்தி பவனில் வைக்கப்பட்டிருந்த ராஜீவின் அஸ்திக்கலசத்திற்கு ஏராளமானவர்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். பவனில் மெட்டல் டிடெக்டர் சோதனை கடுமையாக இருந்தது. காங்கிரஸ் பிரமுகர்களிடம் நான், 'இந்த பாதுகாப்பை ஸ்ரீ பெரும்புதூரில் காட்டியிருக்கலாமே. ஆளுக்கு வைக்க வேண்டிய மெட்டல் டிடெக்டரை ஆஸ்திக்கு வைத்திருக்கிறீர்களே?'

> காங்கிரஸ் பிரமுகர்களிடம் நான், 'இந்த பாதுகாப்பை ஸ்ரீ பெரும்புதூரில் காட்டியிருக்கலாமே. ஆளுக்கு வைக்க வேண்டிய மெட்டல் டிடெக்டரை ஆஸ்திக்கு வைத்திருக்கிறீர்களே?' என்று கேட்டபோது, லேசாக சிரித்துக்கொண்டார்கள்.

(தொடர்ச்சி 24-ம் பக்கம்)

சிறு கதை

# ஊர் திரும்பும் மகிழ்வில் ஒரு குருவி

நீண்டநாள் காணாத பிள்ளையைத் தரிசித்த தாயின் மகிழ்வு.

சௌந்தர்யங்கள் வியாபித்துக் கிடக்கும் வானத்தில் ஏறிப்பறக்கும் பரவசம். சமுத்திர ஆழத்துள் மூழ்கி முத்தெடுத்து வந்த பெருமிதம். இவை எல்லாம் கலந்த உணர்வு எம்முள் எழுச்சிபெறுகிறது. கால்கள் நிலத்தில் படாது ஆனந்தத் தாண்டவத்தில் தாவுகின்ற நிலை எதனால் விளைந்தது?

நேற்றுவரை எம்மீது மூசிப்படர்ந்த விஷக் காற்றை கரங்களை விரித்து நீட்ட முடியாது முட்டித்தடுத்த இடர்மலையை கால்களை கீழே பதிக்க முடியாது குத்திக்குருதி கசிவித்த முட்களினைத் துடைத்தெறிந்துவிட்டு உடலின் இயல்பாயமைந்த நடையின் வேகத்துக்கு வழி வகுத்தமையால் எம் உணர்வின் உறைவிடமாய் உறுதியின் பலமாய் பரவியிருந்த கல்லறை மண்ணை, ஆலயங்களின் கோபுரங்கள் வானை உரசுகின்ற இடத்தைப் புலிகள் மீட்டெடுத்துத் தந்தமையால்.

இந்த மீட்பினால் உச்சந்தலையில் விழுந்து பிளக்க வைக்கும் தேங்காய்களின் விலையை; அயலோரக் கிராமங்களில் அழகொளிர நிறங்காட்டும் பச்சை வயல்கள் விளையாது கருகும் துயரத்தை; கானகத்து மேடுகளில் சுற்றிவர வாரடித்து ஓடும் கார்கால நீரோட்டத்தில் நெளியும் சர்ப்பங்களைக் கண்டடையும் கிலியதனை எண்ணி இனி அஞ்ச வேண்டியதில்லை என்னும் ஆசுவாசமும் அகமகிழ்வும் ஆர்ப்பரித்தெழுகிறது. எதிரியால் எம் தலை மீது ஏற்கப்படாமலே கட்டி விடப்பட்ட வறுமையின் பிடியில் நசுங்கி சாவடைய விரும்பாத ஏழ்மையின் வடிவங்கள் சிறு ஒளியைத்தேடி அவன் கூட்டுக்குள் நகர்ந்து அதல பாதாளத்துள் விழுந்து, எலும்புகளோடும் அடையாளம் காட்டும் சிறுநிறத் துண்டுகளோடும். நீண்ட நாட்களின் பின்னால் மீட்கப்படும் ஈனம் இனியில்லை என்ற இன்பலாகிரியில் புலிக்கொடியை உயரப்பறக்க விடும்பொழுதை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தோம்.

துயரம் நிரம்பிய இரண்டாண்டுகளின் பின்னால் காந்திக் கிராம எல்லையை தாண்டும்போது மீண்டுமொரு சூரியனை கண்கள் காணும் உணர்வு. வீதிகளின் இரு புறங்களும் ஒடுங்கி தெரு சிறுத்துப் போயிருந்தது. நீண்ட தொலைவுக்கு விழிகளை வீசும்போது தெருவை மூடி பற்றைகள் அடர்ந்திருப்பதாய் இடிபாடுகள் நிறைந்த தொன்மையான நாகரிக காலமொன்றை நோக்கி அகழ்வாராய்வு செய்துகொண்டு போவதாய் தோன்றிற்று. முறிப்பை நெருங்கும் முன்னர் வருமொரு வளைவில் குறுக்கே கிடக்கும் நீர்பாயும் பள்ளத்தாக்கை கண்ணுற்றபோது குளிர்ச்சி நிறைந்த பசுமையான நீரோட்ட கால நினைவுகள் நெஞ்ச ஊற்றுக்களில் பீறிடுக்கிளம்பின. புதுமுறிப்பு அணைக்கட்டில் சைக்கிளை ஊன்றிமிதித்தேன். சாய்வை நோக்கி ஏறுகையில் கடந்த காலங்களில் செயின் கழன்று போக பின்புறமாய்ப்போய் விழ எத்தனிக்கையில், தவிதவித்து தாவிப் பாய்ந்திறங்கிய நிகழ்வுகளை நினைத்துக் கொண்டேன். அணைக்கட்டு வளைந்து நீண்டிருந்தது. குளநீருக்கப்பால் காத்திருக்கும் காடுகள் மேல் விழிகளை வீசினேன். எந்தத் தொலைவில் நின்றாலும் முடி தெரியும் தொலைத் தொடர்புக் கோபுரத்தைத் தேடினேன். கண்களுக்கு கிடைக்கவேயில்லை. குளநீரைத் தழுவி வரும் சீதளக்காற்று ஆழ்ந்த சோகத்தோடு முகத்திலறைந்தது. அணைக்கட்டு முடிவில் முழங்கை வளைவாய் சாலை திரும்பிற்று. பாதையின் நடுவே மரமொன்றின் கருமை படர்ந்த அடிக்குற்றி இன்னும் அப்படியே கிடந்து அன்றைய காலவாழ்க்கையைச் சொல்லிக்கொண்டிருந்தது.

சேவியர் கடையை நோக்கி சைக்கிள் விரைகிறது. சாலோம்நகர் பாலர் பராமரிப்பு நிலையமும், அருகே இடிதாங்கியும் எத்தனையோ வேதனைகளைத் தாங்கிய வடுக்களோடு நின்றன. பனையோலை வெட்டப்போன கிறிஸ்தவபோதகரை பேய்கள் வெட்டிப்போட்ட இடமிது என்ற ஞாபகமும் சடுதியாய் எழுந்து அர்த்தப்படுத்தியது.

'போதகரை வெட்டிப்போட்டு ஆறி போன அரை மணித்தியாலத்தில் இவடத்தால போனனான். எனக்கொன்றும் தெரியாது' என அருகே வந்த நடுத்தர வயது மனிதர் இன்னொருவருக்கு கூறிக்கொண்டுவந்தார்.

நீளும் தெருவின் இருபுறமும் நீர் வாரடித்தோடி கிறவல் தரை அரிபட்டுக் கிடந்தது. சாம்பலான வீதி, சைக்கிள் குதிரை வேகம் காட்டியது. பாதிரியார் கொலையுண்ட இடத்திலிருந்து 250 மீற்றர் தூரத்தில் இடப்புறமாய் ஊடறுத்துப்போகுமொரு சிறுதெரு. அதன் முன் பிரதான கிறவல் வீதியை அண்டியதாய் முக்கோண வடிவநினைவு பீடம். மங்குள் நிறம் வெளிறிப்போயிருந்தது. சைக்கிளில் குறுக்காய் மெலிந்த காதில் உண்ணிகளை குடியேற்றிய நாயொன்று ஓடி இடப்புறமாய்க் கடந்தது. அவ் வேகத்தில் வேலியில் படர்ந்திருந்த கறையான் மண் சொரிந்து ஒலியெழுப்பியது. நுழையுமில்லை எல்லையோடு ஒட்டிக்கொள்ள கண்கள் மிக அவசரப்பட்டன. நெருங்கியது. வேகம் பிடித்திருந்த சைக்கிள் சில்லை குதிக்கால்களால் நெரித்துத் தணித்தேன். கல்லறைகளுக்கு இடையே பூண்டுகள் உயர்ந்திருந்தன. பசுமை வழிய சிவப்பு நிறங்களில் மலர்ந்த செவ்வரத்தைகள் வெம்மையில் வாடி மஞ்சள் படர்ந்த இலைகளோடு தொங்கின.



வாசலில் பெயர் பலகை சரிந்திருந்தது. 'சின்ன ஆசுவாசம் என்றும் கல்லறைகள் அப்படியே இருக்கின்றன. 97ம் ஆண்டின் நவம்பர் 27 கண்ணுள் விரிந்தது. அந்த வேளையிலும் கல்லறைகளின் முன் சுடர்கள் ஒளிர்ந்தன. இந்த ஆண்டு ஓ.... மீண்டும் உறவுகளின் முன் நின்று உருகி உறுதிகொள்ளும் காலம் வந்திற்று என எண்ணியபோதே நினைவு ஒலி காதில்கேட்பதான பிரமை. துயிலும் இல்லத்தில் இருந்து சேவியர் கடைநோக்கித் திரும்பும் சந்தி வலப்புறம் இருந்த பிள்ளையாரின் வாழிடம் அழியாத கொடூரச் சுவடுகளைத் தாங்கியிருந்தது. முதுகுப்புறமாய் அணைத்து நின்ற நெடிய மரம் கிளை பிளந்து சாய்ந்திருந்தது.

வலப்புறமாய் ஒரு வளவில் மாமரங்கள் காய்கள் நிறைந்து பசுமை காட்டியது. இப்போதைக்கு அவை குரங்குகளின் வாய்களிற்கு மாத்திரமே என எண்ணியபோது மனதில் பாயும் மகிழ்வலையின் மேலாய் விசனம் படர்ந்தது. அவசரப்பட்டு வழியூறிப்போபவர்கள் வலது அல்லது இடது கால்களைத் தொலைக்கலாம். அதன் எதிரே உள்ள நிலத்தில் உயர வளர்ந்திருந்த பற்றைகளுக்கிடையில் இடப்புறமாய் தலைசாய்த்திருக்கும் யேசுநாதரின் தூபி ஒன்று முகத்தில் துயரம் நிரம்பிவழிய தெருவையே பார்த்துக்கொண்டிருந்தது. தூபியில் 'கை விடப்பட்ட நிலையினரின் பாதுகாவலனே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.' என்ற வரிகள் பொறிக்கப்பட்டிருந்ததை நீண்ட நாட்களாய் காற்று மட்டுமே வாசித்தது. இனிமேல்தான் மனிதர்கள் அதனை அர்த்தப்படுத்தி அந்த நிலத்தில் நடைபயில வேண்டியவர்களாகிறார்கள் என்ற உணர்வு தட்டியது.

சேவியர் கடைச்சந்தி. ஜெயந்தி நகருக்குப்போகும் பாதையே தெரியாது புற்கள் அடர்ந்து கிடந்தன. நடுவே இரண்டு மரங்களும் எழுந்து கிளைவிரித்திருந்தன. தெருவின் வலப்புறமாய் இருந்த சேவியர் தேநீர்க் கடை கூரைகள் இழந்திருந்தது. அதன்முன் அடுக்கப்பட்டிருந்த 'கொங்கிறீற்' கற்களில் அமர்ந்திருந்த போராளி ஒருவன் துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்தான். எம்மை நிமிர்ந்து பார்த்து முகத்தை மலர்த்திவிட்டு தன் பணியில் விழிகளைச் செலுத்தினான்.

சயிக்கிள் சேவியர்கடைச் சந்தி தாண்டி கனகபுரத்து வீதியை ஊடறுத்தபடி விரைந்தது. வீதியில் புல்டோசர் ஒன்று விரைந்த வடுகள். மாவட்டச் செயலகம் சிதைவுற்றுத் தெரிந்தது. அதன் மரங்களில் முன்னைய காலங்களில் தாவித்திரிந்த குரங்குகளைக் காணவில்லை. வெடிகளின் அதிர்வில் அஞ்சி தொலைதூரம் போயிருக்கலாம். இனிமேல் வசந்தகாலத்தைப் பாடும் குயில்களும், புள் இனங்களுமே அதில் சிறகசைத்துக் குரலெழுப்பித் திரியும்.

சற்றுத் தள்ளி கரையில் இராணுவத் தொப்பிகள் இரண்டும், மேலாடை ஒன்றும் கிடந்தது. காற்றில் பிணவாடை கலந்து நாசியில் உதைத்தது. மனவெம்மை தணிந்தமாதிரி இருந்தது. கனகபுரம் விளையாட்டரங்கின் உதைபந்தாட்டக் கம்பங்களிலும் இராணுவத்தினரின் தொப்பிகள் கொழுவப்பட்டிருந்தன. நாம் விளையாடிய மைதானம் இரண்டாண்டுகளாய் இராணுவம் மிதித்துத்திரிந்த பூமியாய் இருந்தது. இதில் எத்தனை துயரத்துக்கான விதைகளை ஊன்றியிருப்பான். அநாதரவாய் மேய்ந்த மாடுகளை துப்பாக்கியால் தூர்த்தியிருப்பான். இனிமேல் மீண்டும் எம் வீரர்களின் கால்கள் பந்தை இங்கே உதைக்கும். படைகளுக்கு நிகழ்ந்ததைப்போல மீண்டும் போட்டிகள் குதூகலத்தின் வெளிப்பாடாய் மைதானத்தில் இறங்கும்.

கிளிநொச்சி 'டிப்போ' வீதியில் ஏறியதுமே மனதில் திகில் பரவியது. எதிர்பார்த்த விதமாய் அண்மையில் குமாரபுரம் பூசாரியப்புவை பாடையில் ஏற்றிக்கொண்டு போனபோது கண்ட சுடலையின் ஞாபகம் நெஞ்சுள் கிளர்ந்தது. வீதியின் இரு புறமும் இருந்த இராணுவத்தின் காவலரண்கள் புல்டோசரால் இடித்து, நொருக்கி வேலியோரமாய் ஒதுக்கப்பட்டிருந்தன. அதனுள் எத்தனை மிதிவெடிகள் இருந்து வெடித்திருக்கும் என எண்ணிக்கொண்டேன். மிதிவெடி என்றதுமே பாதம் சிதறி இலைகுழைகள் ஒட்டிக்கிடக்க துணியால் சுற்றிக்கட்டி குருதி சொட்ட ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த இளைஞனின் நிலை பேயாட்டம் காட்டியது. சயிக்கிள் கான்ரிலை இறுகப் பற்றிக்கொண்டேன். தப்பித் தவறி வீதியைவிட்டிறங்கி விடக்கூடாதென்ற அச்சுறுத்தலில்.

எந்த இடமென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளத் தோன்றவில்லை. நீளத்திற்கு செங்கோணத்தில் கட்டப்பட்டிருந்த சென்றிப் போயின்றுகளும் மண் அணைகளும் பூதங்களின் மனைஎனக் கிடந்தன. சாக்குகளால் இறுக அடைக்கப்பட்டிருந்த அரண்கள். வீதியோரமாக நீளத்திற்கு கொங்கிறீற் கற்களால் எழுப்பப்பட்டிருந்த ஒரு அடி வரை உயரமான சுவர். மேலே ஒற்றை ஓடுகள் நீளத்திற்கு அடுக்கப்பட்டிருந்தன. வானவில் என பல நிறங்களில் சேலைகளும் பிற உடைகளுமாய் வாசலில் தொங்க உடுபிடவைகள் நிறைந்து வழிந்த அங்காடிக் கட்டடங்கள் பல மூளியாய் கரிபடர்ந்து கிடந்தன. நொருங்கியும், கம்பிகளில் தொங்கியபடியும் இருந்த கொங்கிறீற்றுகள் அந்த இடத்தில்பெரும் சோளகக் காற்று வீசுமானால் ஓவென அலறல் ஒலி எழுப்பும் திகில் நிறைந்த பிரதேசமாய் எனக்குத் தோன்றிற்று அன்றுமாலை. இராணுவத்தின் கட்டளைத் தலைமையகம் இருந்த இடத்திற்கு முன்பாக சில நாட்கள் முன்வரை வாளேந்திய சிங்கம் பறந்து கொண்டிருந்ததாம். அந்த இடத்தில் புலிக்கொடி ஏற்றப்படுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருந்தன. இதைக் காண மக்கள் லொறிகளிலும், சயிக்கிள்களிலும் புன்னகை நிரம்பிய முகங்களோடு விரைந்துகொண்டிருந்தனர். மேலேயும், உள்ளேயுமாய் சனங்கள் நெருங்கியிருக்க லொறி ஒன்று வேகமாய் வந்தது. வீதியை குறுக்கறுத்து மேலே ஓடியிருந்த மின் கம்பியொன்று சடுதியாய் லொறி கீழே நகரும்போது அறுந்து ஒருவனின் கழுத்தைச் சுற்றி இழுத்தது. அவன் இழுபட்டுக் கீழே விழ எத்தனிக்க பின் தட்டியில் நின்றிருந்த ஒருவன் அவனது சாறத்தைப் பிடித்தான். விழுந்தவன் அந்தரத்தில் தொங்க லொறியில் அபாயக் கூச்சல்கள் மிதந்தன. இன்னொருவன் அவனது கையை மேலிருந்து எட்டிப் பிடித்திழுக்க திகில் நிரம்பிய முகத்தோடு அவன் அவசரமாய் உள்ளே மேலே தாவினான். அலுமினியக் கம்பி அவன் கழுத்தை வெட்டியிருந்தது. குருதி கசிந்தது. இதைக் கண்ட என்னுள் அச்சம் மேவியது. மீட்கப்பட்ட பிரதேசம் எனினும் பெரும் பயங்கரம் நிறைந்திருப்பதாய் தோன்றிற்று.

பெரும் மகிழ்வு ஆர்ப்பரிக்க வந்த எனக்கு மீட்கப்பட்ட அந்த நகரத்தின் அமைதியும் அலங்கோலமும் அங்கு முன்பு குடிகொண்டிருந்த பேய்களின் குரூரங்களைக் காட்டிற்று. மீள முடியாத திகைப்புக்குள் விழுந்திருந்தேன். இனி எப்போது இங்கே ஜீவனோபாயத்தை நிலைநிறுத்தும் இயக்கம் தொடங்கும் என்னும் ஏக்கம் என்னை அறியாமலே எழுந்தது. திரும்பும் இடமெல்லாம் கண்களுக்குத் தெரிந்த மண் சாக்குகளும், மண் அணைகளும் எல்லாமே சிதறுண்டுபோனதொரு நாகரிகத்தின் சிதைவுகளாய் தோன்றிற்று.

இத்தனையும் அரங்கேறிய மண் இப்போது எங்களிடம். இந்த நினைவு பெரியதொரு எழுச்சியை மனதுள் தந்தது. நாட்கள் சற்று அதிகமாய் போனாலும், சுடுகாட்டை நகராக்க இயலும் என்றும் நம்பிக்கை பூத்தது. ஏனெனில் அழகுகள் வேரூன்றி கிளைவிரிப்பதற்கான வளமான தரை இப்போது எமதாச்சது. சேற்றில் ஓடும் நாற்றுகளின் வேரினால் வலிமைபெற்ற நகரிது. மீளவும் நெல் நாற்றுகள் மிதிவெடிகளால் நிறைந்துள்ள வயலில் அசைகையில் உரம்பெற்று ஒளிரும். இந்தப் பூமி. இந்த நம்பிக்கையே எழுந்து கம்பத்தின் உச்சியைத் தொட்டுப் பறக்கும் புலிக்கொடியோடு விரிந்து நாளைய இருப்பை அர்த்தப்படுத்துவதாய் தோன்றுகிறது. உண்மையும் அதுவே.

ப.தயாளன்

## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தூரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214
0613342518
0607348051 / 0148385825

Pub Fr 23032

## உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

## தமிழ் அச்சகம்

59, Rue Louis Blanc, 75010 Paris.
Tel&Fax:
01 42 09 60 64
ou 06 82 67 89 54

(பழைய மக்கள் கடை)
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

Pub Fr 23033

## ரவி வாகன சேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது



தொலைபேசி:
0148765190
0607622689

Pub Fr 23034

## தென்றல் இல்லம்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், சுவை மணம் குன்றாத உடன் கேட்டரிங்தாளும் பெற்றுக்கொள்ள

60, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09

## உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பு சேவை

கிருஷ்ணபிள்ளை மாயவன்
15 ஆண்டுகளாக அரச அங்கீகாரம் பெற்று சட்ட ஆலோசனைகள் மொழிபெயர்ப்புகள் சேவையாற்றிவருகிறோம்

39, bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE OU GARE DU NORD
TEL/FAX: 0140345341

Pub Fr 23035

## சிவாசினி வாகன சேவை

*Chivashini Transport*

வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ



06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04

Pub Fr 23036

## வாடகைக்கு

பாரிஸ் 18 ல் (M°: Jules Joffia N°-12) உள்ள வீடு ஒன்றில் தங்குமிடம், உணவு வசதியுடன் வசிப்பதற்கு ஆள் தேவை.
மேலதிக தொடர்புக்கு:
T.P: 0613058284

## P.S வாகன சேவை

உங்கள் தேவைகளுக்கு 24 மணி நேர சேவை
தொடர்புகட்கு:
ஜேர்மன் - T.P: 01717489297
பிரான்ஸ் - T.P: 0164721143
கொர்னலியுஸ் (Cornelius)
குமார்



Pub Fr 23037

## ஈழமுரசு ஐரோப்பிய வணிக சேவை

குறைந்த கட்டணத்தில் உங்கள் பொருட்களை, சேவையை விற்பதற்கும், வாங்குவதற்கும் முரசு வழங்கும் அரிய வாய்ப்பு இது.

வணிகம் செய்ய விளம்பரம் வேண்டும்
உங்களுக்காக நாங்கள் விளம்பரம் செய்ய காத்திருக்கிறோம்

உங்கள் அன்புக்குரியவர்களின்
- ★ பிறந்த நாள் வாழ்த்துக்கள்
- ★ திருமண அழைப்பிதழ்கள்
- ★ நிகழ்ச்சி அரங்கேற்றங்கள்
- ★ அறிவித்தல்கள் - நினைவஞ்சலிகள்

என்பவற்றை வரலாற்றுப் பதிவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்

### அறிமுகம்

ஒரே கட்டணத்தில் ஈழமுரசின் அனைத்துப் பதிப்புகளிலும் உங்கள் அறிவித்தல்களை பதிவு செய்யலாம்
ஈழமுரசு விளம்பர சேவை

ஏனைய பதிப்புக்கள்: ஈழமுரசு | ஈழமுரசு | ஈழமுரசு | ஈழமுரசு | உலகத்தமிழர்

விளம்பரப் பகுதி - EELAMURASU, 22 Rue Perdonnet ,75010 Paris, France.

## Lune

Électronique Informatique

- * Video CD Player
- * DVD
- * மற்றும் Pentium II கணினிகள் இலத்திரனியல் உபகரணங்கள்

5, Rue Perdonnet, 75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 53 26 76 70

## SFR தமிழர் தொலைபேசி நிலையம்

itineris

10.06.1999 முதல் 25.06.1999 வரை

# 1fr*





Cheque இல்லாமலும் தொலைபேசி இணைப்பு கொடுக்கப்படும்– *விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

| | |
|---|---|
| இலங்கை.......61 Min | அமெரிக்கா....300 Min |
| இந்தியா.........65 Min | இங்கிலாந்து...300 Min |
| கனடா...........300 Min | ஐரோப்பா........201 Min |

தொடர்ந்து தொலைபேசி அட்டை வாங்குபவர்களுக்கு ஒரு அட்டையை இலவசமாககொடுக்கிறோம்

# ALLO COM

27 Rue du Clos,
75020 Paris
Tel: 01 43 73 00 11 Fax: 01 43 73 02 64
M°: Maraîchers / Porte de Montreuil / Bus: 26

Pub. Fr23039

# பிரெஞ்சுப் புரட்சி

## இரண்டாம் பகுதி: புரட்சி
## 1789ம் ஆண்டுப் புரட்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

1879-ல் தான், 3-வது குடியரசு, திட்டவட்டமாக அமைகிறது. அதுவும், தனக்கும்-புரட்சிக்கும் உள்ள தொடர்பை வலியுறுத்துகிறது. 1880-ல் ஜூலை 14-ம் நாள், பிரெஞ்சுத் தேசிய விழா ஆகவும், 'மார்சேய்ய்க்காரர்கள் 1792-ல் உண்டாக்கிய பாடல், தேசிய கீதம் ஆகவும் ஏற்கப்படுகின்றன. (இன்றுவரை அப்படியேதான்)

குடியரசை உறுதிப்படுத்த, எல்லோருக்கும் கல்வி புகட்ட வேண்டும் என்று முடிவு செய்து, கல்விக்காக, பிரான்சு பெருந் தியாகங்களைச் செய்கிறது. 1882 மார்ச் 28-ல், 6 முதல் 13 வயது பிள்ளைகளுக்கு, கல்வி கட்டாயமானதாகவும், இலவசமானதாகவும், மதச் சார்பற்றதாகவும் ஆகிறது.

(பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளும், நமது புதுவை-காரை உட்பட இந்நன்மைகளைச் சிறிது, சிறிதாகப் பெறுகின்றன.)

பின்னாளில், பிரெஞ்சுப் புரட்சியை மதிப்பவர்கள் சோஷலிஸ்டுக் கட்சியில் அதிகமாக இருக்கின்றனர்.

முதல் உலகப் போருக்குப்பின், 1920-ல்,



பேராசிரியர் செவாலியே
சுகிர்தராஜ்

பலமான பிரெஞ்சு சோஷலிச இயக்கம் இரண்டாகப் பிளக்கிறது. பெரும்பான்மை, பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவ, சிறுபான்மை சோஷலிஸ்டுக் கட்சியைக் கட்டிக்காக்கிறது.

### 1936: மக்கள் முன்னணி

1920 முதல் 36 வரை நாட்டில் இடதுசாரிகள் பெரும்பான்மையாக இருந்தும் அவர்கள் சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள், ரெடிக்கல் - சோஷலிஸ்டுகள் என்று மூன்று பிரிவுகளாக இருந்ததால் நிரந்தரமாக ஆட்சிப் பீடம் ஏற முடியாது தவிக்கின்றனர்.

1936-ல், ஐரோப்பாவில் நாஜிகளும் ஃபாசிஸ்ட்டுகளும் பலம் பெருகி வந்த போது, பிரான்சில், புரட்சியின் வழித் தோன்றல்கள் இணைந்து, 'மக்கள் முன்னணி'யை உண்டாக்கி, ஆட்சியைப் பிடிக்கின்றனர்.

இந்த அரசுதான், முதன் முதலாக, பிரான்சில், 15 நாள் விடுமுறையைச் சம்பளத்துடன் கொடுத்தது.

(இன்று பிரான்சில், வருடத்தில் 5 வார விடுமுறையும் சம்பளத்துடன், வாரத்தில் 39 மணி நேர வேலை முறையும் அமுலில் உள்ளன.)

ஜெர்மானியருக்கு எதிர்ப்பான தேசியக் குழுவின் திட்டம் (Program National Council of the Resistance)

1939-45-ல் நடந்த இரண்டாவது உலகப் போரில் பிரான்சு முதலில் தோல்வி கண்டது. ஜெர்மானியப்படைகள் நாட்டை ஆக்கிரமித்தன. அப்போது, ஜெர்மனியை எதிர்த்த பிரெஞ்சுக்காரர்களை, ஜெனரல் டிகோல் வழிநடத்தினார். வெளிநாட்டில், 'சுதந்திர பிரான்சின்' இராணுவத்தை நிறுவினார். உள்நாட்டில், ஜெர்மானியத்தை எதிர்த்துப்போரிட, 'உள்நாட்டு வீரர்கள்' இயக்கத்தையும் உருவாக்கினார்.

போராடும் மக்களின் பிரதிநிதிகளை வைத்து, ஜெர்மானியருக்கு எதிர்ப்பான ஒரு தேசியக்குழுவை ஏற்படுத்தினார்.

இக்குழு, ஜெர்மானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதும், நாட்டுக்கென்று பல திட்டங்கள் தீட்டியது.

இவற்றில் பல, பிரெஞ்சுப் புரட்சியின் வழி வந்தவை.

அவற்றில் சில: 'ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளரோடு குலவும் பிரெஞ்சு தொழிலதிபதிகளின் சொத்துக்கள் நாட்டு உடைமை ஆகும்.

(புரட்சியின் போது, நாட்டைவிட்டு ஓடிப்போன துரோகிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டது நினைவில் இருக்கும்;)

'தனியாரது சுரங்கங்கள் இரும்புப் பாதைகள், மின்சார உற்பத்தி, விநியோகம், இன்சூரன்ஸ் இவையெல்லாம் நாட்டுடைமை ஆகும்.

(புரட்சி காட்டிய பாதையில், தனி மனிதர்கள் மேலும், மேலும் செல்வத்தைச் சேர்ப்பதைத் தடுக்கவும், இவற்றால் வரும் இலாபம் எல்லா மக்களுக்கும் போய்ச் சேரவும் வழிவகுத்துப் போடப்பட்ட திட்டம் இது)

**இந்தோ—சீன—அல்ஜீரியப் போர்கள்**

1946 முதல் 58 வரை நான்காவது குடியரசு நாட்டை நிர்வகித்தது. இந்தோ-சீனப்போரும், அல்ஜீரியப் போரும் இதனை அடித்துச் சென்றன. ஜெனரல் டிகோல், 1958-இல், ஐந்தாவது குடியரசை நிறுவினார். பலமான சட்டத்தை அமுல் செய்யும் பிரிவுடன் (Executive) இன்னும் அதே குடியரசுதான்.

மேற்கண்ட இரு போர்களும் நடந்து கொண்டிருந்தபோது, புரட்சி வழி வந்தவர்கள், பிரான்சில் அப்போர்களைக் கடுமையாக எதிர்த்து வந்தார்கள்.

இந்தோ-சீனருக்கும் அல்ஜீரியருக்கும் ஆதரவாக, பிரெஞ்சுக்காரரே எழுதினர். பேசினர், பணங்கொடுத்தனர், வேலை செய்தனர். இவர்கள் காலனி ஆதிக்கத்தை எதிர்த்தனர். காலனி ஆட்சி முறை ஒழிக்கப்பாடுபட்டனர்.

டிகோலின் 11 வருட அரசு, நாட்டின் பொதுச்செல்வத்தை உயர்த்தினாலும், ஏழைகள்-பணக்காரர் இடையே உள்ள தூரத்தை அதிகமாக்கிவிட்டது என்ற குமுறலின் அடிப்படையிலும் எழுந்தது தான் 1968 மே இயக்கம்.

**இந்தோ—சீனருக்கும் அல்ஜீரியருக்கும் ஆதரவாக, பிரெஞ்சுக்காரரே எழுதினர். பேசினர், பணங்கொடுத்தனர், வேலை செய்தனர். இவர்கள் காலனி ஆதிக்கத்தை எதிர்த்தனர்.**

அப்போது கூறப்பட்ட கருத்துக்கள், தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் பிரெஞ்சுப் புரட்சியைச் சார்ந்தவையே.

இன்றும், நாட்டில் தீவிர இடதுசாரிகளும் (பொதுத்தேர்தல்களில், அவர்கள் ஒட்டு மொத்தமாக 4%-5% வாக்குகள் பெறுகிறார்கள்), சில பயங்கரவாதக் கும்பல்களும் புரட்சியின் சமத்துவக்கொள்கையைத் தீவிரமாக அமுல்செய்யும்படி கேட்கிறார்கள்.

புரட்சியின் 200-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் 1989-லும், இந்தச் 'சமத்துவக்கொள்கை'கொண்ட 'நேரடிச்செயல்' (Direct Action) என்ற பயங்கரவாதத்தினர், கடுமையான தண்டனைகளுடன் சிறைகளில் இருக்கிறார்கள்.

பயங்கரவாதம் இப்போதைக்கு மறைந்து விட்டதாகத் தெரியலாம். ஆனால், எவ்விருந்தாவது, வேறு எந்தப் பெயரிலாவது அது மீண்டுந்தோன்றும், செயல்படும் என்று எதிர்பார்க்கலாம்.

(தொடரும்)

---

*சென்னையில் இருந்து வெளிவரும் FRONTLINE (Volume 16 - issue 9, Apr. 24 - May. 7,1999) என்னும் ஆங்கில சஞ்சிகையில் இலங்கைத் தமிழ் இலக்கியம் பற்றி இரு கட்டுரைகள் வெளிவந்தன. ஈழமுரசு வாசகர்களுக்காக அக்கட்டுரைகளின் தமிழ் மொழியாக்கம் இப்பகுதியில் தொடராக தரப்படுகின்றது. இதனால் இக்கட்டுரைகளில் ஈழமுரசு முழுமையான உடன்பாடு கொண்டுள்ளதாக கருதத் தேவையில்லை. இக்கட்டுரைகள் வாசகர்கள் மத்தியில் கருத்தாடலை தோற்றுவிக்க வேண்டும் என்பதே எம் விருப்பம். கட்டுரை முடிவில் வாசகர்களின் கருத்தாடல்கள் ஈழமுரசில் பிரசுரிக்கப்படும்.*

# இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் ஐம்பதாண்டு காலம்

**இலங்கைத் தீவில் இடம்பெற்ற 1983—ம் ஆண்டு இனக்கலவரமானது அத்தீவின் வடக்கு கிழக்கில் வாழ்ந்த பெரும்பான்மை மக்களின் வாழ்வியல் முறையை மாற்றி அமைத்தது. இந்த மாற்றங்களானது தவிர்க்க முடியாமல் அவ்வமைய ஈழத்து தமிழ் இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன.**

– கார்த்திகேசு சிவத்தம்பி –

## பகுதி - 6

இதேவேளையில் ஒவ்வொரு பிராந்தியத்தின் அனுபவங்களும் துயரங்களும் வேறுபட்டனவாய் இருப்பதனையும் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. மட்டக்களப்பு பிராந்தியத்தின் அனுபவங்களானது, யாழ்ப்பாணத்தினதும் வன்னியினதும் அனுபவங்களிலிருந்து வேறானது. கவிஞர் சோலைக்கிளி தன் கவிதைகளில் வேறுபட்டதான இத்துயர அனுபவங்களை, மறக்கவொண்ணா சொல்லடுக்குகளாக பதிவு செய்துள்ளார். அவரது கவிதைத் தன்மானது மாயமையான மொழி அமைப்பும், ஆழமான கனவுப் படிமம் கொண்ட காட்சி விரிப்புமாய அமைந்திருந்தது. இன்னுமொரு பிரதான இலக்கிய எழுச்சியானது முஸ்லிம் தமிழர் மோதல்களினாலும், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டதனாலும் விளைந்த கவிதா அனுபவங்களாகும். இந்த அனுபவங்கள் இதயத்தைப் பிழிந்து தரும் கவிதைகளாக தோற்றம் பெற்றன. இளமையான முஸ்லிம் கவிஞர்களில் வேதாந்தி மிகச் சிறந்த நேர்த்தியான கவிதைகளை எழுதினார். இன்று முஸ்லிம் இளம் கவிஞர் தொகுதியொன்று மிகுந்த நம்பிக்கைத் தொனியுடன் கவிதைகள் எழுதிவருகின்றது.

புனைகதையானது இயல்பாகவே கவிதையைவிடவும் உடன்பாடுப்பாங்குடன் விளங்குவது மட்டுமல்லாது, சில வேளைகளில் வெளிப்பாட்டுத் தொனிப்பின் திறனையும் கொண்டது. போர்க்காலச் சூழல் ஒன்றிலான வாழ்வின் எல்லாவகை வதைகளையும், வாழ்விழந்த மக்களின் பெரிதான உறவுகளையும், துயரங்களையும் ரஞ்சகுமார், உமா வரதராஜன், திருக்கோவிலூர் கவியுவன் ஆகியோர் மிகச் சிறப்பாக சிறுகதைகளில் கையாண்டனர். அவர்கள் தம் எழுத்துக்களால் முன்னெப்போதும் நிகழ்ந்திராத ஆழ்ந்த துயரத்தின் உக்கிரத்தை வாசிப்போர்க்கு தோற்றச் செய்தனர். சொல்லப்படும் செய்தியும் புதியபார்வையின் அவ்வளவைப் படும் துயரங்களை வெளிப்படுத்தியதில், ரஞ்சகுமாரின் சிறுகதையான 'கோசலை' மிகச்சிறந்த சொற்சித்திரமாகும். கவியுவனின் கதைகள் சமூக நிறுவனமான குடும்பத்தின் சிதைவை வெளிப்படுத்தியது. இதே காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தினரிடையே நிகழ்ந்த மாற்றங்களை எஸ்.எல்.எம்.ஹனீபாவின் புனைகதைகள் விபரணமாய் சித்தரித்தன. இவ்வகையான படைப்புகளும் எழுத்துகளும் இலகுவில் கைக்கு எட்டுபவையாக இருக்கவில்லை. அதேவேளையில் அவ்வகை எழுத்துக்கள் கைக்கெட்டினாலும் அவைபற்றி வெளிப்படையாக விவாதிக்க முடியவில்லை. ஆனாலும் வாழ்க்கை எப்படி மாற்றம் பெற்றது? துயரங்கள் எப்படி எல்லோரையும் பற்றி இருந்தது? என்பவை பற்றி ஒரே வாசிப்பிலேயே தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

1983ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தின் மிகமுக்கியமான தமிழ் இலக்கிய வெளிப்பாட்டு நிலையென புலம் பெயர்ந்தோர் இலக்கிய முகிழ்வை




சொல்லலாம். தற்போது இலங்கைத் தமிழர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, ஸ்கண்டிநேவிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்நாடுகளில் பதியும் இவர்களால் பல்வேறு தலைப்புகளில் வெளிக்கொணரப்படும் சஞ்சிகைகளினூடாக தங்கள் அடையாளத்தையும், தாயகம் திரும்பும் நம்பிக்கையையும் பேண முயற்சிக்கிறார்கள். இவ்வெழுத்தாளர்களில் சிலர், இச்சஞ்சிகைகளின் ஊடாக தம் எழுத்தின் ஆற்றலை ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். முகிழ்ந்து வரும் இவ்வெழுத்துக்களின் ஊடாக சில எண்ணப்போக்குகளை கண்டுகொள்ள முடியும். அவர்களின் பிரதான வெளிப்பாடாக தாயகம் பற்றிய ஏக்கங்களும், தம்மூர் பற்றிய நினைவுகளுமே மிகுந்து காணப்பட்டன. ஆனால் தற்போது தாம் வாழ நேர்ந்துள்ள நாட்டின் தேசியத்தாருடன் இணைந்து கொள்வதில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் பேசத் தொடங்கியுள்ளனர். அவற்றில் நிறவேறுபாடு பற்றிய பிரச்சினைகள் முக்கிய இடம் பெற்றுள்ளன. குறிப்பாக கவிதையில் புதிய குறியீடுகளும் காட்சித் தளங்களும் இவர்களால் கையாளப்படுகின்றன. இவர்களின் கவிதைச் சொல்லல் முறையினூடாக தமிழுக்குப் புதியதான மேலைத்தேய கவிதை மரபுகளை அவதானிக்க முடிகின்றது. அது லட்சிய மரபும், பண்பு பொழிவும் கொண்டதான நிலையிலான பின்புலத்தை தமிழ் கவிதைக்கு நெருக்கமாக்கி இருக்கின்றது. புலம்பெயர் இலக்கியத்தில் ஜெயபாலன், விஜயேந்திரன் போன்றோர் முக்கிய கவிஞர்களாவர். அதேபோன்று புனைகதை படைப்பாளிகளில் கருணாகரமூர்த்தியும், பார்த்திபனும் முக்கியமானவர்கள்.

- இன்னும் வரும்...

# நேட்டோவை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ரஷ்யப் பிரவேசம்




1945ம் ஆண்டில் 2ம் உலக யுத்த முடிவின்போது நேச நாட்டுப் படைகளின் தளபதிகளான ஜெனரல் பற்றனும் மாசல் சுக்கோவ்வும் பேர்லினை முதலில் அடைவது யார் என்ற ஓட்டப்பந்தயத்தை ஆரம்பித்து பேர்லினின் பிளவுக்குக் காரணமானார்கள். அன்று செம்படைகள் பேர்லினை அடைந்து அதனைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தபின், மேற்கின் படைகள் அங்கு சென்றடைந்தன. அன்று பேர்லினில் ஆரம்பமாகிய பனிப்போர் தணிந்துபோக 50 வருடங்களாகின. இன்று கொசோவோவில் அதுபோன்றதோர் நிலையே தோன்றியுள்ளது. நேட்டோவின் படையணிகள் கொசோவோவிற்குள் நகர்வதற்கு தாமதம் செய்து கொண்டிருந்தவேளையில், ரஷ்யாவின் படையணிகள் பெல்கிறேட்டினூடாக கொசோவோவைச் சென்றடைந்துள்ளன. இன்று பல்கன் பிராந்தியத்தில் தோன்றியுள்ள இந்நிலை, புதியதோர் பனிப்போருக்கு இட்டுச் செல்லுமா என யுத்த வல்லுநர்கள் வினவுகிறார்கள்.

சிலநாட்களுக்கு முன் பிரித்தானிய வெளியுறவுச் செயலர், கிழக்கு பேர்லினின் தீர்வு போன்ற ஒன்றை தமது நாடு சகித்துக் கொள்ளாது என்றும், கொசோவோவில் புதிய விதமான சுதந்திர நடமாட்டத்தை நேட்டோ தீர்மானிக்கும் என்றும் கூறியிருந்தார். அதன் அர்த்தம் ரஷ்யாவின் கொசோவோ நிலைப்பாட்டினை கேள்விக்குறியாக்கியுள்ளது என்பதே. அதாவது ரஷ்யாவின் கோரிக்கையின்படி தனியான கட்டுப்பாட்டுப் பிராந்தியமொன்று பிரித்துக்கொடுக்கப்பட முடியாது என்பதே மறைமுகமாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்று பிரித்தானியப் படைகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டிய ஓர் பகுதியில் ரஷ்யப்படைகள் நிலைகொண்டுள்ளன.

பொஸ்னியாவில் அமைதிப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ரஷ்யப் படையினர் கவச வாகனங்கள், தாங்கிகள் போன்றவற்றுடன் சேர்பியாவிற்குள் நுழைந்தபோது யாருமே இப் படைகள் கொசோவோவை நோக்கி நகரும் என எதிர்பார்த்திருக்கவில்லை. பெல்கிறேற்றூடாக நகர்ந்த ரஷ்யப் படையணி சில மணி நேரத்திற்குள் கொசோவோவின் எல்லையை அடைந்தது. அங்கிருந்து யாரும் எதிர்பாராத வேளை, தலைநகர் பிறிஸ்றினாவைச் சென்றடைந்தது. அங்கு விமானநிலையப் பகுதி மற்றும் பிரதான வீதிப்பகுதிகளில் ரஷ்யப் படைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க தூதுவர் ஸ்ரோப் ரல்போட்டும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோவும் கொசோவோவில் ரஷ்யாவின் செயற்பாடு குறித்து பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்தனர். நேட்டோவைப் பொறுத்தவரை கொசோவோவை நேட்டோப் படைகளுக்கும் ரஷ்யப் படைகளுக்கும் பிரித்துக்கொடுப்பதில் கடுமையான எதிர்ப்பே இருந்துவந்தது. அமெரிக்க அதாவது சர்வதேச அமைதிப்படையின் கட்டளையின் கீழ் ரஷ்யப் படைகள் செயலாற்றவேண்டும் என்றும் நேட்டோ தரப்பில் கூறப்பட்டுவந்தது ஆனால் தனது படைகள் சுயமான தலைமைத்துவத்தின்கீழ் மட்டுமே இயங்கும் என்றும், இரண்டாவது ஓர் தலைமையின்கீழ் ரஷ்யா செயற்படத் தயாரில்லை என்றும் ரஷ்யா உறுதியாகக் கூறியது. இவ்வேளையில்தான் ரஷ்யப் படைகள் பிறிஸ்றினாவை அடைந்த செய்தி கூறப்பட்டது. அதுபற்றி கருத்துவெளியிட்ட ரஷ்ய வெளிவிவகார அமைச்சர், ஓர் தொலைத்தொடர்பு தவறினால் இது நடந்துள்ளது என்றும் விரைவில் ரஷ்யப் படைகள் பிராந்தியத்திலிருந்து வெளியேறும் என்றார். ஆனால் பிறிஸ்றினாவில் நிலைகொண்டிருந்த ரஷ்யப் படைகளின் தளபதியோ, தமது படைகளுக்கு உதவியாக மேலதிக அணிகள் வந்துகொண்டிருக்கின்றன என்றும் தமக்கு இதுவரை தமது படைகளுக்கு கொசோவோவிலிருந்து வெளியேறும் அறிவித்தல் வரவில்லை என்றும் கூறினார்.



பிறிஸ்றிணாவுக்குள் ரஷ்யப் படைகளுக்கு சேர்பிய மக்கள் வழங்கிய வரவேற்பு

**பொஸ்னியாவில் அமைதிப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ரஷ்யப் படையினர் கவச வாகனங்கள், தாங்கிகள் போன்றவற்றுடன் சேர்பியாவிற்குள் நுழைந்தபோது யாருமே இப் படைகள் கொசோவோவை நோக்கி நகரும் என எதிர்பார்த்திருக்கவில்லை. பெல்கிறேற்றூடாக நகர்ந்த ரஷ்யப் படையணி சில மணி நேரத்திற்குள் கொசோவோவின் எல்லையை அடைந்தது. அங்கிருந்து யாரும் எதிர்பாராதவேளை, தலைநகர் பிறிஸ்றினாவைச் சென்றடைந்தது.**

கொசோவோவை ஐந்தாகப் பிரித்துள்ள நேட்டோ நாடுகள், தற்போது ரஷ்யா இதற்குள் தலையிட்ட நிலையில் புதிய மாற்றுத் திட்டங்களை அறிவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ரஷ்யாவை சமாதானப் படுத்தவேண்டிய நிலையில் ஒன்றில் ஏதாவது ஓர் உடன்பாட்டிற்கு வரவேண்டும். அல்லது ஓர் புதிய பிராந்தியத்தை அதன் கட்டுப்பாட்டில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ரஷ்யா கொசோவோவின் வடபகுதியை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகிறது. சேர்பிய பாரம்பரிய பிரதேசமும், புராதன மதச் சின்னங்களும் இயற்கைவளங்களும் நிறைந்துள்ள இப் பகுதியை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் விடுவதாவது ஆபத்துக்களை ஏற்படுத்தும் என நேட்டோ கூறுகிறது. இப்பகுதி ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் வரும்போது இப்பகுதியில் வாழ்ந்த அல்பேனிய கொசோவோ மக்கள் திரும்பவும் தமது சொந்த இடங்களுக்குச் செல்லத் தயங்குவார்கள். காரணம் சேர்பியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இப் பகுதியில் ரஷ்யாவின் பாதுகாப்பில் வாழ கொசோவோவின் ஏனைய பகுதிகளில் இருந்து சேர்பிய மக்கள் பெருமளவில் இடம்பெயர்வார்கள் என்றும் இவர்களது பழிவாங்கல்கள் கொசோவோ அல்பேனியர்கள் 'மேல்' இடம்பெறலாம் என்றும்

## உலகக் கண்

சொல்லப்படுகிறது. சேர்பியாவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள வடபகுதி இத்தாலியக் கட்டுப்பாட்டுப் பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கொசோவோ, யூகோஸ்லாவியாவின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதி என ஒப்பந்தங்கூறினாலும் முழுமையான கட்டுப்பாடு என்பது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இயற்கை வளங்கள் நிறைந்த வட கொசோவோவை தன்னுடன் வைத்துக்கொள்ள அது எவ்வகையான முயற்சிகளையும் மேற்கொள்ளும். அந்தவகையில் தனது நலன்களைப் பாதுகாப்பதில் ரஷ்யாவை விட அதிக நம்பிக்கையான நாடு இல்லை என்பதால் அப்பகுதியை கட்டுப்படுத்த ரஷ்யாவைக் கோரியதில் தவறில்லை.

பொஸ்னியாவில் நிலைகொண்டுள்ள ரஷ்ய பராசூட் படைப்பிரிவுதான் அதனது மிகத் திறமையான படையணி எனச் சொல்லப்படுகிறது. சேர்பியத் துருப்புக்கள் வெளியேறிக் கொண்டிருந்தவேளை இப் படையணிகள் உடனடியாகத் தமது வாகனங்களுக்கு KFOR எனப்படும் கொசோவோ அமைதிப்படைக்கான நிறமாற்றங்களையும், அடையாளங்களையும் இட்டு நேரடியான கொசோவோவுக்கான பாதைகளைத் தீர்மானித்து யூகோஸ்லாவியாவின் வழிகாட்டல் உதவியுடன் உடனடியான நகர்வினை மேற்கொண்டனர். நேட்டோவின் படைகள் கொசோவோவிற்குள் நுழைவதில் இன்னமும் சிக்கல்களை எதிர்கொள்ளும் வேளையில், ரஷ்யப் படையணிகள் எந்த வித தடங்கலுமின்றி உள்ளே நுழைந்துள்ளன. சிலவேளை இப் படையணிமேல் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டால் ரஷ்யப் படைகள் எதிர்த்தாக்குதலில் ஈடுபடும். அப்போது சேர்பியா ரஷ்யாவின் பக்கம் நிற்கலாம். இது ரஷ்ய நேட்டோ முறுகல் நிலையைத் தோற்றுவித்துவிடும்.

ரஷ்யாவின் விரைவான கொசோவோ நுழைவானது சில தொகைப் படையினரைக் கொண்டதாக தற்போதைக்கு இருக்கலாம். பொஸ்னிய சேர்பிய எல்லையில் மேலும் 200 இற்கும் அதிகமான ரஷ்ய இராணுவ வாகனங்கள் நகரத் தயாராக உள்ளதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் மொஸ்கோவிலிருந்தும் விசேட படைகள் விமானம் மூலம் புறப்பட ஆயத்தமாய் உள்ளனர்.

தற்போது பிரித்தானியப் படைகளுக்கும், ரஷ்யப்படைகளுக்குமிடையே உடன்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அதே சமயம் பிறிஸ்ரினா நோக்கி நகர்ந்த பிரெஞ்சுப் படையணி ஒன்று, ரஷ்ய அணியினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்றும் செய்திகள் கூறுகின்றன. அதேவேளை ரஷ்யாவில் அமெரிக்க ரஷ்ய பிரதிநிதிகளிடையே உடன்பாடு காணப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் எவ்வளவு காலத்திற்கு இந்த உடன்பாடுகள் தாக்குப்பிடிக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

— உதயன்

(கொசோவோ வெற்றிகள் தோல்விகள் அடுத்தவாரம் வெளிவரும்.)




# வானும் மண்ணும் ஹாண்ட்ஷேக் பண்ணுது உன்னால் ஈஸ்வரா...

'ஈஸ்வரா வானும் மண்ணும் ஹாண்ட்ஷேக் பண்ணுது உன்னால் ஈஸ்வரா... ஈஸ்வரா; நீரும் நெருப்பும் பிரெண்சிப்பானது உன்னால் ஈஸ்வரா...'

இப்ப கிட்டடியிலை வந்த சினிமாப் பாட்டொண்டுதான் இது! வானும் மண்ணும் 'ஹாண்ட்ஷேக்' பண்ணுதெண்டதை பெரிசுகளிலை இருந்து சிறுசுகள் வரைக்கும் நல்லா இரசிச்சுக் கேக்கினம். வானும் மண்ணும் கைகுலுக்கிறதைக் கேக்க சந்தோசமாத்தான் இருக்குது. ஆனா மண்ணிலை இருக்கிற ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி பேசுற ஆம்பிளையளும் பொம்பிளையளும் கைகுலுக்கிறதெண்டதுதான் வலு கஷ்டம் பாருங்கோ! எல்லாம் பணம்போல சாதியெண்ட 'ஹாண்ட்ஷேக்' பண்ண விடுகுதில்லை.

போனகிழமை உங்களைப்போல பள்ளிக்கூடத்திலை பழைய மாணவர் சங்கம் விழாவொண்டுக்கு போகக்கூடிய சந்தர்ப்பம் கிடைச்சுது. தங்கட பாதுகாப்பு வலயங்களெண்டு கன பள்ளிக்கூடங்களை சொந்த இடங்களிலேயே இயங்க முடியாத அளவுக்கு சிங்களப்படையள் செய்துபோட்டுது. ஆனாலும் இங்கையிருந்துகொண்டு தங்களை வளர்த்தெடுத்த பள்ளிக்கூடங்களுக்கு எப்படியாவது உதவவேணும் எண்டு முன்னிற்கிறவையை இந்த இடத்திலை எப்படி பாராட்டலாம்தான்? அந்த விழாவிலை மேடையேறின நாடகமொண்டு, இங்கையிருந்துகொண்டு சாதியைக் குறிக்கக் கூடிய பத்திரிகையளிலை 'மணமகள் தேவை' விளம்பரம் கொடுக்கிறவைக்கு நல்லொரு படமாத்தான் இருந்தது. இங்கினை இருந்துகொண்டு நாட்டிலை இருந்து பெண் எடுக்க நினைக்கிறவைக்கு பெரும் உதவியா இருக்கிறது உந்த கொழும்பிலை இருக்கிற சில பத்திரிகையள்தான் பாருங்கோ. அதிலையும் குறிப்பா வீரகேசரியிலை 'மணமகள் தேவை' எண்ட பகுதியை மட்டும் பாக்கிறதுக்கே பேப்பர் வாங்கிறவையும் இருக்கினம். குலம், கோத்திரம், சாதி, மதம் எண்டு? ஏன் வரப்போறவ(ர்) என்ன கலரா இருக்க வேணுமெண்டும் கூட தெளிவாய் எழுதியும் போடுறவைக்கு அதிலைதான் வசதியிருக்குது. இங்கையிருக்கிற சிலபேருக்கும் உந்த வசதிகள் பெரும் உதவியாத்தான் இருந்து வருகுது. தங்கட சாதியைத் தேடுபவையாய் சுகமா தேடிப்பிடிக்கிறதுக்கு இப்பிடியும் ஒரு வசதி தேவைதானே?

நாடகம் முடிஞ்ச வெளியிலை வரேக்கை,

> அதிலை பதில் சொன்ன ஒருத்தரை ஏற்கனவே எனக்கு நல்லாத் தெரியும். இவையள் பேச்சுக்குத்தான் நாலுபேருக்கு முன்னாலை தங்களை நாகரீகமான முற்போக்குவாதிகளாக் காட்டிக் கொள்ளுறவை. ஆனா கலியாணம்காட்சி எண்டு பேச வெளிக்கிடேக்கதானே இவையளை அடையாளம் காணமுடியுது!

உந்த நாடகத்தை பற்றி சிலபேரிட்ட விசாரிச்சுப் பாத்தன். உண்மையிலை அருமையா நல்லாத்தான் இருந்தது. சாதிவெறி கொண்டு திரியிறவைக்கு இது நல்ல 'சாட்டையடி' யாத்தான் இருக்குது எண்டிச்சினம். அதிலை பதில் சொன்ன ஒருத்தரை ஏற்கனவே எனக்கு நல்லாத் தெரியும். இவையள் பேச்சுக்குத்தான் நாலுபேருக்கு முன்னாலை தங்களை நாகரிகமான முற்போக்குவாதிகளாக் காட்டிக் கொள்ளுறவை. ஆனா கலியாணம்காட்சி எண்டு பேச வெளிக்கிடேக்கதானே இவையளை அடையாளம் காணமுடியுது!

ஊர், உறவு சொந்தம் பந்தமெண்டு வரப்போறவையை பற்றியொரு பெரிய ஆராய்ச்சி நடாத்தி புலன்விசாரணை எல்லாம் முடிச்ச பிற்பாடுதானே கட்டுறதுக்கே சம்மதிக்கினம். இவர் மட்டுமில்லை இவரை மாதிரி இங்கை கனபேர் 'பேச்சு பல்லக்கெண்ட' ளாக இருக்கினம்.

தமிழனை முழுமுழுதா அழிச்சுப்போட சந்திரிகா அம்மையாரும் 'ஒரேநாடு, ஒரே இனம், ஒரே மக்கள்' எண்டு சிங்களச் சாத்தையெல்லாம் ஒரே அணியிலை திரட்டிக்கொண்டு வருகிறா. சிங்களவர் ஒருத்தரும் தமிழனோட சேர்ந்துநிண்டுகொண்டு சிங்களவருக்கு எதிரா துப்பாக்கியை நீட்டேல்லை. ஆனா தமிழனெண்டு சொல்லுற சிலதுகள்தான் சிங்களவனோட சேர்ந்து நிண்டுகொண்டு தங்கட இனத்துக்கே கொள்ளிவைச்சுக் கொண்டிருக்குதுகள். இத்தனைக்கும் நடுவிலை நிண்டுகொண்டுதான் பிள்ளையள் உயிரைக் கொடுத்து விடுதலைப் போரை நடாத்திக் கொண்டிருக்குதுகள். அங்கையிருக்கிற சனங்களும் இப்ப மெல்ல மெல்ல உண்மையளைப் புரிஞ்சுகொண்டு உதுகளை மறந்து சமத்துவமான ஒரு வாழ்க்கைக்கு தங்களையும் தயாராக்கி அடுத்த சந்ததிக்கும் உந்தநோய் தொற்றாதவைக்கு மாறி வந்துகொண்டிருக்குதுகள். ஆனா இங்கையிருக்கிறவையெல்லோ நெருப்பு அணைஞ்சாலும் பரவாயில்லை தாங்கள் ஊதிஊதியே வளர்த்தெடுத்துப் போடுவம் எண்டு அருக்குப்பிடியிலை நிக்கினம். இவையளின்ர இந்த வெறித்தனங்களை அண்டைக்கு மட்டுமில்லை இந்த இருபதாம் நூற்றாண்டை தாண்டப்போகிற இறுதி நேரத்திலையும் கூட உசிப்பவி தொடர்ந்து கொண்டிருக்கிறது நாகரிக உலகிலை வெட்கக்கேடான ஒரு விசயந்தான்.

இங்கையிருந்துகொண்டு அங்கையிருக்கிறவைக்கு அவையளின்ர சம்மதங்களை கேட்காமலே இங்கினை பேசி முடிச்சுப்போட்டு, தாங்கள் சொல்லுறவைக்குத்தான் கழுத்தை நீட்டவேணும் எண்டு சிலதுகள் இன்னும் கிடாப்பிடியிலை நிண்டுகொண்டிருக்குதுகள். இவையளின்ர கிடாப்பிடியாலை அங்கையொருபிள்ளை உயிரை விட்டிருக்குது! சகோதரி விரும்பின பெடியன் வேறைசாதி எண்டபடியாலை, இஞ்சை இவையள் ஒண்டை பேசி அவசரத்தான் செய்யவேணுமெண்டு அந்தப் பிள்ளையை கட்டாயப்படுத்தியிருக்கினம். அந்தப் பிள்ளையும் இவையளுக்கு எவ்வளவோ எடுத்துச்சொல்லி பாத்திருக்கு, கடைசியா இவையளின்ர ஆக்கினை தாங்க முடியாமல் தற்கொலை செய்துபோட்டுது. இந்த சமுதாயத் தடையளை உடைச்சுக்கொண்டு தமிழீழத்துப் பெண்கள் இண்டைக்கு எத்தனையோ சாதனையளை படைச்சுக் கொண்டிருக்கேக்கை அந்தப்பிள்ளை இப்படியொரு முடிவை எடுத்தது முட்டாள்தனமானதாக இருக்கலாம். ஆனா இப்பிடியானவைக்கு இதுவொரு பாடமா எல்லோ அமைஞ்சிருக்கு. இப்ப இஞ்சையிருந்துகொண்டு இவையள் அழுது புலம்புறதிலை எந்தவித பயனுமில்லை. இப்பிடியான வேதனையள் இனியும் தொடராமல் இருக்கும் பிறகாவது நாங்கள் எல்லாரும் எப்பவெண்டாலும் சிந்திக்கிறதுதான் நல்லது கண்டியளோ.

எத்தனையோ தலைமுறைக்கு முன்னாலை யாரோ சிலதுகள் தங்கட சுயநலனுக்காக கொண்டுவந்த உந்தச் சாதியை கட்டிப்பிடிச்சுக்கொண்டு கிடக்கிறியள், இந்த தலைமுறையிலை உதுகள் எல்லாம் அடியோட அழிஞ்சுபோய் அடையாளங்களை இல்லாத சமத்துவமான இனமாய் நாங்கள் வாழவேணுமெண்டு தங்கட உயிரைக்கொடுத்து போராடுற அந்த இனம் உள்ளங்களோட எதிர்பார்ப்புக்களுக்காக எண்டாலும் உதுகளை விட்டொழிச்ச மனிசராயாவது முயற்சி செய்திறது எண்டுப்போலை எண்டாலும் எங்கட விடுதலைக்கு நாங்கள் பங்களிச்ச மாதிரி இருக்கும் எல்லோ...

**அருமைத்தம்பி**

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

# மறுபிறவி

என்று கேட்டபோது, லேசாக சிரித்துக்கொண்டார்கள். அஞ்சலிக்காக மக்கள் திரண்டிருந்தவேளையில், பிரச்சார ஆடியோ கசட் ஒலிபரப்பப் பட்டது. மக்களிடம் அதற்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு மகிழ்ந்தபடி ராயப்பேட்டையில் உள்ள எனது அலுவலகத்திற்குத் திரும்பினோன். அலுவலகத்தில் நான், சின்னரவி, டிரைவர் கண்ணன், ராமச்சந்திரன் ஆகியோர் இருந்தோம்.

இரவு 9 மணி-திடீரென பூட்ஸ் சத்தம்.டெல்லி சி.பி.ஐ அதிகாரியான டி.எஸ். பி. நாராயணன் உள்ளே வந்தார். ஸ்டூடியோவை சோதனையிடுவதற்கு அனுமதி பெற்று வந்திருப்பதாகத் தெரிவித்தார். அவரது கடமைக்கு நான் இடையூறாக இருக்க விரும்பவில்லை. சோதனைகள் தொடங்கின.

நான் வாசலுக்கு வந்து பார்த்தேன். தெரு நிறைய போலீஸ்படை குவிக்கப்பட்டிருந்தது. 5 அடிக்கு ஒரு சி.ஆர்.பி.எஃப் போலீசை நிறுத்தியிருந்தனர். சோதனை என்ற பெயரில் இரவு 10 மணிக்கு எனது அலுவலகத்தைப் புரட்டி எடுக்கத் தொடங்கியவர்கள் விடிகாலை 3 மணிவரை சளைக்காமல் சலித்து எடுத்தனர்.

எனது அலுவலகம் 25 வருட கால அனுபவங்களின் பொக்கிஷம். தேசிய கட்சிகள், திராவிட இயக்கங்கள், தமிழ் அமைப்புகள் என எல்லா தரப்பிலும் எனக்கு தொழில் ரீதியான தொடர்பு இருந்ததால் அவை தொடர்பான புகைப்படங்கள், பிரசுரங்கள் அலுவலகத்தில் நிறைந்திருந்தன. பஞ்சாபில் சி.ஆர். பி.எஃப் முகாமை நான் புகைப்படம் எடுத்ததற்கு டி.ஐ.ஜி எழுதியிருந்த பாராட்டுக் கடிதமும் அந்த பொக்கிஷங்களில் ஒன்று. ஆனால் சோதனையிட வந்தவர்களோ, என்னை சிக்க வைப்பதற்கு எவை எவை ஏதுவாக இருக்கும் என்ற கண்ணோட்டத்திலேயே தேடி அவற்றை மட்டும் எடுத்து தனியே வைத்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பான புகைப்படங்கள், பிரசுரங்கள் ஆகியவற்றை மட்டுமே தனியாக எடுத்து வைத்தனர். அரசு தரப்பு சான்று ஆவணமாக (Search List 1354) 51 பொருட்களை எடுத்து 6ம் திகதி அதிகாலையில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு, சிறப்பு புலனாய்வுக் குழுவின் அலுவலகமான மல்லிகைக்கு என்னைக் கொண்டு போனார்கள்.

விடிய விடிய எனது அலுவலகத்தில் சோதனை நடந்த அதே இரவில், எனது வீட்டுக்குள்ளும் விசாரணை அதிகாரிகள் நுழைந்திருக்கிறார்கள். சோதனை என்ற பெயரில் நுழைந்தவர்கள் எனது வீட்டில் எப்படி நடந்துகொண்டார்கள் தெரியுமா?

(அடுத்த இதழில் சொல்கிறேன்...)

NÆKØB -DKS Video

Danmark பிறடேஷ்சியா மாநகரில் (Nærkøb) நியர்குப் DKSVideo ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

Nærkøb Rejser®
Korskærvej 104
DK-7000 Fredericia
Tlf: 75915804
Fax/Tlf: 75 91 58 04

Nærkøb DK's Video
Korskærvei 104 (கோஸ்கர்வாய் 104)
DK 7000 Fredericia
Tlf: 75915804.

February 10-ம் திகதி முதல்
Nærkøb Travels®
உங்கள் பிரயாணத்துக்குரிய விமானச் சீட்டுகளை மிக மலிவான முறையில் உரியநேரத்தில் நீங்கள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் இவ்வாண்டிலிருந்து எமது ஸ்தாபனம் இந்திய/சிங்கப்பூர் சுற்றுலாவை ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் இச்சுற்றுலா ஆரம்பமாகும்.
FREMMED Pas வைத்திருப்போரும் இந்த சுற்றுலாவில் கலந்து கொள்ளலாம் என்பதை மிக மிக மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறார்கள்.

ஆரம்பமாகிவிட்டது
Nærkøb Money Transfer
15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும். இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

# வல்லூறு முகவர்கள்

**2**

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலுள்ள அப்பகுதி மக்களிடையே பிரபலமான நிழற்படப் பிடிப்பகம் ஒன்றுண்டு. காலத்தின் வளர்ச்சியால் அவர்கள் ஒழியிழைப் (வீடியோ) படப்பிடிப்பாளர்களாகவும் மாறிவிட்டனர். அங்கு கடமையாற்றியவர்களில் ஒருவன்தான் சுதா. சிறீலங்காப் படையினருடனான சமரில் விதைகள் வீழ்ந்த போது அவர்களது வித்துடல்களுக்கு

# நெதர்லாந்து→பிரான்ஸ்→கொழும்பு
# கொழும்பு→உக்ரேயின்→மரணம்

மக்கள் தமது வணக்கத்தைத் தெரிவித்த உணர்வுமயமான நிகழ்ச்சிகளையெல்லாம் படப்பிடிப்பு சாதனத்திற்குள் அடக்கியவர்களில் சுதாவும் அடக்கம். 'சூரியக்கதிர்' வெறிகொண்டு யாழ். குடாவில் பாய்ந்ததன்போது வன்னிக்குச் செல்ல முடியாமல் யாழ்ப்பாணத்திலேயே சுதா மாட்டுப்பட்டுவிட்டான். வெறிகொண்ட துருப்புகள் விடுதலைப் புலிகளுக்கு யார் யாரெல்லாம் உதவி செய்தனர் என மோப்பம் பிடித்துப் பாய்ந்தவேளை சுதாவினையும் யாரோ காட்டிக்கொடுத்து விட்டார்கள். அதன்பிறகு என்ன நடந்திருக்கும் என்பதை நான் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. குடும்பத்தில் சுதா தான் ஒரேயொரு மகனென்பதால் சிறைப்பட்ட சுதாவினை எடுக்க அந்த அன்னை பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஒருவாறு சுதா வெளியே வந்

> அராஜகமான சிறீலங்காப் படையினரிடமிருந்து கூட ஒருவாறு தப்பிப் பிழைத்து வந்தவர்களுக்கு முகவர்கள் எனச் சொல்லப்படும் வல்லூறுகள் கற்றுத்தரும் புதிய பாடங்களோ மிகவும் குரூரமாக இருந்தது.

தான். படையினர் செய்த வதைகளெல்லாம் அவன் உடலில் சாட்சியாக இருந்தன.

அதன்பின்னர்தான் சுதாவினை எப்படியாவது வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டும் என பெற்றோர் முடிவெடுத்தனர். தமக்குக் கொள்ளிபோட மகன் நாட்டில் இருக்காதுவிட்டாலும் பரவாயில்லை, எங்காவது உயிருடன் இருந்தாலே போதும் என்ற முடிவினை கலங்கும் இதயத்தோடு அந்த அன்புப் பெற்றோர் முடிவு செய்தனர். முடிவு செய்தாலும் பயணத்திற்கு பணம்? சுதாவின் தந்தையோ புகையிலைப் பாடம் அடுக்கும் ஒரு தொழிலாளி அந்தத் தொழிலாளிக்கு இலட்சங்களைப் புரட்டுவது ஒன்றும் இலேசான வேலையல்ல. எனவேதான் சுதாவின் மாமாமார் பணவுதவி செய்ய முன்வந்தனர். மீண்டும் ஒருநாள் இதே விமான நிலையத்தினூடாக சடலமாக வருவேன் என்பதை ஒரு துளி கூட அறியவாய்ப்பில்லாதவனாக கொழும்பு விமான நிலையத்தைவிட்டு தனது துயரப் பயணத்தின் வாசலுக்குள் காலடி வைத்தான் சுதா.

* * *

சுதாவின் விபரங்களடங்கிய தொலைநகல் ஒன்றினை கையில் வைத்திருந்தவாறு சுதாவினைத் தேடிய சிங்கள அதிகாரிகள் சுதாவினைக் கண்டுபிடித்துவிட்டனர். விமான நிலையத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள ஒரு அறைக்குள் அவனைக் கூட்டிச்சென்ற அந்த அதிகாரிகள் சுதாவைத் தாக்கத் தொடங்கினர்.

திருட்டுத்தனமாக நாட்டைவிட்டுச் சென்றுவிட்டு சிறீலங்கா நாட்டிற்குக் கெட்டபெயரை வெளிநாடுகளில் வாங்கிக்கொடுப்பது உன்னைப்போன்ற புலிகள்தான் எனச்

## உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு

சொல்லிச் சொல்லித் தாக்கினர். தான் நாட்டுக்குத் திருப்பியனுப்பப் பட்டாலும் தனக்கு என்ன நடக்குமென்று பிரெஞ்சு அதிகாரிகளிடம் சுதா என்ன சொன்னானோ அது தான் அவனுக்கு அங்கு நடந்து கொண்டிருந்தது.

தாக்கியவர்கள் அவனை நீர்கொழும்பிலுள்ள சிறைக்கு அனுப்ப ஆயத்தமும் செய்தவேளை சுதாவினை அவர்களின் கைகளிலிருந்து மீட்பதற்காக சுதாவின் உறவினர் ஒருவர் ஒருதொகை பணத்துடன் உயர் அதிகாரியொருவரைச் சந்தித்தார். பணம் கைமாற தற்காலிக சுதந்திரப்பறவையாக விமான நிலையத்தைவிட்டு வெளியே வந்தான் சுதா. தான் மாவீரர்களுக்குப் படம் எடுத்தது பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்தால் தனது கதி என்னவாயிருக்கும் என்பதையும் அவன் மனம் எண்ணாத் தவறவில்லை.

தான் நாட்டைவிட்டுச் சென்ற வேளையில் இருந்த நிலைமையை விட இப்போது கொழும்பில் இருக்கும் நிலைமையைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு அடி வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றுவதுபோலிருந்தது. எனவே மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல மேற்குலகப் பயணத்திற்கான ஆயத்தங்கள் நடந்தன. இது தனக்குரிய மரணப் பயணமென்பதை அறியாதவனாக 98-ம் ஆண்டு நடுப்பகுதியில் மொஸ்கோவிற்குப் பயணமானான் சுதா. பின்னர் அங்கிருந்து உக்ரேயினிற்கு மாற்றப்பட்டதும் சோதனைகளும் வேதனைகளும் ஆரம்பமானது. உக்ரேயினில் சுதா குழுவினரை பொறுப்பேற்றவர்கள் சற்குணமும், தாசனும்.

இவ்விருவருக்கும் அவர்களது எதிர்க்குழு முகவர்களுக்குமிடையே உச்சக்கட்ட முரண்பாடு நிலவிய காலத்தில்தான் சுதா குழுவினர் உக்ரேனிற்கு வந்து சேர்ந்தார்கள். ஆட்களை அனுப்பிவைப்பது தொடர்பாக இவ்விரு தரப்பிற்கும் எழுந்த சர்ச்சையால் ஒரு தரப்பினரை மறு தரப்பினர் பழிவாங்கக் காத்துக்கொண்டிருந்தனர்.

சற்குணத்திற்கும் தாசனுக்கும் புதிதான ஆட்கள் கிடைத்தது எப்படியோ அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. எனவே தமது பழிவாங்குதலை இந்த ஆட்களை வைத்தே மேற்கொள்வதென அவர்கள் முடிவு செய்தார்கள். இதற்கிடையே சற்குணமும் தாசும் பணத்தினைக் கேட்டு சுதாவினை துன்புறுத்தத் தொடங்கினர். ஒழுங்காக காசு அனுப்பாவிடில் உன்னை மாபியா குழுவினரிடம் ஒப்படைத்துவிடுவோம் எனவும் மிரட்டினர். இந்த மிரட்டல்கள் பாரிசிலுள்ள சுதாவின் மாமாவிற்கும் எட்டியது. முகவர்களின் கொடூரம்பற்றி அவருக்கு ஓரளவு தெரிந்திருந்ததால் அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தனக்கே ஒழுங்கான வதிவிட அனுமதியில்லாது துன்பப்பட்டிருக்கும் அவருக்குத் தனது மருமகனையும் காப்பாற்றவேண்டிய நிலைமை. எனவே அங்கும் இங்கும் அவசரமாக 70000 பிராங்குகளை கடன்பட்டு அதனை முகவர்கள் குறிப்பிட்ட விலாசங்களுக்கு பிரெஞ்சு தபார்சேவையான La Poste -இன் வங்கி சகாவான Western union ஊடாக அதனை




அனுப்பி வைத்தார்.

இவ்வங்கியூடாகப் பணம் அனுப்பும்போது பணத்தைப் பெறுபவர் சில சங்கேத எண்களையோ அன்றி சங்கேத சொற்களையோ சொல்ல வேண்டும். அவ்வாறாயின் தான் பணம் அனுப்புபவர் குறிப்பிட்ட சங்கேத சொற்களுக்கு அவை பொருந்துகிறதா என வங்கி பார்த்தபின்னர் பணத்தினைக்கொடுக்கும். இது அவ் வங்கியின் நடைமுறை.

சுதாவின் மாமா மூன்று பிரிவுகளாக இவ்வங்கியூடாகப் பணத்தினை உக்ரேயினிற்கு அனுப்பி வைத்தார். அனுப்பும்போது அவர் வங்கியிடம் குறிப்பிட்ட இரு சங்கேதச் சொற்கள் 'Bon Jour', 'Au Revoir' என்பனவாகும் (படத்தில் காண்க). இச் சங்கேதச் சொற்களை உக்கிரேனிலுள்ள பணத்தைப் பெறும் முகவர்களிடம் சொல்லியும் விட்டார். எனவே சுலபமாக பணம் அவர்களுக்குப் போய்ச் சேர்ந்து விட்டது. ஜனவரி மாதம் 25ம், 26ம் திகதிகளில்தான் அவர் பணத்தினை அனுப்பிவைத்தார்.

ஆனால் இதற்கிடையே சற்குணத்தினதும் தாசினதும் எதிர்த்தரப்பு சுதாகுழுவினரைக் கடத்த முடிவுசெய்துவிட்டது. இவர்களைக் கொண்டே அவ்விருவருக்கும் பாடம் படிப்பிப்பதுதான் அவர்களது திட்டம். ஆனால் இது ஒன்றுமே தெரியாத பையன்களோ பிரயாணம் இன்று சரிவரும், நாளை சரிவரும் என்ற நப்பாசையுடன் இருந்தனர்.

எதிர்த்தரப்பாரின் திட்டமும் ஒரு நாள் நிறைவேறியது. திடீரென இவர்கள் தங்கியிருந்த வீட்டிற்குள் புகுந்த சிலர் சுதா குழுவினரைக் கடத்திச் சென்று மறைவான ஓரிடத்தில் வைத்துவிட்டார்கள். கடத்தப்பட்டவர்களுக்கோ மிக அதிர்ச்சி. என்ன நடந்தது... எதற்காகத் தாம் கடத்தப்பட்டோமென்பதோ கடத்தியவர்கள் யாரென்பதோ தெரியாது. கொழும்பில் கொலைக்குழு உலாவும் 'வெள்ளை வான்' போல இங்கும் ஏதாவது குழு செயற்பட்டு தம்மைக் கொலை செய்யத்திட்டமிட்டுள்ளதோ என்ற சந்தேகம் கூட முளைத்தது. அராஜகமான சிறீலங்காப் படையினரிடமிருந்துகூட ஒருவாறு தப்பிப் பிழைத்து வந்தவர்களுக்கு முகவர்கள் எனச் சொல்லப்படும் வல்லூறுகள் கற்றுத்தரும் புதிய பாடங்களோ மிகவும் குரூரமாக இருந்தது.

பையன்கள் கடத்தப்பட்டதால் சற்குணமும் தாசனும் முதலில் அதிர்ந்தாலும் 'கீவ்' நகரப் பொலிசாருக்குப் பணத்தினை வாரிக் கொடுத்து பையன்களை மீட்டுத்தரும்படி கூறினர். எதிர்த்தரப்பினரின் நடமாட்டங்கள், அவர்களது இடங்கள் என்பன இவர்களுக்கும் தெரிந்திருந்ததால் குறிப்பிட்ட ஓரிடத்தை முற்றுகையிட்ட பொலிசார் பையன்களை மீட்டனர். 15 நாட்கள் ஒருவித சிறையிலிருந்த அனுபவத்துடன் மீண்டும் தாசினதும் சற்குணத்தினதும் கைகளுக்குள் பையன்கள் வந்தனர். ஆனால் இனி பையன்களை 'கீவ்' இல் வைத்திருப்பது ஆபத்தானது என்பதை உணர்ந்த அவ்விருவரும் பையன்களை சிலோவாக்கியா நாட்டிற்கு நகர்த்தத் திட்டமிட்டனர். ஏப்ரல் மாதமென்றாலும் உக்ரேன்-சிலோவாக்கியா எல்லையில் கடுமையான பனிபெய்து கொண்டிருந்தது. அவ்வாறான வழியில்தான் சுதாகுழுவிலுள்ள ஏழு பேரும் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். ஏற்கனவே கடத்தப்பட்டு சிறை



போல் அடைத்து வைக்கப்பட்டிருந்ததும், சரியான உணவில்லாமையினாலும் துவண்டுபோயிருந்த பையன்கள் மன வலிமையை மட்டும் வைத்திருந்தபடி பயணத்தை மேற்கொண்டனர். ஆனால் அந்தக் கடுமையான பயணம் சுதாவிற்கு ஒத்துழைக்கவில்லை. குளிரில் நடுங்கி இடைவழியிலேயே பல தடவைகள் மயங்கி விழுந்துவிட்டான். இந்த சிக்கல்களுக்கு மத்தியில் சிலோவாக்கிய பொலிசாரிடம் இவர்கள் மாட்டுப்பட்டுவிட்டனர். அழைத்துவந்தவன் இவர்களை நடுவழியில் விட்டுவிட்டு மறைந்தும்விட்டான். சுதாவின் உடல் நிலையின் மோசத்தைக் கண்ட பொலிசார் அவனை அங்குள்ள வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு மிகுதிப் பேரை மீண்டும் உக்கிரேனுக்கே திருப்பிவிட்டனர். ஏப்ரல் 18ம் திகதி உக்ரேனிலிருந்து சிலோவாக்கியா நோக்கிப் புறப்பட்ட சுதா என்ற ஒரு ஏழை தொழிலாளியின் மகன், இரு நாட்கள் கழித்து அநாதரவான நிலையில் அந்த வைத்தியசாலையில் ஒரு படுக்கையிலிருந்து இந்த உலகத்திலிருந்தே விடைபெற்றுவிட்டான். ஒருமாதத்திற்கும் மேலாக அநாதரவான உறை நிலையில் Michalovce வைத்தியசாலை சவக்கிடங்கில் கிடந்த அவனின் சடலம் கடந்த 30ம் திகதி கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டது (மாமாவின் செலவில்). அவனது மரணச்செய்தி மொஸ்கோவிலுள்ள சிறிலங்காத் தூதரகத்தினால் கொழும்பிற்கு அறிவிக்கப்பட்டு அங்கிருந்து நாவடியிலுள்ள அவனது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. பேரிடியொன்று அந்தக் குடும்பத்தில் விழுந்தது.

அன்பான வாசகர்களே உங்களின் மகனுக்கு அல்லது சகோதரர்களுக்கு, அல்லது உறவு முறையான ஒருவனுக்கு இப்படி நடந்திருக்குமானால் உங்கள் மனம் என்ன பாடுபடும்? அதுவே தான் நாவடியிலுள்ள சுதாவின் அன்பு உறவுகளுக்கு நிகழ்ந்தது. ஆயினும் இந்த சகோதரனது மரணத்திற்கான நீதி எப்போது கிடைக்கும்?

(முகவர்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

# நோயற்ற வாழ்வே...

## கோடையில் வாட்டும் நோய்களை விரட்டலாம்!

'தலைவலி, ஜலதோஷம், கண் எரிச்சல், வயிற்றுவலி, சீதப் போக்கு வயிற்றுக் கடுப்பு, சிரங்கு, அரிப்பு, கொப்புளங்கள் போன்ற சரும நோய்கள், ஒவ்வாமை (அலர்ஜி) தலைசுற்றல், மயக்கம், காமாலை நோய், சிறுநீர் கோளாறுகள், வெளியில் பரவும் அம்மைநோய் போன்றவற்றுடன் பெண்களுக்கு அதிகமான வெள்ளைபடுதலும் இந்தக் கோடையின் பாதிப்புக்களுள் முக்கியமான ஒன்று.'

இவைகளில் பலவும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவையே! ஜலதோஷம் வரும்போது தலைவலியும் சேர்ந்தே தானே வரும்? நாம் இயற்கையுடன் ஒத்துப்போகாத நிலையில்தான் பலவித சீர்கேடுகளை நாம் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 'வசந்த காலமாக' போற்றப்பட்ட சித்திரை வைகாசி மாதங்கள் வரண்ட காலமாக மாறிவிட்டதை என்னவென்பது?

இடஉணவுகளைக் கூடுமானவரை (அதிகம் உண்பதைத் தவிர்த்து, நீர் பொருட்களை எடுத்துக்கொள்ளுதல் நல்லது. நீர் பொருட்கள் என்றவுடன் கடையில் விற்கும் குளிர்பானங்கள் என எண்ணி விடாதீர்கள்! நீர்மோர், எலுமிச்சைச்சாறு, தர்பூசணி, இஞ்சி கலந்த கரும்புச் சாறு, பானை நீர் போன்றவை நலம் தரக்கூடியவை. ஃப்ரிட்ஜில் வைத்த நீரைத் தவிர்க்கவேண்டும். அது மேலும் உஷ்ணத்தையே உருவாக்கும்.

வெய்யில் நேரம் வெளியே சென்று வந்தவுடனே தண்ணீர் அருந்துவதும் கூடாது. வீட்டினுள் நுழைந்து சற்று நேரம் அந்த சூழ் நிலைக்கு நாம் பழக்கப்பட்ட பின்புதான் தண்ணீர் குடிக்க வேண்டும்.

பொதுவாக கோடையில் நம் உடலில் உள்ள நீர்ச்சத்து, சூழ் நிலையை சமப்படுத்தும் நோக்கில் அதிகமாய் வியர்வையாக வெளியேறும். இதை சமப்படுத்த அதிகமாக நீர் பருகுதல் வேண்டும். தூய்மையான வெளிர்நிற பருத்தி ஆடைகளை அணிவதால் உடலிலிருந்து வெளிவருகின்ற வியர்வை விரைவில் உலர்வதுடன், சரும நோய்கள் வருவதும் தடுக்கப்படும். இந்தக் கோடை நாட்களில் அடிக்கடி குளிர் பானங்களை ஃப்ரிட்ஜில் வைத்தவற்றை அருந்துவதினாலும் அதிகமாக வியர்த்துக்கொண்டேயிருப்பதாலும் அடிக்கடி சளி பிடிக்கும் வாய்ப்பு உண்டாகும். அதிகமான வெய்யிலில் அலைவதை தவிர்ப்பதுடன், நேரடியான வெப்பம் கால்களைத் தாக்காத வண்ணம் பாதுகாத்தலும் நல்லது. வாரம் இருமுறை எண்ணெய்க் குளியல் மிகவும் அவசியமானது. இது உடல் உஷ்ணத்தைத் தவிர்க்கும். வெள்ளரி, சுரைக்காய்ப்பூசணி, முள்ளங்கி, முளைக்கீரை போன்றவற்றை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொள்வதும், தினமும் நீராகாரம் அருந்துவதும் உடலைக்குளிர்ச்சியாக வைக்கும்.

இந்தக் காலத்தில் சாதாரணமாக அடிக்கடி ஏற்படும் பாதிப்புத்தான் ஓயாத தலைவலி. சாத்துணியை நெற்றியில் பற்றிடுவதுடன் இரண்டு, மூன்று நேர்விலைச்சாறுத் துளிகளை மூக்கில் விட்டுப் படுக்கலாம்.

நீர்கோர்த்த தலைவலி என்றால் நொச்சி, யூகலிப்டஸ் இலைகளைக் கொண்டு ஆவி பிடிப்பது பலன் தரும். சுக்கை அரைத்து பற்று போடுதல், மஞ்சள் கலந்த சூடான பால் குடித்தல், தும்பை இலைச்சாறு ஒருதுளி மூக்கில் பிழிதல் போன்றவற்றையும் செய்யலாம்.

அதிகமான வியர்வையினால் வியர்க்குரு கொப்புளங்கள் போன்றவை ஏற்படக்கூடும்.

உடல் உஷ்ணம் அதிகம் உடையவர்களுக்கு அதிக வெள்ளைபடுதல், நீர்க்கடுப்பு, உடல் எரிச்சல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும். இதற்கு நெய்யில் வதக்கிய வெள்ளை வெங்காயம் உண்பதும், தனியா (மல்லி) 2 ஸ்பூன், வெந்தயம் 2 ஸ்பூன் போட்டு 4 டம்ளர் நீரை 1 டம்ளராக சுண்டவைத்து குடித்தல் உடல் சூட்டைத் தணிக்கும்.

'ஹெல்த்' மருத்துவ இதழ் கட்டுரையிலிருந்து


# சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

சிறீலங்காவில் உள்ள தேவையான உங்கள் ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களை செய்ய பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த புதிதாக எடுக்க
* உறவினர்களை அழைப்பதற்கான சிறீலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள்
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள் -

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 ராம்

திங்கள் - வெள்ளிக்கிழமைகளில் 14h - 17h30 - வரையும்
சனி ஞாயிறு 24 மணி நேரமும்

ew 23043


காலத்தைப் பதிவுசெய்து
மாணவன் எழுதியது

# காற்றிலும் வலியன் நீ

## (சிவகுமாரன் நினைவாக)

ஒருநாள் சமீபத்தில் கடந்து போயிற்று. அந்த ஒருவனை நினைவு கூர இந்தப் பதி- நினைவு கூர்வது மாத்திரமல்ல நினைத்து நெகிழ்வதும்-நெகிழ்ந்து (பதிவதும்-பதிவதை) பகிர்வதுமே இந்தப்பத்தி.

**காற்றிலும் வலியன் – நீ**
**கடலிலும் பெரியன் நீ**
**சேற்றாகிச் சிதைந்தவாழ்வில்**
**சிறு அரும்பாகித் துளிர்த்தவன் நீ**
**நேற்றாகி இன்றாகி**
**நெடு நின்ற நாளாகி**
**ஊற்றாகி நின்றவன் நீ**
**உயிராகி நிறைந்தவன் நீ**

யார் அவன்? இத்தனை வலிமை கொண்டவன் எவன்? காற்றிலும் பெரியவனா? கடலிலும் வலியவனா? ஊற்றாகி நின்றவனா? உயிராகி நிறைந்தவனா? யார் அவன்?

இதனை அறிய நாள் இன்னும் நெடுந்தூரம் பின்னோக்கிப் போகவேண்டும்.

வரலாறு நமக்குக் கற்றுத்தந்தவை அனேகம். வரலாற்றிலிருந்து நாம் கற்றுக்கொண்டவை அனேகம்.



**இயற்கை எனது நண்பன்**
**வரலாறு எனது வழிகாட்டி**
**வாழ்க்கை எனது தத்துவம்**

பழையதை மறந்துவிடுங்கள்-நாம் புதியதை சிந்திப்போம் என்றொரு வார்த்தை பலரால் சொல்லக்கேட்டிருக்கிறோம்.

புதிதாகச் சிந்திப்போம் என்பது சரி. புதியதைச் சிந்திப்போம். ஆனால் பழையதை மறந்துவிட முடியாது. பழையதில் இருந்து நாம் பாடம் கற்றுக்கொள்வோம்.

வரலாற்றை எமது வாழ்வின் துணையாக்கிக் கொண்டோம்.

நமக்கென்று நிலம் இருந்தது. நாம் வாழ இடம் இருந்தது. நமக்கென்று ஊர் இருந்தது. நாம்வாழ வீடிருந்தது – நமக்கென்று வாழ்விருந்தது. வாழ்கிற்கோர் வளமிருந்தது.

மலைகள் சூழ்ந்த வளவு. வளம் நிறைந்த கமலி. வாய்க்கால் ஓடும் வாசல். வாசலின் பின்னால் தோப்பு. தோப்பு நிறைந்த தென்னை – தென்னை நிறைந்த குலை.

அந்தண்டைப் பக்கம் போனால் இவதியெல்லாம் காவலாம். மந்த மாருதம் வீசும் சோலை. மனம் நிறைந்து விடியும் காலை. செழுந்தமாய் இருந்த நிலம். சோறூட்டி வளர்ந்த மலம். எந்தப் பக்கம் திரும்பினாலும் எல்லாம் எங்களது புலம்.

**கனவுகொண்டு போகவோ – யாரும்**
**காலூன்றி நிற்கவோ – எங்கள்**
**வளவுக்குள் எவரும் வந்து**
**வளம் பறிக்கவோ?**
**களம் பல கண்டவர் நாம்**
**கடுஞ்சமர் வென்றவர் நாம்**
**நிலம் பறிக்க நாம் விடுவோமா?**
**நெருக நிமிர்ந்தி நாம் எதிர்க்கோமா?**

என்று எவரும் கேட்கவில்லை. நிலம் பறிக்க நாம் நெருக்க வருந்திக்கிடந்தோம்.

வளம் பறிக்க நாம் மனம் வருந்திக்கிடந்தோம்.

கனவு பேயைப்போலும் நாம் கைகட்டி வாய் பொத்திக்கிடந்தோம். எவ்வொன்று நாம் கேட்கவில்லை. எதற்கு என்று ஒரு வார்த்தை பேசவில்லை. அத்தனையும் தாங்கிக்கிடந்தோம்.

உடுத்திருந்த உடையை ஒருவன் பறித்துக்கொண்டோடினான். நாம் பார்த்துக்கொண்டிருந்தோம். அம்மணமாய் பார்த்துக்கொண்டிருந்தோம்.

உண்டுகொண்டிருந்த உணவை ஒருவன் தட்டிப் பறித்துக்கொண்டோடினான். நாம் பசிக்கவில்லை என்றிருந்தோம்.

நமது வீட்டினுள் புகுந்து ஒருவன் களவெடுத்தான். வீட்டை நமது என்றான். அட அப்படியா என்று ஆச்சரியப்பட்டுப்போய் நாம் வெளியேறினோம்.

**நான் நதியாய் ஓடினேன். அவன்தன்**
**வயலுக்கு வளம் சேர்த்தான்.**
**நான் கடலாய்**
**பெருகினேன். அவன் தன் உணவுக்கு மீன்**
**பிடித்தான். நான் மலையாய் உயர்ந்தேன்.**
**அவன் தனது சிகரம் என்று ஏறினான்.**
**நான் மலராய் விரிந்தேன்.**
**அவன் தனக்கு ஒரு**
**மாலை கோர்த்தான்.**

இப்படியே இருப்பதா? இரங்கி அழுவதா? அஞ்சி அஞ்சி வாழ்வதா? அடக்குமுறைக்குள்ளாவதா? வெஞ்சினம் கொள்வோமே, வெறிகொண்டு எழுவோமே, துஞ்சி நாம் கிடக்கோம், துடித்தெழுந்து போரிடுவோம்...:

என்றே எழுந்தோம். ஆனால் என்ன செய்தோம்? பசிரிட்டு நாம் பலன் அனுபவிக்க மறுத்தோம். இயலாது என்பது எமக்குத் தெரியும். அதனால் சுலபமாம் போனோம். உண்ணாவிரதம் இருந்தோம்.

எதுவும் நடந்ததா? அகிம்சையால் நாம் ஆற்றியது என்ன?

**அடிபட்டோம் மிதிபட்டோம்**
**உதைபட்டோம் வதைபட்டோம்**
**உங்களுக்கு உரிமை கேட்டு**
**சிறை கூடச் சென்றுள்ளோம்**
**எங்களுக்கு வாக்களிப்பீர்**
**எங்களுக்கே வாக்களிப்பீர்.**

என்று வாக்களிக்கக்கேட்டோம். வயிற்றில் பால் வார்க்கக் கேட்டோம்.

வாக்களித்தோம் - வயிற்றில் பால் வார்த்தோம். வக்கீல்கள் அல்லவா நாம்? நன்றாக வழக்குப் பேசினோம்.

**தூக்கு மேடை பஞ்சுமெத்தை**
**துப்பாக்கிக்குண்டு விளையாட்டுப்பந்து**

என்றெல்லாம் மேடை போட்டு முழங்கினோம்.

'பெரிய தேர்தல் சிறிய தேர்தல்
குட்டித் தேர்தல் குஞ்சுத் தேர்தல்
ஒன்று முடிய இன்னொன்று
எந்த நாளும் திருவிழாதான்'
என்று விழாக் கொண்டாடினோம்.

வக்கீல்கள் வயிற்றுப்பாட்டைப் பார்த்தனர். வாழ்வை சொகுசாக அனுபவித்தனர். அப்புக்காத்துமார் அத்தனையையும் அருமையாகச் செய்தனர்.

ஆனால் நாம் நெஞ்சம் தவறி நிலைகுலைந்து வீழ்ந்தோம்.

**'மலையளவாய் இருந்த மண்**
**தினையளவாய்ச் சுருங்கிப் போயிற்று**
**கடல் அளவாய் இருந்த வயல்**
**கடுகளவாய் குறைந்து போயிற்று**
**நாடளவாய் இருந்த நிலம்**
**வீடளவாய் விரைந்து குறுகிற்று**
**காடளவாய் இருந்த வளம்**
**கூடளவாய் குறுகிப் போயிற்று.**

நிலம் போயிற்று. நிலைமை போயிற்று. வளம் போயிற்று. வயல் போயிற்று. கடல் போயிற்று, கழி போயிற்று. மலை போயிற்று. மண்போயிற்று, மரம்போயிற்று, ஆறு போயிற்று அத்தனையும் போயிற்று.

தோப்பு, தோட்டம், வீடு, வளவு, மலை அதன்கூலம் எல்லாம் போயிற்று.

இனி இருப்பது? இருப்பதற்கு வழியில்லை. உயிர்? கொஞ்சம் கொஞ்சமாக ஓய்ந்து போகிறது. கொஞ்சம் கொஞ்சமாக ஓய்ந்து போகிறது- அழிந்து போகிறது- இனி இல்லாமற் போகிறது.

வெற்றுக்கோசம் போட்டவர்கள். விண்ணதிர முழங்கியவர்கள் விலகிப்போயினர்.

மிக விரைவில்

# SAJI COM

சர்வதேச தொலைபேசி அட்டைகள்



# சாயி கொம்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

**Tel: 06 80 27 70 57**

Pub.

# புகலிட நிகழ்வுகள்

## மாவீரர் நாள் 1999 மெய்வல்லுனர் போட்டிகள்

ஜேர்மன் தமிழ்மாணவர் அமைப்பினரால் நடாத்தப்படும் 1999ம் ஆண்டிற்கான மாவீரர் வெற்றிக்கிண்ண மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 19ம் திகதி சனியன்று ஆரம்பமாகின்றன. முதலாவது மாநில மெய்வல்லுனர் போட்டி முன்ஸ்ரர் நகரில் Tilbeckr Str-41, Sportanlage Roxel என்ற மைதானத்தில் அத்தினம் காலை பத்துமணிக்கு ஆரம்பமாகும்.

வடமாநிலமும் மத்திய மாநிலத்தின் ஒரு பகுதியும் இப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. போட்டியாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே மைதானத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். 100, 200, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகள், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் ஆகிய போட்டிகள் இங்கு இடம்பெறும். போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்களையும் வீராங்கனைகளையும் ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் மைதானம் நோக்கித் திரளுமாறு அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## நல்வாய்ப்பு சீட்டிழுப்பு முடிவுகள்

ஜேர்மனியில் நடைபெற்ற தமிழ் மாணவர் எழுச்சிக் கலைமாலையின்போது அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு குலுக்கப்பட்டது. ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பினரால் நடாத்தப்பட்ட எழுச்சிக் கலைமாலை நிகழ்ச்சி டோட்முண்ட் நகரில் 05.06.99 சனியன்று நடைபெற்றது. அதிஷ்டலாபச்சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு.

முதல் பரிசு. இல: 0596— திரு. நடேசமாலன்—கம் பரிசு: கணனி

இரண்டாம்பரிசு இல: 0934— திரு. அருந்தவராசா—வேர்வர் பரிசு: ஒலித்தெறிப்பு அச்சியந்திரம்

மூன்றாம் பரிசு: இல4953—திருபாலகிருஸ்ணன் டோட்முண்ட், பரிசு: வீடியோ CD Player

**ஆறுதல் பரிசுபெறும் பத்துப்பேர்களின் விபரம்:**

1. இல: 1740—திரு. சந்திரகுமார்—பேர்க்கைம்
2. இல: 5031—திரு. வி.ஜெயா—டியூஸ்பேர்க்
3. இல: 1544—திருமா.விமலநாதன்— அன்ராத்
4. இல: 3293—திரு. மாஸ்ட்டர்—லீங்கன்
5. இல: 0969—திரு. அன்னராஜா—டோட்முண்ட்
6. இல: 0315—திருடி.சண்முகநாதன்—மூல்கைம்
7. இல: 0008—கினேஷாடி.ரேடிங்—டோட்முண்ட்
8. இல: 5786—திருகாம.கருணானந்தன்—ஒஸ்லாபுறூக்
9. இல: 1727—திரு. தில்லைநாதன்—பேர்க்கைம்
10. இல: 1405—திரு. பி. அசோகன்—லெவகூசன்

- வீ.ஆர். வரதராஜா

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
CENTRE PARISIEN D'EDUCATION POUR LES TAMOULS

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

புதிய பிரெஞ்சு வகுப்பு
காலம் : 19.06.99
நேரம்: மாலை 5.30 – 7.00
கஜன்

புதிய ஆங்கில வகுப்பு
காலம் : 19.06.99
நேரம் மாலை 4.00 – 6.30
றொனி
சனிக்கிழமைகளில் மட்டுமான வகுப்பு

புதிய கணனி வகுப்பு
காலம் : 19.06.99
நேரம்: மாலை 3.00 – 5.00
சோபன்

புதிய பிரெஞ்சு உரையாடல் வகுப்பு
காலம் : 19.06.99
நேரம் மாலை 4.00 – 5.30
மாலினி
ஏற்கனவே ஓரளவு பிரெஞ்சு கற்றவர்களுக்கு

நேரடி தொடர்புகளுக்கு
165, rue de Charonne 75011 Paris.
(M° : Alexandre Dumas ou Charonne)

பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி 04.07.1999 அன்று நடைபெறும்

# தமிழ்மாணவர் எழுச்சிநாள்

ஜேர்மனியில் உணர்வு பூர்வமான எழுச்சிக் கலைநிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது. ஜேர்மனி டோட்முண்ட் நகரில் 'புனோரியன்கல' மண்டபத்தில் 05.06.99 சனியன்று மாலை-5 மணி முதல் இடம்பெற்ற இந்நிகழ்ச்சி, முதல் களப்பலி தியாகி சிவகுமாரன் நினைவு அரங்கில் அமைதி வணக்கத்தை அடுத்து மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

செல்வன் தர்மலிங்கம் இராஜகுமாரன் வரவேற்புரை வழங்கியபின்பு, செல்வி கல்யாணி ஜெயா, செல்வன் பிரதாபன் ஜெயா ஆகியோரின் புஸ்பாஞ்சலி நடனம் இடம்பெற்றது.

தமிழர் கலைகளில் பரதக் கலையின் விளக்கத்தை தமிழீழ விடுதலைப்புலிகளின் ஜேர்மனிப் பணியக கலைபண்பாட்டுக் கழக நடன ஆசிரியை திருமதி. அற்புதராணி கிருபராஜ் வழங்கியதுடன், அவரின் மாணவிகளான செல்வி துர்க்கா ஜெயக்குமார், செல்வி அனுசியா ஞானேஸ்வரன் ஆகியோரின் நடனமும் இடம்பெற்றது. ஆசிரியையின் விளக்கத்தை மாணவிகள் நடனத்தின் மூலம் தெளிவுபடுத்தினர்.

'திரும்பிப்பார் தேசத்தை' எனும் உணர்ச்சிக்கவிதையை செல்வன்—லம்போதரன் பாடினார். அதனையடுத்து தமிழ் மாணவர்களின் இனிமையான வாத்திய இசை இடம்பெற்றது. இதில் வயலின் செல்வி துசேந்தி மனோகரன், கீபோர்ட் செல்வன் விக்ரமன் நாகராஜா, சல்லாரி செல்வி திரஞ்சினி நாகராஜா, புல்லாங்குழல் செல்வி பிரியதர்சினி மனோகரன், தபேலா: செல்வன் சுந்தர் சுப்பிரமணியம் ஆகியோர் பங்குபற்றினர். அனுபவமிக்க இசைக்கலைஞர்களுக்கு நிகராக இவர்கள் வாத்தியக்கருவிகளை அநாயாசமாக இசைத்தனர். சபையோரின் கைதட்டலைப் பெற்றது இந்தவாத்திய இசை. ஜேர்மன்வாழ் தமிழ் மாணவர்களின் வளர்ச்சிக்கு பெற்றோரின் வழிகாட்டல் சரியானதா? தவறானதா? என்ற தலைப்பகத்தின் கீழ் மாணவர்பட்டிமன்றம் நடாத்தப்பட்டது, சரியானது என்பதை ஆதரித்து செல்வி ஜெகதா புவனேஸ்வரன், செல்வன் விஜய் ஆகியோர் வாதிட்டனர். அதனை எதிர்த்து செல்வன் தர்மலிங்கம் இராஜகுமாரன், செல்வி ரஜிதா இரகுபதி ஆகியோர் வாதிட்டனர். இந்தப் பட்டிமன்றத்துக்கு செல்வி. கலைமகன் தங்கவேல் நடுவராகக் கடமையாற்றினார். பட்டிமன்றத்துக்கான விவாதம் போதுமானதாக இல்லையெனினும், தவறானது என்ற அணியினருக்கு சபையோரின் கைதட்டல் கூடுதலாக இருந்தது. இருப்பினும் நடுவரின் தீர்ப்பு, 'ஜேர்மன்வாழ் தமிழ் மாணவர்களின் வளர்ச்சிக்கு பெற்றோரின் வழிகாட்டல் சரியானதே' என்பதாகும்.

விடுதலை எழுச்சிகானங்கள் அடுத்ததாக இடம்பெற்றன. தமிழீழ விடுதலைப்புலிகளின் ஜேர்மனிப் பணியக கலைபண்பாட்டுக் கழக தமிழீழம் இசைக்குழுவினர் இசைவழங்க, தமிழர் புனர்வாழ்வுக் கழக விடுதலைக்கானம் பாடி போட்டிகளில் , வெற்றி பெற்ற பாடகர்கள் விடுதலைப் பாடல்களைப் பாடினர். உணர்வுமிக்க தமிழர் எழுச்சிகானங்கள் இங்கு உதயமாகின. அனைத்தும் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றன. தமிழீழம் இசைக் குழுப்பாடகர்களின் பாடல்களும் இடம்பெற்றன.

எழுச்சி நாள் நிகழ்ச்சிகளை இருபவனிரைன், திருமதி பிரேமினி ரஞ்சித் ஆகியோர் தொகுத்துவழங்கினர். தமிழ்மாணவர் அமைப்பின் சார்பில் நன்றி உரையை செல்வி யாழினி தியாகராஜா வழங்கினார்.

இந்த எழுச்சிநாள் நிகழ்ச்சியில் பிரதமவிருந்தினராக சென்னை கிறித்தவக் கல்லூரி பேராசிரியர் திரு. க.அரசேந்திரன் கலந்து கொண்டார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

'புறநானூறு புகழும் தமிழ் வீரர்களைப் பற்றிப்படித்துள்ளோம். ஆனால் அவர்கள் தங்களுக்குள் மோதிக்கொண்டார்கள். சேரன் சோழனுடன், அல்லது சோழன் பாண்டியனுடன் என மோதி தங்கள் வீரமுத்திரையைப் பதித்ததாகப் பதியப்பட்டுள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப்போரில் பலமிக்க சிங்களப்படையுடன் மோதும் மாபெரும் வீரன் பிரபாகரன் வாழும் இதே காலப்பகுதியில் நாமும் வாழ்கின்றோம் என்பதில் நான் பெருமைப்படுகிறேன். உலகமே சிங்களப் படைக்கு உதவி செய்தாலும் தமிழர்களின் உதவியுடன் தனித்துநின்று தமிழீழம் பெறப்போராடுவேன் என்று செயலில் நிரூபித்துக்கொண்டிருக்கும் அந்தத் தமிழ் வீரனைப் போன்றதொரு வீரனை புறநானூறு கண்டதில்லை. தலைவர் பிரபாகரனின் கரங்களை பலப்படுத்தவேண்டும். புலம்பெயர் வாழ்தமிழ் மக்கள் அவர் கரங்களைப் பலப்படுத்தவேண்டும். புலம்பெயர் மண்ணில் நாம் அச்சத்துடன் வாழ்கின்றோம். இங்கு நாம் எவ்வளவு செல்வத்துடன் வாழ்ந்தாலும் அவை நிரந்தரமல்ல.

தமிழீழம் அமைந்தால் அதன் உட்கட்டுமானம் எவ்வாறு அமையவேண்டும் என தலைவர் பிரபாகரன் திட்டமிட்டுள்ளார். அதனை புத்தகமாகக்கூட வெளியிட்டுள்ளார்கள். ரஷ்ய புரட்சிகால லெனின் பின்வாங்க வேண்டி ஏற்பட்டது. அவரின் தோழர்கள் பலர் கொல்லப்பட, காட்டினுள் சென்று மறைகிறார் அவர். அங்கே மரத்தின் மீதிருந்து சிந்தித்துக்கொண்டிருக்கும் அவரின் சிந்தனைபற்றி ஒருவர் கேட்கிறார். ரஷ்யாவை எப்படி கட்டியெழுப்புவது என்பதைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தேன் என்றார் லெனின்.

அதேபோன்றதொரு எதிர்காலத்தைச் சிந்திக்கும் சிறந்த தலைவராக எமது தலைவர் பிரபாகரன் திகழ்கிறார். தமிழீழம் கிடைத்தாலும் திருப்தி அடையமாட்டேன். ஏனைய நாடுகளுடன் வளர்ச்சி மிக்கதொரு நாடாக தமிழீழம் மாறப்பாடுபடுவேன் என்று கூறும் ஒரு தலைவனை இதற்கு முன்பு நீங்கள் சந்தித்துள்ளீர்களா?

தமிழீழத்தின் முதல்களப்பலி தியாகி சிவகுமாரனின் நினைவு நாள் தமிழீழத்தில் மாணவர் எழுச்சிநாளாகக் கொண்டாடப்படும் இத் வேளையில், புலம்பெயர்வாழ் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைக்காக தமது பங்களிப்பைச் செய்யவேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். குமரிக்கண்டம் கடலினுள் மூழ்குவதற்கு முன்பிருந்த தமிழர்கள் தமிழீழத்தில்தான் வாழ்கின்றார்கள். அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா நாடுகளின் மொழியில் தமிழும் சேர்ந்திருக்கின்றன என்பதற்குப் பல ஆதாரங்கள் எம்மிடம் உண்டு' என்றார்.

- வீ.ஆர்.வரதராஜா







பேர்லின் தமிழாலயத்தின் 6வது ஆண்டு நிறைவு விழாவின்போது நிழற்படக் கருவிக்குள் சிறைப்பட்ட சில துளிகள்

## உலகத் தமிழர் இயக்க கல்விப்பணியினரால் 98ம் ஆண்டு ஜேர்மனி தமிழாலயங்களுக்கிடையே நடாத்தப்பட்ட பொதுத்தேர்வு முடிவுகள் வருமாறு

(முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்)

### சுற்றாடற்கல்வி

**ஆண்டு 3**

| | | |
|---|---|---|
| தீபிகா சண்முகராசா | 1ம் இடம் | Stuttgart தமிழாலயம் |
| நஞ்சினி மண்டலேஸ்வரன் | 2ம்இடம் | Bielefeld தமிழாலயம் |
| அபிராமி தனபாலசிங்கம் | 3ம்இடம் | Duisburg தமிழாலயம் |

**ஆண்டு 4**

| | | |
|---|---|---|
| கீர்த்திகா பூபாலசிங்கம் | 1ம்இடம் | Borken தமிழாலயம் |
| சுயானி லோகேஸ்வரன் | 2ம்இடம் | Kirchheim Teck தமிழாலயம் |
| கஜானன் சந்தீஸ்வரன் | 3ம்இடம் | Berlin தமிழாலயம் |

**ஆண்டு 5**

| | | |
|---|---|---|
| சப்தஸ்வரயா உதயராசன் | 1ம்இடம் | Hagen தமிழாலயம் |
| காருண்யா கருணாமூர்த்தி | 2ம்இடம் | Berlin தமிழாலயம் |
| கஜானன் சந்தீஸ்வரன் | 3ம்இடம் | Gummerbach தமிழாலயம் |

**ஆண்டு 6**

| | | |
|---|---|---|
| ஸ்ரீபகாந் தர்மலிங்கம் | 1ம்இடம் | Ennepetal தமிழாலயம் |
| இளங்கோ புவனேந்திரராஜா | 2ம்இடம் | Meerbusch தமிழாலயம் |
| அலன்யா ரவீந்திரன் | 3ம்இடம் | Haßlinghausen தமிழாலயம் |

**ஆண்டு 7**

| | | |
|---|---|---|
| சோபிதா சோமசுந்தரம் | 1ம் இடம் | Kirchheim Teck தமிழாலயம் |
| ருபிதா சிறீஸ்கந்தராஜா | 2ம்இடம் | Kirchheim Teck தமிழாலயம் |
| கிரேசினி லோகநாதன் | 3ம்இடம் | Münster தமிழாலயம் |

**ஆண்டு 8**

| | | |
|---|---|---|
| சோபனா நாகராசா | 1ம்இடம் | Solingen தமிழாலயம் |
| அனுஷா சிவானந்தன் | 2ம்இடம் | Haßlinghausen தமிழாலயம் |
| சத்தியா இரவீந்திரராசா | 3ம்இடம் | Solingen தமிழாலயம் |

**ஆண்டு 9**

| | | |
|---|---|---|
| சர்மிளா பரஞ்சோதி | 1ம்இடம் | Haßlinghausen தமிழாலயம் |
| பிரசாந்தி உமாபதிசிவம் | 2ம்இடம் | Stuttgart தமிழாலயம் |
| பிரவீனா பொன்னுத்துரை | 3ம்இடம் | Hannover தமிழாலயம் |

**ஆண்டு 10, 1ம் வருடம்**

| | | |
|---|---|---|
| கபிலினி தெய்வேந்திரம் | 1ம்இடம் | Solingen தமிழாலயம் |
| சிவப்பிரதா சிவசுப்பிரமணியம் | 2ம்இடம் | Remscherd தமிழாலயம் |
| ஜெயரஞ்சனி குமாரசாமி | 3ம்இடம் | Solingen தமிழாலயம் |

**ஆண்டு 10, 3ம்வருடம்**

| | | |
|---|---|---|
| சுபாசினி விக்கினேஸ்வரன் | 1ம்இடம் | Mühlacker தமிழாலயம் |

### தமிழ்த்திறன் 99 பேச்சு

**6-7 வயது**

| | | |
|---|---|---|
| தீபிகா ஜெயராசா | 1ம்இடம் | Neuss தமிழாலயம் |
| தர்மிலன் ஜெயக்குமாரன் | 2ம்இடம் | B.vörber தமிழாலயம் |
| ஜெனுசியா சிவஞானராசா | 3ம்இடம் | Hagen தமிழாலயம் |

**8-9 வயது**

| | | |
|---|---|---|
| கஜிநாத் தவம் | 1ம்இடம் | Ennepetal தமிழாலயம் |
| திலக்ஷா மரியதாஸ் | 2ம்இடம் | Neuss தமிழாலயம் |
| சவினா உருத்திரா | 3ம்இடம் | Berlin தமிழாலயம் |

**10-11 வயது**

| | | |
|---|---|---|
| சப்தஸ்வரயா உதயராசன் | 1ம்இடம் | Hagen தமிழாலயம் |
| உமா சிறிவிக்னேஸ்வரமூர்த்தி | 2ம்இடம் | Franfurt தமிழாலயம் |
| வெண்ணிலா மகேஸ்வரன் | 3ம்இடம் | Mühlacker தமிழாலயம் |

**12-13 வயது**

| | | |
|---|---|---|
| கார்த்திகா மும்பிரகாஸ் | 1ம்இடம் | Düren தமிழாலயம் |
| திவ்யகா சிறீமோகன் | 2ம்இடம் | Hamburg தமிழாலயம் |
| செந்தூரன் சபாரத்தினம் | 3ம்இடம் | Dortmund தமிழாலயம் |

**14-15 வயது**

| | | |
|---|---|---|
| ஸ்ரெபான் வலன்ரைன் | 1ம்இடம் | Haßlinghausen தமிழாலயம் |
| லக்சனா பத்மநாதன் | 2ம்இடம் | Neuss தமிழாலயம் |
| தர்சிகா கந்தகுலம் | 3ம்இடம் | Krefeld தமிழாலயம் |

**16-17 வயது**

| | | |
|---|---|---|
| நிருஜந்தன் திருநாவுக்கரசு | 1ம்இடம் | Edenkoben தமிழாலயம் |
| கார்த்திகா ஞானசேகரம் | 2ம்இடம் | Haßlinghausen தமிழாலயம் |
| சொரூபலக்ஷ்மி இரத்தினசிங்கம் | 3ம்இடம் | Wuppertal தமிழாலயம் |

**18-19 வயது**

| | | |
|---|---|---|
| யோகேந்திரம் நரேந்திரசிங்கம் | 1ம்இடம் | Frankfurt தமிழாலயம் |
| நிருசியா திருநாவுக்கரசு | 2ம்இடம் | Edenkoben தமிழாலயம் |
| கார்த்திகா ஞானசேகரம் | 3ம்இடம் | Warendorf தமிழாலயம் |

# மகாஜனமாலை 99 இன் சாமத்தியச் சடங்கு

பாரிசின் புறநகர்பகுதி ஒபெ வில்லியேர்சில் 06.06.99 ஞாயிறு மாலை, யாழ். தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவர்களால், மகாஜனமாலை 99 நடாத்தப்பட்டது.

இதன் நிகழ்ச்சிகள் ஆரம்ப மாகும் நேரத்தைப் போன்றே, நிகழ்ச்சிகளும் வித்தியாசமான தாக இருந்தன. வழமையான நிகழ்ச்சிகள் போன்றே மங்கல விளக்கேற்றல், அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகி கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டது. கல்லூரிக் கீதத்தினை குழுவாக இசைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

'விலங்கொடிப்போம்' என்ற தலைப்பில் ஒரு 'மெழுகுதிரி போல தியாகச் சுடராக வாழ்பவள் பெண்ணன்றோ' என்ற பாடலுக்கான நடனம், பாட்டின் கருத்திற்கேற்ப விறுவிறுப்பாக அமையவில்லை. ஆனாலும், பெண் அடிமையை உடைத்தெறியும் விதத்தில், அதனை விளக்கும் அளவில் பாடல் அமைந்திருந்தது நன்றாக இருந்தது. நாட்டில் விடுதலைப் போராட்டம் நடைபெறுவதை மறந்து, எதற்காக? யாருக்காக? யார், யார் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது உயிர்களை வீரத் தியாகம் செய்துகொண்டும், மரணித்துக்கொண்டும் இருக்கிறார்கள்" என்பதை மறந்து, நிகழ்ச்சி ஆரம்பமாகும்போது, ஒரு நிமிட மௌன அஞ்சலி எனக் குறிப்பிட்டு, அதற்கும் நன்றி கூறி ஆரம்பமாகிய இந்நிகழ்ச்சியில், பெண் விடுதலையைப் பற்றியும் எமது நாட்டில் வாழும் பெண்களின் நிலைபற்றியும் குறிப்பிட்டு நிகழ்ச்சிகள் வழங்கியது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

கலாலயம் மாணவர்களின் பரதநாட்டியம் நன்றாக இருந்தது. குறிப்பாக மயிலைத்துறை விட்டவர் மிகச்சிறப்பாக அபிநயம் செய்திருந்தார். நடனமாடிய மாணவிகளின் ஆசிரியை நடாத்தும் வகுப்புகள் பற்றி அறிவிப்பாளர் விளம்பரம் செய்துவிட்டு, இது விளம்பரம் இல்லை என்று 'விளம்பரப்படுத்தியதும்' வித்தியாசமாகவே இருந்தது.

மேலும் அறிவிப்பாளர், நிகழ்ச்சியின் ஆரம்பத்திலேயே கூறியிருந்தார், 9 ஆண்டுகளாக மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவர்களால் தாம் படித்த கல்லூரியை நினைவு கூறும் வகையில் நிகழ்ச்சிகள் ஒவ்வொரு ஆண்டும் நடாத்தப்பட்டு வருவதாகவும் இதேபோன்று பல கல்லூரிகளின் பழையமாணவர் சங்கங்களினால், தாம் கற்ற கல்லூரிகளை நினைவுகூறும் வகையில் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருவது பாராட்டத்தக்க விடயம் என தம்மைத்தாமே பாராட்டிக் கொண்டார்.

மேலும் தற்போது, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி பல இக்கட்டான சூழ்நிலையிலும் பல இடங்களில் இடம்பெயர்ந்து இறுதியாக மருதனாமடத்தில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு முழுநேரப் பாடசாலையாக இயங்கி வருகின்றது என குறிப்பிட்டார். வருடாவருடம் நடாத்தப்படும் இந்நிகழ்ச்சியின் வருவாயில் 3 ஆசிரியர்களுக்கு நிரந்தரமான ஊதியம் வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார்.

'விளம்பரம்' என்ற நாடகம் நல்ல கருத்துள்ளதாகவும் சமூகப் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகின்றதாகவும் இருந்தது. பங்குபற்றிய நடிகர்களும் தமது கதா பாத்திரங்களுக்கு ஏற்ப நன்றாக நடித்திருந்தார்கள். நாடகத்தின் ஆரம்பத்தில் நாடகத்தைப் பற்றி எதுவும் கூறாது, பின் நாடகம் முடிந்ததும் இது மூன்றாவது தடவையாக மேடையேறுகின்றது என்றனர். பார்வையாளர்களின் முணுமுணுப்பை அவதானித்தவர் போல். நிகழ்ச்சிகளின் இடையே, சங்கத்தின் தலைவர் நன்றி உரையினை வழங்கினார். ஒலியமைப்புச் சரியாக இல்லாததால் தனக்குள் தானே கதைத்துவிட்டுப் போனது போல் இருந்தது. நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளுக்கும் முதலிலேயே நன்றி கூறியது சரி, ஆனாலும் நிகழ்ச்சி நடந்துவிட்டதாகக் கூறியிருந்தார்.

மெல்லிசை நிகழ்ச்சியினை வழங்கிய கலைஞருக்கு, பக்திப் பாடலும், 'சினிமாப்பாடலும் மட்டுமே பாடத் தெரிந்திருக்கிறது போலும். ஆனால் இரசிக்கும்படி சிறப்பாகப் பாடியிருந்தார். மேலும், இக்கலைநிகழ்ச்சிக்காக வழங்கப்பட்ட அழைப்பிதழில், எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறைச்செல்வன், தவச்செல்வனின் பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ் என்றும், இங்ஙனம் தங்கள் நல்வரவைநாடும் மகாஜனர் குடும்பத்தினர் என்றும் குறிப்பிட்டு, பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ் போன்றே தயாரித்து இருந்தார்கள். இதனைப் பார்த்த பலரும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தார்கள். இவ்வளவு செலவில் எதற்காக இந்த அழைப்பிதழ் என்பது மாத்திரமல்ல, 4 மணிநேர நிகழ்ச்சியில் 40 நிமிட நாடகத்தை முக்கியத்துவப் படுத்தியதும் ஏனோ என்பது விளங்கவில்லை. சாமத்தியச்சடங்கு என்ற தலைப்பில் வழங்கப்பட்ட நாடகம், எமது மக்களிடையே காணப்பட்டுவரும், மூடத்தனமான, வெட்கத்திற்குரிய ஒரு நிகழ்வை நன்கு விளக்கும்படியாகவும், புரியவைக்கும் விதமாகவும் அமைந்திருந்தது. பெண்கள் மட்டும் அல்ல ஆண்களும் குறிப்பிட்ட வயதில் பருவமடைகின்றார்கள் என்பதை நாடகமூலம் மட்டும் இல்லாது, இறுதியாக வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரம் மூலமும், விஞ்ஞானரீதியாக, அறிவு பூர்வமாக விளக்கப்பட்டது வரவேற்கத்தக்க விடயமாகும்.

நிகழ்ச்சிகளின் இடையே, கனடாவில் வெளியிட்ட 'பெற்றோர் பிள்ளைகள் உளவியல்' என்ற தலைப்பிலான புத்தகம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு விற்கப்பட்டது. இதன் மூலம் பெறப்படும் பணம் கனடாவில் உள்ள Cancer Sociecty க்கு அனுப்பப்படும் எனக் கூறப்பட்டது. இவர்கள் தாய்நாட்டையும், தாய் நாட்டில் மக்கள் படும் அவலங்களையும் மறந்தது ஏன் எனப் புரியவில்லை. 'கான்சர் சொசைட்டிக்கே' இப்பணம் சேர வேண்டும் என எழுத்தாளர் தனிப்பட்ட காரணங்களுக்காக கருதியிருந்தாலும், எதற்காக அது கனடாவில் கொடுக்கப்பட வேண்டும். தமிழீழத்தில் கொடுக்கலாமே. தமிழீழத்தில் அப்படியொன்று இல்லையெனில் உருவாக்கலாமே எனவும் எண்ணத் தோன்றியது.

— கவிப்ப்பிரியன்



# உலகக்கிண்ண கிரிக்கெட் செய்திகள்

## பாகிஸ்தானை இந்தியா வென்றது

'Super Six' குழு ஆட்டமொன்றில் 08.06.99 நடைபெற்ற போட்டியானது மிக முக்கிய இடத்தை வகித்துக் கொண்டது. இப்போட்டியில் இந்தியாவும் பாகிஸ்தானும்



மோதிக்கொண்டதால் அதில் ஒரு தனி எதிர்பார்ப்புக் காணப் பட்டதில் வியப்பில்லை. இன்று நேற்றல்ல என்றுமே இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான போட்டியானது எதிர்பார்ப்புகள் அதிகம் கொண்டதாகவே அமைகிறது. வழமைக்கு மாறாக பெருமளவு பார்வையாளர்கள் காணவந்த இப்போட்டியில் இந்திய அணித்தலைவர் அசாருதீன் பூவா தலையா பார்த்ததில் ஜெயித்து தனது அணியைத் துடுப்பாட அனுப்பினார். பெரிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திய டெண்டுல்கரும், ரமேசும் முதல் தடவையாக ஆரம்பசோடியாக களமிறங்கி எதையும் பெரிதாக சாதித்துக்கொள்ளவில்லை. அடுத்துவந்த ட்ராவிட் இத் தொடரில் அபாரமாக ஆடி வருவதுடன் இப்போட்டியிலும் தன்பணியைச் செப்பனிட்டு 61 ஓட்டங்களைப் பெற்றார். அவருக்கு இணையாக அணித்தலைவர் அசாருதீனும் 59 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இதுவே அசாருதீனால் இத் தொடரில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்களாகும். முடிவில் இந்தியா 227 ஓட்டங்களை மட்டுமே பாகிஸ்தானுக்கெதிராகப் பெறமுடிந்தது.

வெற்றியின் இலக்கு அதிகமாக தென்படாததால் பாகிஸ்தான் சுலபமாக வெற்றிபெறும் என எதிர்பார்த்து சயீட் அன்வரும், அப்றிடியும் அதிரடி ஆரம்பத்தை மேற்கொள்ள முனைந்த போதும் அப்றிடி ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்தார். ஆனாலும் சளைக்காத பாகிஸ்தான் முதல் 6 ஓவர்களுக்குள் 40 ஓட்டங்கள் எடுத்த கட்டத்தில் தான் தனது அனுபவத்தைக் காட்டினார் தலைவர் அசாருதீன். அடுக்கடுக்கு பந்துவீச்சை மாற்றினார். பதிலுக்கு விக்கெட்டுகள் விழுந்தன. தளரத்தொடங்கியது பச்சைவர்ண பாகிஸ்தான். கருட்டிவைத்த இந்தியக் கொடிகளோ மீள உயிர்பெற்று உயரத் தொடங்கிய 45.5 ஓவர்களில் பாகிஸ்தான் 180 ஓட்டங்களில் சுருட்டப்பட்டது. கர்நாடக பந்து வீச்சாளர்களே இப்போட்டியில் சகல விக்கெட்டுகளையும் பெற்றது இன்னொரு சிறப்பு. பிரசாத் 5 விக்கெட்டுகள் பெற்று சிறப்பாட்டக்காரனாக தெரிவானார். சிறிநாத்தும் கும்பிளேயும் மூன்று, இரண்டாக மீதியை பங்குபோட்டனர்.

இப்போட்டியை வென்றாலும் இந்தியாவின் அரையிறுதி வாய்ப்பு அதிகம் சாதகமாகவில்லை. இதேபோல் தோற்றாலும் பாகிஸ்தானுக்கு வாய்ப்பு அதிகம் என்ற நிலையே தொடர்ந்தது. ஆனாலும் இவ் வெற்றி தோல்விதான் இரு நாடுகளுக்குமே உலகக்கிண்ண இறுதிப்போட்டி. இவ்வெற்றி மூலம் இந்தியாவை பாகிஸ்தானால் எந்தவொரு உலகப் போட்டி ஆட்டத்திலும் வெற்றி கொள்ள முடியவில்லை என்ற நிலை தொடர்கிறது. இவ்வெற்றியின் கொண்டாட்டங்கள் தென்னிந்தியருக்கே உரித்தானதால் அதன் பிரதிபலிப்பு பெங்களூரில் பிரகாசமாகக் காணப்பட்டது.

## தென்னாபிரிக்காவை தோற்கடித்ததால் அவுஸ்திரேலியா அரையிறுதிக்கு

13.06.99 நடைபெற்ற 'Super Six' குழுவின் இறுதியாட்டமான தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய போட்டியானது அவுஸ்திரேலியாவிற்கு முக்கிய போட்டியாக இருந்தது. ஏனென்றால் வென்றால் அரையிறுதி தோற்றால் மூட்டை முடிச்சுடன் சிட்னி விமானநிலையம். ஆனால் எதுவானாலும் தென்னாபிரிக்கா அரையிறுதியில் தான். இப்படி நிலைமையிருக்க தொடங்கிய போட்டியில் தென்னாபிரிக்கா முதலில் துடுப்பாடத்துணிந்தது. கிப்ஸ் 101 ஓட்டங்களையும், குலினேன் 50 ஓட்டங்களையும் பெற்று பலமான தென்னாபிரிக்கர்களால் 271 ஓட்டங்களை எட்ட முடிந்தது. சோதனையான இலக்கை நோக்கிய கங்காரு தேசத்தவர் ஆரம்பத்தில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறினர். அந்நேரம் அணித் தலைவர் ஸ்ரீவ்வோவும் நலமானியாவின் தனித்துவ இளைஞர் றிக்கி பொயின்டிக்கும் சளைக்காமல் மட்டையால்



சாதித்தனர். தென்னாபிரிக்காவின் திட்டங்கள் தவிடுபொடியாகின. அவுஸ்திரேலியாவுக்கு நம்பிக்கை பிறந்தது. தலைவர் ஸ்ரீவ்வோவ் தன் பொறுப்புக்கு தனிமுத்திரை பதித்தார். மிக விறுவிறுப்பான இறுதி நேரத்தில் இரண்டே இரண்டு பந்துகள் இருக்கும்போது அவுஸ்திரேலியா 5 விக்கெட்டுகளால் வெற்றிவாகைசூடியதோடு அரையிறுதிக்கும் புகுந்துகொண்டது.

ஸ்ரீவ்வோவ் 110 பந்துகளை சந்தித்து 10 நாலுகள், 2 ஆறுகளுடன் ஆட்டமிழக்காமல் 120 ஓட்டங்களுடன் சிறப்பாட்டக் காரனானார். வெற்றியின் உதவிக்கு துணைநின்ற பொயின்டிங் 69 ஓட்டங்களைப் பெற்றார். அத்தோடு 'Super Six' குழுவில் அனைத்துப்போட்டிகளையும் வென்ற ஒரேஒரு தேசம் அவுஸ்திரேலியாவாகும்.

**– பொன் தாமோதரம்**

## அரையிறுதி ஆட்டங்கள்

13.06.99 முடிவுற்ற 'Super Six' போட்டிகளைத் தொடர்ந்து பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து அரையிறுதிக்குத் தெரிவாகியுள்ளன. 16.06.99 பாகிஸ்தானை எதிர்த்து நியுசிலாந்தும் 17.06.99 தென்னாபிரிக்காவை எதிர்த்து அவுஸ்திரேலியாவும் ஆடி வெற்றி பெறுபவர்கள் சரித்திரப் புகழ்பெற்ற லோட்ஸ் மைதானத்தில் 20.06.99 கோப்பைக்கான இறுதியாட்டத்தில் மோதிக்கொள்வர். மொத்தத்தில் இன்னும் மூன்று போட்டிகளுடன் உலகசம்பியன் தெரிவாகிவிடும். இத்துடன் 'Super Six' முடிவுகள் அட்டவணையில் தொடர்கிறது

| நாடு | போட்டி | வெற்றி | தோல்வி | முடிவற்றது | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 5 | 3 | 2 | - | 6 |
| அவுஸ்திரேலியா | 5 | 3 | 2 | - | 6 |
| தென்னாபிரிக்கா | 5 | 3 | 2 | - | 6 |
| நியுசிலாந்து | 5 | 2 | 2 | 1 | 5 |
| சிம்பாவே | 5 | 2 | 2 | 1 | 5 |
| இந்தியா | 5 | 1 | 4 | - | 2 |

### அரையிறுதிக்கு முன்னுள்ள நிலமைகள்

**கூடிய ஓட்டங்களைப்பெற்ற நபர்**

| | |
|---|---|
| ராவிட் | 461 |
| கங்குலி | 379 |
| ஜோன்சன் | 367 |
| ஸ்ரீவ்வோவ் | 342 |
| மார்க்வோவ் | 338 |

**கூடிய விக்கெட்டுகள் வீழ்த்திய நபர்**

| | |
|---|---|
| அலவொட்ட | 20 |
| குளுஸ்னர் | 17 |
| மூன்ராக் | 16 |
| மக்கிராத் | 16 |
| மம்மூட | 13 |

**சதம்போட்டவர்கள்**

ராவிட்
கங்குலி
டெண்டுல்கர்
ஜடேஜா
ஜோன்சன்
மார்க்வோவ்
ஸ்ரீவ்வோவ்
கிப்ஸ்
சயீட் அன்வர்

**சிறந்த விக்கெட் வீழ்த்தியவர்கள்**

| | |
|---|---|
| மக்கிராத் | 5/14 |
| குளுஸ்னர் | 5/21 |
| பிரசாத் | 5/27 |
| றொபின்சிங் | 5/31 |
| மூன்ராக் | 5/33 |

## கனடா மொன்றியலில் மக்லேறன் வெற்றி

13.06.99 அன்று கனடா மொன்றியலில் நடந்து முடிந்த இவ்வருடத்திற்கான ஆறாவது கார் ஓட்டப் பந்தயத்தில் (Formulai) மக்லேறனை ஓட்டிச் சென்ற தற்போதைய சம்பியன் ஷக்கினன் (Hakkien) வெற்றி பெற்றுள்ளார். இது இவருக்கு இவ்வருடத்தில் கிடைக்கும் மூன்றாவது வெற்றியாகும். இப் போட்டியில் ஃபெறாறிக்கு மூன்றாவது இடமே கிடைத்தது. இதனை பிரித்தானியாவின் ஈர்வின் (Irvine) ஓட்டிச்சென்றார். இவ்வெற்றிமூலம் ஷக்கினன் சூமாக்கரை முந்தி முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஷக்கினன் ஓட்டும் மக்லேறன் இரண்டாம் இடத்தையே வகிக்கிறது. முதலிடத்தை ஃபெறாறி வைத்துக் கொண்டுள்ளது. அடுத்தபோட்டி 27.06.99 பிரான்சில் நடைபெறவிருக்கிறது.


ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவில்
தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுப் பணியகம் நடாத்தும்
மாவீரர் நாள்
உதைபந்தாட்ட
சுற்றுப்போட்டி - 1999
காலம்: 20.06.1999 ஞாயிறு
நேரம்: காலை 9.00 மணி
இடம்: STAINES மைதானம்
மேலதிக தொடர்புகட்கு: 01 43 58 11 42



தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துலூஸ்
பெருமையுடன் வழங்கும்
ஒளி விழா
காலம்: 20.06.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 16 மணி
இடம்: Centre Culturel Alban Minville
63, Allees De Bellefontaine,
31100 Toulouse.
Métro: Bellefontaine
Pub Gra.

# 16ம் திகதி அகழ்வு புதைகுழிகளை இனம்காட்டவேண்டாம் என ராஜபக்சவிற்கு மிரட்டல்

சர்வதேசமும் அவதானித்துக்கொண்டிருக்கும் யாழ்குடாவின் செம்மணி புதைகுழிகளின் அகழ்வு எதிர்வரும் 16ம் திகதி சிறிலங்கா அரசினால் ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டதன்படி சர்வதேசப் பார்வையாளர்கள் யாழ். குடாநாட்டிற்குச் சென்றிருக்கின்றனர். புதைகுழியை இனங்காட்டுவதற்காக, யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தியின் பாலியல் வல்லுறவுக் கொலைவழக்கின் முதலாவது எதிரியான லான்ஸ் கோப்ரல் ராஜபக்சவும் இன்று யாழ். நகருக்கு அழைத்துவரப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. புதைகுழிகளைத் தோண்டுவதற்கான குழுவில் சிறிலங்கா அரச சட்டத்தரணியான ஜசந்த கோதகொடவும் கலந்துகொள்கிறார். புதைகுழிகள் தோண்டப்படுவதை மேற்பார்வை செய்வதற்கு மூன்று சர்வதேச அமைப்புக்கள் முன்வந்துள்ளன. யாழ். அழைத்துச் செல்லப்படுவதற்கென ராஜபக்ச போகம்பரைச் சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு கடந்த 13ம் திகதியன்று மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை புதைகுழிகளை இனங்காட்டவேண்டாம் என ராஜபக்சவிற்கு பரவலாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. ராஜபக்சவை யாழ். செல்ல அனுமதிக்கவேண்டாம் என அவரது மனைவிக்கு மிரட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டிருந்தன. இதன் காரணமாக புதைகுழிகளை ராஜபக்ச இனம்காட்டுவாரா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. புதைகுழிகளின் அகழ்வானது 16ம் திகதி ஆரம்பித்து 18ம் திகதி நடைபெறும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் அகழ்வினை சிறிலங்கா அரசு தனது சுயலாபத்திற்காக திசைதிருப்பலாம் எனவும் பரவலாக எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பூநகரி கைப்பற்றும் முயற்சி முறியடிப்பு - புலிகளின்குரல்

பூநகரியை கைப்பற்றுவதற்காக கடந்த பத்தாம் திகதி வியாழக்கிழமை சிறிலங்கா அரசபடைகள் மேற்கொண்ட தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டதாக புலிகளின் குரல் வானொலி நேற்றுக்காலை அறிவித்துள்ளது. இரு அதிகாரிகள் உட்பட 20ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும், விடுதலைப்புலிகள் தரப்பில் 7 போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டதாகவும் தெரிவித்த புலிகளின் குரல், T—52 ரக துப்பாக்கிகளும் கைத்துப்பாக்கிகளும் மீட்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

(32ம் பக்க தொடர்ச்சி)

## ஜேர்மனியில்......

மக்களும் தமது நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும், அதற்கு ஆதரவு வழங்கும் இவ் G-8 நாடுகளின் உதவிகளை எதிர்த்தும் போராட்டம்செய்து வருகின்றனர். இவர்களது அடிப்படைக் கோரிக்கையாக தற்போதைய இவ் G-8 நாடுகளின் அரசுகள் தமது பொருளாதார, இராணுவ உதவிகள் மூலமாக சிறீலங்கா, துருக்கி, ஆபிரிக்க நாடுகளில் அகதிகள் மீண்டும் மீண்டும் உருவாகுவதைத் தடுக்க வேண்டும்.

தொடர்ந்தும் இனவாத அரசுகளாகச் செயற்படும் துருக்கி, சிறீலங்கா பேரு, நைஜீரியா, கமரூன் போன்ற நாடுகளுக்கு தமது பொருளாதார ஒத்துழைப்புக்களை, உதவிகளை வழங்காமல் உண்மையாகவே அங்கு மனித உரிமைகள் மீறப்படுவதைக் கண்டித்து அதனை நிறுத்த முயற்சிப்பதுடன், அந்நாடுகளுக்கு அகதிகளை திருப்பி அனுப்புவதை உடன்நிறுத்த வேண்டும் என்பன முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் உண்ணாவிரதிகள் 12 வது நாளாக (15.06.99) தண்ணீர், விற்றமின்மாத்திரைகள் மட்டும் உட்கொள்ளுவதுடன் தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

இதனை அனைத்து நாட்டு அகதிகள் குழுக்களும் அடங்கிய அமைப்பான சர்வதேச மனித உரிமைகள் மையம், உலகத்தமிழர் இயக்கம்-தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப்பாட்டுக் குழு போன்ற பல அமைப்புக்கள் இணைந்து நடாத்துகின்றன. இதனைத் தொடர்ந்து கோலின் நகரில் 19ம் திகதி சனிக்கிழமை மாபெரும் ஊர்வலம் ஒன்றும் மதியம் 12.00 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைத்து தமிழ் மக்களையும் இதில் பங்கெடுக்கும்படி அமைப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.



(32ம் பக்க தொடர்ச்சி)

## குண்டுவீச்சில்......

தரமாட்டோம் எனவும் கூறியுள்ளார். பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சார்தாஜ் அசீஸ் இஸ்லாமாபாத்திற்கு திரும்பிச் செல்லும்போது எதிர்காலத்தில் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மிகப்பயங்கரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பேச்சுக்கள் இவ்வாறு இருக்க, இந்தியத் தரப்பினர் தொடர்ந்தும் தமது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். கார்கில் பகுதியில் உள்ள இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த டோலோலிங் மலைப்பகுதியை பத்துமணிநேர கடும் சமருக்கு பின்னர் இந்திய இராணுவம் கைப்பற்றியுள்ளது. இந்த சண்டைக்கு மட்டும் இந்தியத் தரப்பில் இருந்து சுமார் 12,000 குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதனிடையே சர்வதேச எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவ உலங்குவானூர்தி ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் இராணுவ அதிகாரிகள் சிலர் உயிரிழந்துள்ளனர்.


## மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி - 1999

தமிழ் மாணவர் அமைப்பினரால் ஜேர்மனியில் நடாத்தப்படவிருக்கும் 1999ம் ஆண்டு மாவீரர் வெற்றிக்கிண்ண மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டிக்கான மாநில தெரிவுப்போட்டி.

**இடம்: Sportanlage Roxel**
**Tilbecker Str-41, 48161 Münster (Roxel)**
**காலம்: 19.06.99 சனிக்கிழமை**
**நேரம்: காலை 10.00 மணி**

போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களையும் வீராங்கனைகளையும் ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் விளையாட்டு மைதானம் நோக்கித் திரளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Pub Gen தமிழ் மாணவர் அமைப்பு—ஜேர்மனி.

தாயகத்தில் அல்லலுறும் எம் தமிழ் உறவுகளின் துயர் துடைக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பெரு நிதிக்கு உதவும் முகமாக

**தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கலைபண்பாட்டுக் கழகத்தினர் வழங்கும்**

## விருதலை இசைத் தென்றல்

தமிழிசை வேந்தன், சங்கீத பூசணம்
**திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்களின்**
தாயகவிடுதலைக் கானங்கள்

**20.06.1999 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணி**
**ரெஜியோ எமிலியாவில்**
**Sala Rejo**
**Via Agosit No: 06, Regio Emilia.**

**27.06.99 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி**
பலர்மோவில் நஷனல் திரையரங்கில்
**Cinema Nazionale,**
**Via emerico amari No: 170 (Politeama)**

மேலதிக தொடர்புகட்கு: 091 225372, 0338 9033319

Pub Gen

*விரைவில்*

கலாநிதி—பேராசிரியர் கு. அரசேந்திரன் எழுதும்

## தமிழர் நடந்த பாதை

**- புதியதொடர்**

புதிய விடியலுடன் இருபத்தோராம் நூற்றாண்டைச் சந்திக்கவுள்ள தமிழினத்திற்கு அதன் முந்தைய வரலாற்றைச் சுருக்கமாய்த் தெரிவிக்கும் அரிய தொடர் இது.

**படிக்கவும்-தொகுக்கவும் தயாராகுங்கள்**

**இத்தொடரின் ஆசிரியர் பற்றி...**

சென்னைக் கிறித்தவக்கல்லூரி
தமிழ்த்துறை பேராசிரியர்

★ முனைவர்
'கம்பராமாயணத்தின் அணி இலக்கணம்' (ஆய்வு)

★ அத்துடன்
1. கால் ஆடிதான் சொல்வரலாறு (மாநில அரசின் பரிசு பெற்றது)
2. உயிர்க்குறல்—பாடல் தொகுதி
3. சொல்வழிப் புதைபொருள்
4. உலகம் பரவிய தமிழின் வேர்—மல் (மாநில அரசின் பரிசு பெற்றது)

ஆகிய நூல்களின் ஆசிரியராவார்.

# காயத்திரி



**210, Rue du Fbg. St. Denis,**
**75010 Paris.**
**Tel: 01 42 09 22 43 - Fax: 01 46 07 09 34**

அனைத்து மீன் வகைகளும்
மரக்கறி வகைகளும் மலிவான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

KING Telecom
தமிழீழம் இலங்கை இந்தியா
Local 45 நிமிடம் N° Vert 32
King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்
92, Rue de Bellville, 75020 Paris (M° :Pyrénées)
Tel.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96
33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tel:03 44 55 41 59 Fax: 03 44 55 42 51
www.kingtelecom.com.





# குண்டுவீச்சில் வாஜ்பாய் உயிர் தப்பினார் போருக்கு தயார் எனவும் அறிவிப்பு

(14.06.99)

கார்கிலில் போர் நடக்கும் பகுதிக்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சென்றவேளை பாகிஸ்தான் தரப்பிலிருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகள் அப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. இப் பீரங்கி குண்டுகளில் சில வாஜ்பாய் இந்தியத் துருப்புக்களுடன் உரையாற்றிக் கொண்டிருந்த இடத்திலிருந்து சற்று தூரத்தில் வீழ்ந்து வெடித்தன. ஆயினும் பிரதமருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. முன்னதாக வாஜ்பாய் படையினரிடம் உரையாற்றுவதற்கு திட்டமிட்ட பகுதியிலே இக் குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன. ஆனால் இந்திய உளவுப் பிரிவினர் முன்னர் திட்டமிட்டபடி அந்த இடத்தில் பிரதமர் உரையாற்றுவதற்கு அனுமதிக்காமல் இடத்தை மாற்றியதன் காரணமாக ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. பிரதமர் வாஜ்பாய்க்கு நிகழ்ந்த சம்பவம் குறித்து ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் ஆழ்ந்த அதிர்ச்சியடைந்துள்ளார்.



கார்கிலில் போரா என்ற பகுதியிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பிரதமர் வாஜ்பாயுடன் பாதுகாப்புத் துறையமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், இந்திய இராணுவத் தளபதி வி.பி.மலிக் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

கடந்த வார இறுதியில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இந்தியத் தலைநகருக்கு வந்து நடாத்திய பேச்சுக்கள் தோல்வியிலேயே முடிந்துள்ளன. இதனையடுத்து போர் வேண்டுமானால் போருக்கும் இந்தியா தயார் என பிரதமர் வாஜ்பாய் தெரிவித்ததுடன் இந்தியாவின் ஒரு துளி இடத்தைக்கூட பாகிஸ்தானுக்கு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஜேர்மனியில் 15வது நாளாக உண்ணாவிரதப் போராட்டம்

கடந்த 04.06.99 தொடக்கம் ஜேர்மனி கேலின் நகர பச்சைக் கட்சி அலுவலகத்தில் பல இளைஞர்கள் அடங்கிய அகதிகள் உண்ணாவிரதப்போராட்டம் செய்துவருகின்றனர்..

எதிர்வரும் 17ம், 18ம், 19ம் திகதி நடைபெறவுள்ள சிறீலங்காவிற்கும் மற்றைய 3ம் உலக நாடுகளுக்கும் உதவி வழங்கும் நாடுகளான G-8 ன் கூட்டத் தொடரினை எதிர்த்தே இப் போராட்டம் கேலின் பச்சைக் கட்சி அலுவலகத்தில், ஆரம்பிக்கப்பட்டது. ஜேர்மனிய தற்போதைய வெளிநாட்டமைச்சர் பச்சைக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது இதில் குறிப்பிடத்தக்கதாகும். இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழின மக்களின் சார்பில், ஆரம்பம்முதல் திரு. மருசலின் ஜெயதாஸ், கம் நகரினைச் சேர்ந்தவர் இருந்து வருகின்றார். கடந்த வெள்ளி முதல், திரு.ரவீந்திரன் தருமலிங்கம் என்பவரும் தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். இவர்களைவிட நைஜீரியா சூர்தின்தான், பெரு போன்ற நாட்டு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## யாழ். குடாவில் புலிகளின் குரல்

விடுதலைப் புலிகளின் வானொலிச்சேவையான புலிகளின் குரலினை தற்பொழுது யாழ்குடாவில் மிகத்தெளிவான முறையில் செவிமடுக்கக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்தவாரம் புலிகளின் குரலில் தமிழ்க்குழுக்களுக்கான மன்னிப்புக்குறித்த விசேட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதாகவும் இவற்றினை குடாநாட்டில் பலர் செவிமடுத்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கிட்டம்மான் 2000 போரெழுச்சி நிதியம் ஆரம்பம்

தமிழீழ தேசத்தில் ஆக்கிரமிப்புச் செய்யும் சிங்களப் படையினருக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் விடுதலைப் புலிகளின் போரணிகளில் கிட்டம்மான் பீரங்கிப் படையணிக்குச் சிறப்பான இடம் உண்டு. கடந்தவாரம் கூட பூநகரியைக் கைப்பற்றும் நோக்கோடு வந்த சிறீலங்காப் படையினரை விரட்டியடித்ததில் கிட்டம்மான் பீரங்கிப் படையணிக்கு சிறப்பான இடம் உண்டு. அவ்வாறான போரணியினை மேலும் நவீனமயப்படுத்துவதற்கு கிட்டம்மான் 2000 நிதியத்தினை பிரான்ஸ் நாட்டில் கடந்த 15ம் திகதி விடுதலைப்புலிகள் ஆரம்பித்துள்ளனர். இந்நிதியத்தின் ஆரம்பம் குறித்து விடுதலைப்புலிகளின் பிரெஞ்சுப் பணிமனை பத்திரிகைச் செய்திக்குறிப்பொன்றினை வெளியிட்டுள்ளது.

21ம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்கும் தமிழீழம் தரை, கடல் பலத்துடன் வான் பலத்தையும் ஒன்றுதிரட்டி தன் விடுதலையைத் துரிதப்படுத்துவதற்காக மாபெரும் போரெழுச்சித் திட்டங்களையும், தேசிய சேவைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துகின்றது. பல்லாயிரம் போராளிகளின் உயரிய தியாகத்தாலும், மக்களின் உறுதிவாய்ந்த பலத்தாலும் கட்டியெழுப்பப்படும் 21ம் நூற்றாண்டுக்கான தமிழர் பாதுகாப்புப் போரணிகளின் பலத்தை அதிகரிக்க பிரான்ஸ்வாழ் தமிழ் மக்கள் உயரிய உன்னதமான பங்களிப்பினை கிட்டம்மான் நிதியம் கோரிநிற்கின்றது. பிரான்சில் வாழும் ஒவ்வொரு தமிழர்களும் தமது நாளாந்த உழைப்பில் சிறுதுளியை அடுத்த நூற்றாண்டுக்கான தமிழர் படையணிக்கு ஒதுக்குமாறு கோருகின்றோம். உங்கள் பங்களிப்புக்கள் வரலாற்றில் முக்கியமான பெரும் சாதனைகள் புரிய உதவும். எமது தாயகமெங்கும் பரவிநிற்கும் சிங்களப்படைகளை விரட்டி கடலையும், வானையும் முழுமையாகப் பாதுகாத்து பட்டினியுடனும், நோயுடனும் துன்பங்களைச் சுமக்கும் மக்களின் முகங்களில் குதூகலங்கள் பிறப்பிப்பதே 21ம் நூற்றாண்டுக்கான தமிழர்களின் பொது இலட்சியமாக அமையட்டும். இவ்வாறு அப் பத்திரிகைச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: உங்கள் தேசியசேவையை ஆற்ற தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 01 43 58 11 42

பாரிஸ் லாசப்பலில்
தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41